
கல்கி


KALKI 11-5-75 60 கா




ஓரியண்ட்
ORIENT
வலிமை மிக்கது
ஓசையற்றது
நம்பிக்கை வாய்ந்தது
ஓரியண்ட் மின்விசிறிகள் நவீன மோஸ்தரில் கட்டப்பட்டுள்ள வீடுகள், ஆபீஸ்கள் மற்றும் அலுவலகங்களின் எழிலுக்கு ஏற்றவாறு இணைந்து பரிமளிக்கும் வகையில் அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளன. உங்களுடைய குறிப்பிட்ட தேவைகளுக்கு தகுந்தவாறு பற்பல விதங்களில் கிடைக்கின்றன—ஸீலிங், டேபிள், டெஸ்க், ஸ்டாண்ட், ஆல் பர்ப்பஸ் மற்றும் எக்ஸ்ஹாஸ்ட் மாடல்கள்.
இந்தியாவின் மிகச் சிறந்த அநுபவமிக்க மின் விசிறி தயாரிப்பாளர்களால் தேர்ந்து அளிக்கப்படும் எல்லாவிதமான ஓரியண்ட் மின் விசிறிகளும் அவற்றின் ஈடிணையற்ற சிறப்புத் தன்மைகளுக்கு இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் பெயர் பெற்றவை.
எல்லா மின்விசிறிகளும் இரண்டு வருட உத்தரவாதம் உள்ளவை.
மிக அதிக அளவில் விற்பனையாகும் பெருமை மிக்க நிறுவனங்கள்.
டெஸ்க் மின்விசிறி
சூப்பர் டிலக்ஸ் டேபிள் மின்விசிறி
டிலக்ஸ் டேபிள் மின்விசிறி
ஆல் பர்ப்பஸ் மின்விசிறி
ஸ்டாண்ட் மின்விசிறி
ஓரியண்ட் விசிறி
உலக முழுவதும் தேர்ந்தெடுக்கப்படுபவை
ஓரியண்ட் ஜெனரல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
தொழிற்சாலைகள் : கல்கத்தா, பரிதாபாத்



இப்போது!
வறுத்தெடுக்கும் கோடை நாட்களில் குளுமையாகப் புதுமலர்ச்சியுடன் விளங்குங்கள்



மற்றொரு மின்வெட்டு! இக் கோடை மிகவும் கடுமையாகவும், வெப்பமாகவும், இருக்கப்போகிறது. ஆனால் கவலைவேண்டாம்; அப்போது குளுமையாகப் புது மலர்ச்சியுடன் விளங்கிட இதோ ஒரு புதிய வழி. நீங்கள் குளித்தவுடன் உடம்பு முழுவதும் ஜான்ஸன்ஸ் மென்தொலேடெட் பவுடரைத் தூவிக்கொள்ளுங்கள். ஜான்ஸன்ஸ் மென்தொலேட்டெட் பவுடரில் மட்டுமே அடங்கியுள்ள **மென்தால்** உங்களுக்குக் குளுமையும் புதுமலர்ச்சியும் அளித்து, கோடையில் உரசுவதால் ஏற்படும் புண்ணிலிருந்தும், வேர்க்குரு-விலிருந்தும் உங்கள் சருமத்திற்கு சுகமளிக்கிறது.

கோடைகால நாட்களைக் குளுமையுடன் கழியுங்கள். ஜான்ஸன்ஸ் மென்தொலேட்டெட் பவுடர் உபயோகியுங்கள்.



ஜான்ஸன்ஸ்*
மென்தோலேட்டட் பவுடர்

75 கோடையில் மென்தால்-குளுமை தரும் ஒரே பவுடர்.

OBM 4320

* Trademark © J&J '75

Johnson & Johnson®

கல்கி

ராக்ஷஸ சித்திரை.28

மே 11 1975

★

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே






"இப்போது எனக்கு
மிகப்பிடித்த
லக்ஸினுள்
மெய்மறக்கும் ஒரு
புதிய நறுமணம்
அடங்கியுள்ளது!"
என்கிறார் மஞ்சுளா
மனமகிழ்ச்சியூட்டும் புதிய நறுமணம் அடங்கிய மென்மையான லக்ஸை நீங்களும் விரும்புவீர்கள். அது சுத்தமானது, மிருதுவானது. உங்கள் மேனியை வழவழப்பாகவும் வனப்புடனும் வைக்கிறது—ஆம் மஞ்சுளாவைப் போன்றே.
LUX
PINK

நெஞ்சுக்கு நீதி ?

மின்வெட்டு காரணமாக ஏராளமான தொழிலாளர்கள் வேலையின்றிப் பாதிச் சம்பளம் வாங்குகிறார்கள். வாழ்க்கைச் செலவுகளை ஈடுகட்ட முடியாமல் குடும்பங்கள் தவிக்கின்றன. வேலூரில் வேலை இழந்தோருக்குச் செய்தது போல் இவர்களுக்கு நிவாரணம் அளிக்க முன்வருவாரா முதல்வர் ?

முழு நிலா விழா எடுக்கிறார் !

பருவமழை பொய்த்ததால் மின்வெட்டு என்று ஏமாற்ற முடியாது. மழை பெய்தாலும் இந்தக் கதிதான் ; மழை பொய்த்தாலும் இந்த நிலைதான். நாலைந்து வருஷங்களாகவே அனுபவித்து வருகிறோம். பருவ மழை பொய்த்தாலும் அனல் மின் நிலையங்கள் சரிவர இயங்கினால் நிலைமை இவ்வளவு மோசமாக இராது. மின் விநியோகத்தில் ஏற்படும் நஷ்டங்களைத் தவிர்த்தாலே எவ்வளவோ மின்சாரம் மிச்சப்படும். ஆனால் மின்வாரியத்திலோ உயர் மட்டத்தில் உள்ள ஆற்றல் குறைவினால் அடிமட்டம் வரை லஞ்ச ஊழல் தாண்டவமாடுகிறது. நிதானத்துக்குப் பேர் போன 'ஹிந்து' பத்திரிகையேகூட மின்வாரியத்தைக் கடுமையாகச் சாடி லாப நோக்குச் சிறிதும் இன்றி அது இயங்குவதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்நிலையை மாற்ற மின் வாரியத்தை அரசின் பிடியிலிருந்து விடுவித்துச் சுதந்திரமாக இயங்கும் கார்ப்பொரேஷன் ஆக்க வேண்டும் என்கிறது.

கல்கி

மலர் 34

இதழ் 41

இதைப் பற்றியெல்லாம் முதல்வர் யோசிக்கிறாரோ இல்லையோ, முழு நிலா விழா கொண்டாடுகிறார் !

சென்னை நகரில் ஒரு லாரி டாங்க் தண்ணீர் நூற்றி ஐம்பது ரூபாய்க்கு வருகிறது. தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்ட ஹோட்டல்காரர்கள் பண்டங்களின் விலைகளை உயர்த்துகிறார்கள். மக்கள் தவிக்கிறார்கள்.

முதல்வர் முழு நிலா விழா எடுக்கிறார்.

எழுபத்திரண்டிலேயே முடிந்திருக்க வேண்டியது வீராணம் திட்டம். இதோ வருகிறது, வந்து கொண்டேயிருக்கிறது என்கிறார்கள். வீராணம் நீரைக் காணோம். மத்திய அரசின் மீது பழியைச் சுமத்திவிட்டு,—

முதல்வர் முழு நிலா விழாவில் ஈடுபட்டிருக்கிறார்.

'வீராணம் திட்டத்தைவிடக் கிருஷ்ணா நதியிலிருந்து நீரைக் கொணர்வது எளிது; இது சம்பந்தமாய்க் காங்கிரஸ் அமைச்சரவையிலேயே திட்டங்கள் வகுக்கப்பட்டுப் பேச்சு வார்த்தைகள் நடந்தன; தி.மு.க. பதவிக்கு வந்தபின் அதனைத் தொடர்ந்து ஆராயாமல் வீராணம் திட்டத்தில் பணத்தைக் கொட்டியுள்ளது' என்கிறார் காமராஜ்.


இறங்குமுகமானதால் கிருஷ்ணா நதியிலிருந்து நீர் எளிதாக வந்திருக்கும். வீராணம் ஏரியிலிருந்து ஏறுமுகமானதால் பல இடங்களில் பிரும்மாண்டமான பம்பு செட்டுகளை வைத்து நீரை உயர் மட்டத்துக்கு ஏற்ற வேண்டும். நிபுணர்கள் இதனைச் சுட்டிக் காட்டுகின்றனர். ஆந்திர அரசு ஒத்துழைக்கவில்லை என்று காரணம் கூறிவிட்டு,—

முதல்வர் முழு நிலா விழா எடுக்கிறார்.

சென்னையில் நீர் விநியோகத்தை முன்னிட்டு ஏராளமான நீரைப் பூமிக்கடியிலிருந்து எடுத்துவிடுவதால் பூமிக்கடியில் கடல் நீர் ஊடுருவி நீரெல்லாம் உப்பாகிவிடலாம் என்று அறிஞர்கள் எச்சரிக்கின்றனர்.

முதல்வர் தமது நூல் வெளியீட்டு விழாவில் ஈடுபட்டிருக்கிறார். புத்தகத்தின் பெயர் நெஞ்சுக்கு நீதி !

சராசரித் தமிழ் மகனின் நெஞ்சுக்கு நீதி — இன்றுவரை கிட்டவில்லை !


மாருதியின் வால்..
மாருதி
எட்டவில்லையே...
மக்கள்
உயரும் விலை
ஆகா, என்ன அழகு! என்ன அழகு!
இந்தியா
வியத் நாமில் தேசிய அரசு

அரிய வாய்ப்பு; நழுவ விடாதீர்!

குஜராத்தில் எதிர்க்கட்சிகளுக்கு அருமையான வாய்ப்பு இருக்கிறது. இதனைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாது போனால் மொரார்ஜி மேற்கொண்ட உபவாசத்துக்கு அர்த்தமே இல்லாமல் போய் விடும்; பயனற்றதாகி விடும்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒருவரையொருவர் குறை சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய தருணம் அல்ல இது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து இணைந்து செயலாற்ற வேண்டிய சந்தர்ப்பம். கருத்து வேற்றுமைகள் இருக்கலாம்; ஆனால் அவற்றை வெளியிட வேண்டிய சமயம் இதுவல்ல. எந்தெந்த அம்சங்களில் கருத்து ஒற்றுமைகள் உள்ளனவோ அவற்றைக் குறித்துப் பேச வேண்டும். முக்கியமாக இந்திரா காங்கிரஸின் உளுத்துப் போன பொருளாதாரக் கொள்கைக்கு மாற்றுத் திட்டம் தயாரித்து மக்கள் முன் சமர்ப்பிப்பது அவசியம்.

இந்திரா அரசின் மீதுள்ள அதிருப்தியே எதிர்க் கட்சிகளுக்குப் பெரும்பான்மை வோட்டு வாங்கித் தந்து விடலாம். ஆனால் எதிர்மறையான அத்தகைய வெற்றி நாட்டுக்கு நலன் பயக்காது. எதிர்க்கட்சிகளிடம் உள்ள ஒற்றுமை, மாற்றுத் திட்டம் இவற்றின் அடிப்படையில் பெரும் வெற்றியே குஜராத்துக்கும் பொதுவில் பாரதத்துக்கும் நல்லது.

வரிச் சலுகை

வரிச் சலுகைகளை அறிவித்திருக்கிறார் ஸி.எஸ். தொழில் துறையில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளதை உணர்ந்து பிரத்யட்ச நோக்குடன் செயல்பட்டதற்காக வாழ்த்துகிறோம். ஆனால் பட்டினி கிடந்து வாடி வதங்கியுள்ள தொழில் துறைக்கு இந்தப் பிராணவாயுப் பிரயோகம் போதாது; நல்ல போஷாக்கு உணவும் டானிக்கும் தேவை. ஸி. எஸ். — டி. ஏ. பாய் இணைப்பு இன்னும் எவ்வளவோ சாதிக்க முடியும்; சாதிக்க வேண்டும்.

வரிச் சலுகைகளால் அரசுக்கு ஏதோ நஷ்டம் என்று எண்ணலாகாது. உற்பத்திப் பெருக்கத்தால் கிடைக்கும் அதிக வரி வருமானம் காண்பிக்கப்படும் வரிச் சலுகைகளை ஈடுகட்டிவிடும். ஏன் அதற்கு மேலேயே கூட அரசுக்கு வருவாய் கிட்டலாம்.

போர் முடிந்தது அமைதி குலைந்தது!

கம்போடியாவைத் தொடர்ந்து வியட்நாமிலும் போர் முடிந்தது. அமைதி பிறந்தது சுபம், சுபம்! அந்நாட்டு மக்கள் பட்ட அவதி ஆயிரம் தலைமுறைக்குப் போதும். இனியேனும் சாந்தியுடன் அவர்கள் காலமெல்லாம் வாழட்டும்.

மனப்பூர்வமாக அவர்களை வாழ்த்தும் போதே கம்யூனிஸ ஆக்கிரமிப்பின் ஆதிக்கமும் ஆசியாவில் வலுப்பெற்றுள்ளதை எண்ணி நாம் வருந்தாமல் இருக்க முடியவில்லை. தாய்லாந்து தென் கொரியா போன்ற பல நாடுகளின் கவலையை ஜனநாயகப் பற்றுள்ளவர்கள் பகிர்ந்து கொள்கிறார்கள். இதற்கு நேர்மாறாக நமது பிரதமர் அமெரிக்காவுக்குப் பாடம் கற்பித்தாகி விட்டது என்று மகிழ்ச்சி பரவசமாகப் பேசுவது விசனத்துக்குரியது. வியட்நாம் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தியானதாகப் பிரதமர் சொல்கிறார். கம்யூனிஸ அடிமை வாழ்வைத்தான் வியட்நாம் மக்கள் விரும்புகிறார்களா? அது யாருக்கு எப்படித் தெரியும்? இப்போதைக்கு யுத்தம் முடிந்து அமைதி ஏற்பட்டால் சரி என்று அவர்கள் பெருமூச்சுவிடுவது ஒன்றைத்தான் உணர்கிறோம்.

தென் வியட்நாமில் ஜனநாயகத்தைக் காப்பதாகக் கூறிக் கொண்டு அமெரிக்கா எதேச்சாதிகாரம் செய்ததாம்; பொம்மை ஜனாதிபதிகளைப் பதவியில் வைத்ததாம்; கூறுகிறார்கள். போர் காரணமாக அத்தகைய நிர்ப்பந்தங்களுக்கு அமெரிக்கா உள்ளானது உண்மைதான். ஆனால் வடவியட்நாமின்,

ராஜாஜி சிந்தனை

கதிமோட்சம் உண்டா ?

அண்டபகிரண்டமெல்லாம் அடங்க ஒரு நிறைவாயிருக்கும் பரம்பொருளின் அகில வியாபகத்துக்கு அறிகுறியாக, அற்புதமான ஆயிரங்கால் மண்டபத்தை நமது முன்னோர் நிர்மாணித்தார்கள். அதைச் சுற்றி இப்போது அவலட்சணமான செங்கல் சுவர் ஒன்று நிற்கிறது. இந்த அவலட்சணத்தை அதிகமாக்குவதற்கு இரும்புக் கேட் ஒன்றும் போட்டிருக்கிறது. இந்த மாதிரி அவலட்சணப்படுத்தியிருப்பதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தேன். ஆயிரக்கால் மண்டபத்தில் வருஷத்துக்கு ஒரு தடவைதான் ஸ்வாமி எழுந்தருளுகிறாராம். மற்ற நாளெல்லாம் சும்மா கிடப்பதால் ஜனங்கள் இயற்கைக் கடன் கழிப்பதற்கு மண்டபத்தை உபயோகித்து வருகிறார்களாம்! ஆயிரக்கால் மண்டபத்தில் செங்கல் சுவரும் இரும்புக் கேட்டும் போட்டிருக்கும் காரணம் இதுதான் என்று அறிந்தபோது சொல்லி முடியாத மனவேதனை உண்டாயிற்று. ''ஐயோ! நமக்குக் கதிமோட்சமும் உண்டா ?'' என்று சந்தேகம் தோன்றியது.

(''பிராகாரத்தில் கண்ட பகற் கனவு'' என்ற கட்டுரையிலிருந்து.)

வியட்காங் கொரில்லாக்களின் ஊடுருவலும் ஹிம்சையும் இல்லாமல் இருந்திருந்தால் தென் வியட்நாம் அமெரிக்க உதவியுடன் எந்த அளவுக்கு வளர்ச்சியடைந்திருக்கும் என்பதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. இவர்கள் தென் கொரியாவின் வளர்ச்சியை, செல்வச் செழிப்பைச் சிறிது கவனிக்கட்டும்.

முப்பெருமைகளும் மேலும் ஒன்றும்!

ஒரு மனிதர் சாதாரணமாக ஒரு பெருமை அடைந்தாலே 'ஓ! அப்படியா!' என்று வியந்து போற்றுவோம்! அவ்வாறிருக்க மூன்று பெருமைகளை அடுத்தடுத்துப் பெறுவதென்றால் — அதுவும் ஏற்கனவே பலப் பல சிறப்புக்களைப் பெற்றுள்ள ஒருவர் புதிதாக முப்பெருமைகளை அடைவதென்றால் — மூக்கின் மேல் விரலை வைத்தால் காணாது. குறைந்த பட்சம் மூன்று விரல்களையாவது வைத்துவிட வேண்டியதுதான்!

பத்து அங்கங்களைக் கொண்ட அனார்கலி நாடகத்தை ஸம்ஸ்கிருதத்தில் இயற்றினார் டாக்டர் வே. ராகவன். புதிய சம்ஸ்கிருத ஆக்கங்களுக்கு ஆண்டுதோறும் உத்தரப் பிரதேச, மத்தியப் பிரதேச அரசுகள் காளிதாஸர் பெயரால் பரிசுகள் வழங்கி வருகின்றன. இந்த இரட்டைப் பரிசுகளையும் டாக்டர் வே. ராகவனின் அனார்கலி தட்டிக் கொண்டு போயிற்று. இது பெருமை நம்பர் ஒன்று!



இதை அடுத்து டாக்டர் ராகவனைப் புது தில்லி அழைத்துக் கௌரவித்தது. கல்வி இலாக்காவைச் சார்ந்த ராஷ்ட்ரிய — ஸம்ஸ்கிருத சம்ஸ்தானம் கல்வி அமைச்சர் யாதவ் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடத்தியது. வாழ்த்து மடலை அமைச்சர் திரு டி. ஏ. பாய் வழங்கினார். ஸம்ஸ்கிருதத்துக்கும் சங்கீதத்துக்கும் டாக்டர் ராகவன் ஆற்றியுள்ள பணிகள் போற்றப்பட்டன.

மூன்றாவது சிறப்புக் கிட்டியது திருப்பதியில். அங்கு கல்வி இலாகாவினால் நடத்தப்படும் கேந்திரிய சம்ஸ்கிருத வித்யாபீடத்தின் இரண்டாவது தலைவராக விளங்கியவர் டாக்டர் ராகவன். அவரது உருவப் படத்தைத் தமிழக கவர்னர் திறந்து வைத்துப் பேசினார்.

இந்த மூன்று பெருமைகளுள் அடங்காத, இம்மூன்றைவிடச் சிறந்ததான நான்காவது பெருமையும் ஒன்று உண்டு. அதனைத் தனித்துத்தான் குறிப்பிட வேண்டும். இருநூறாவது ஜெயந்தி கொண்டாடப்படும் தீட்சிதரின் வாழ்க்கையையும் கிருதிகளையும் வைத்து சம்ஸ்கிருதத்தில் 'மகா காவியம்' ஒன்றினை முன்னர் எழுதினார் டாக்டர் வே. ராகவன். இதனைப் பார்வையிட்ட காஞ்சி முனிவர் 'கவி கோகிலம்' என்ற விருதினை ராகவனுக்கு அருளினார்.

கவி கோகிலத்தின் குயிலோசை சம்ஸ்கிருத அன்பர்களின் இதயங்களைக் குளிர்விக்கட்டும்.

அங்கு நிகழும் அற்புதம்!

மேற்கு ஜெர்மனியில் கிட்டத்தட்ட பத்து லட்சம் பேர் வேலையின்றித் தவிப்பதாக அண்மையில் தெரிய வந்தது. உடனே அரசாங்கம் தனியார் நிறுவனங்களுக்குச் சில சலுகைகளை அறிவித்தது. புதிதாகப் பலரை வேலைக்கு எடுத்துக்கொள்ளுங்கள். முதல் ஆறு மாதத்துக்கு அவர்கள் சம்பளத்தில் அறுபது சதவீதத்தை அரசு கொடுத்துவிடும் என்றது. வேலை கிடைக்கும் இடத்துக்குப் போக வேலையற்ற மக்களுக்குப் பிரயாணப் படி தந்தது. தனியார்த் துறை ஸ்தாபனங்களிடம் உற்பத்திப் பெருக்குக்கும் வேலை வாய்ப்புக்கும் உதவும் புதிய இயந்திரங்களைக் குறிப்பிட்ட காலத்துக்குள் நிறுவுங்கள். இதற்கான முதலீட்டுச் செலவில் 7.5 சதவீதத்தை அரசு ஏற்கும் என்றது. விளைவு வேலையில்லாத் திண்டாட்டம் கணிசமாகக் குறைந்து போயிற்று.

இப்படித் தனியார் துறையை ஊக்குவித்து நாட்டு வளத்துக்குப் பயன்படுத்திக்கொள்ளும் பொருளாதார சாணக்கியத்தைப் பெற்றுள்ளது மேற்கு ஜெர்மானிய அரசு.

எண்ணெய் விலை உயர்வால் மிகவும் பாதிக்கப்பட்டது மேற்கு ஜெர்மனி. பொருளாதாரமே நிலைகுலைந்துவிடுமோ என்று பலர் அஞ்சினர். ஆனால் அரசிடமிருந்து ஊக்கமும் உற்சாகமும் பெறும் அந்நாட்டின் தனியார் துறையினர் தேசத்தைக் கைவிடவில்லை. ஜெர்மனிக்கு எண்ணெய் அனுப்பி வைக்கும் நாடுகளுக்குத் தங்கள் ஏற்றுமதியை அதிகரித்தனர். ஓர் ஆண்டில் ஏற்றுமதி ஐந்து சதத்திலிருந்து எட்டுச் சதமாக உயர்ந்தது. அதே நேரத்தில் எண்ணெயைப் பயன்படுத்தும் அளவும் ஜெர்மனியில் கணிசமாகக் குறைந்தது. 'இப்போது அராபிய எண்ணெய் விலை உயர்வா? அதனால் என்ன?' என்று கேட்கக்கூடிய நிலைக்கு வந்துவிட்டது.

நாடகக் கலை நசிவதா?

சென்னையில் உள்ள நாடகக் குழுவினர் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட தொழிற்சங்க பாணிதான். சபாக்கள் ஒன்று சேர்ந்துகொண்டு இந்த நாடகக் குழுக்களை வாழ விடாமல் வருத்துகின்றனர் என்பது இவர்கள் குறை.

'எங்களுக்கு லாபம் வேண்டாம். ஆகிற செலவைக் கொடுங்கள்' என்று கணக்குக் காண்பித்தாலும் கூட அதிலும் ஐம்பது நூறு குறைத்து ரேட் பேசுகிறார்கள் சபா நிர்வாகிகள் என்கின்றனர் நாடகக் குழுவினர்.

சபாக்கள் நாடகக் கலையை வளர்க்கத்தான் இருக்கின்றன, நசுக்குவதற்கல்ல என்பதை இரு தரப்பினரும் மறக்கக் கூடாது.

இது போகத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் நாடகக் குழுவினரிடம் நடந்து கொள்ளும் முறை வெட்கக் கேடானது. பொன் விழாக் கொண்டாடிச் சக்கைப்போடு போட்டுக் கொண்டிருக்கும் ஒரு நகைச்சுவை நாடகத்தின் திரைப்பட உரிமையை இரண்டாயிரம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறது ஒரு திரைப்பட நிறுவனம். ஆம்! இரண்டாயிரம்தான்! நம்புங்கள். இரண்டாயிரமேதான்!

முருகப்பெருமான் ௨



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய ஸ்வாமிகள்

சரீரத்துக்கு மத்தியில் இருதயம் ஒன்றாக இருக்கிறது. ஆனால் அதையும் இந்தப் பாதி அந்தப் பாதி என்று விபாகம் பண்ணலாம். இந்த இருதய மத்தியில் ஓர் அணு இருக்கத்தான் செய்கிறது. அணு என்றுகூட அதைச் சொல்ல முடியாது. அணுவையாவது ரொம்பவும் நுண்ணிய மைக்ராஸ்கோப் வைத்துப் பார்த்து விடலாம். உடனே மானசிகமாகவாவது அதில் இரு பக்கங்களைப்பங்கு போடலாம். இருதய மத்தியில் இருக்கிற இதையோ எந்த சூட்சுமதரிசினியாலும் காண்பிக்க முடியாது. ஆனால் இது இல்லாவிட்டால் மநுஷ்யனுக்கு எண்ணமே இல்லை, உணர்ச்சியே இல்லை.

இது என்ன? மனசு. மனசு என்கிறோமே அதுதான். எந்த எக்ஸ்-ரேயிலாவது அதைக் காட்ட முடியுமா?

அர்த்தநாரீச்வர மனசு எப்படி இருக்கும்? அதில் பரமப் பிரேமை என்கிற ஓர் எண்ணம் தவிர வேறெதுவும் இராது. அதைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்கிறார் கவி.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

என்கிறார் திருமூலர். அந்த அன்பைத் தெரிந்து கொண்டு விட்டால், அப்புறம் நம் மனசும் நாலாயிரம் திசையில் ஓடாது; அன்பிலேயே மூழ்கிக் கரைந்து அன்பாகவே ஆகிவிடும். அருணகிரிநாதர் பெற்ற அநுபூதி இதுதான்.

பரமேச்வரன் ஸத் (Matter), அம்பாள் சித் (Energy) என்ற ஸயன்ஸ் சூத்திரங்களால் நமக்கு என்ன பிரயோஜனம்? நம்மைக் கடைத்தேற்றப் போவது அவர்களது இந்த அன்புதான், அருள்தான்.

இருவருடைய அன்பும் பொங்கிப் பெருகிக் கலந்த இடம்தான் அவர்களுடைய செல்லப் பிள்ளையான சுப்பிரமண்யர். 'செல்வ முத்துக்குமரன்' என்றே வைத்தீச்வரன் கோயிலில் அவருக்குப் பேர். உள்ளே ஒன்றாக இருந்த அன்பு இரண்டாகப் பிரிந்து, மறுபடியும் ஒன்றாகக் கலந்து இப்படி நாம் உபாஸிப்பதற்குச் சுலபமாக சுப்ரமண்யமாக மூர்த்திகரித்திருக்கிறது.

அவர் மகா தேஜஸ்வி; பரம பராக்கிரமசாலி; எவராலும் ஸம்ஹரிக்க முடியாத சூரன், தாரகன் முதலான அசுரர்களை வெல்லவே தோன்றிய மகா சக்திமான். சக்திவேல் என்றே சொல்கிறோம். ஆனால் இந்தப் பராக்கிரம சக்தியோடு அருட்சக்தியாக இருப்பதே அவருடைய விசேஷம்.

அறிவுச் சக்தியாகவும் இருக்கிறார். 'ஞான பண்டிதன்' 'ஞான ஸ்கந்தன்' என்பார்கள். ஆதி குருவான தகப்பனாருக்கே உபதேசம் பண்ணி, அமரத்தில் சொன்ன ''ஸ்வாமி'' என்ற பெயரைத் ''தகப்பன்சாமி''யாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்! அந்த ஸ்தலத்துக்கு 'ஸ்வாமிமலை' என்றே பெயர். அவர் ஸ்வாமிநாதனாக அங்கே நிற்கிறார்.

செல்லப் பிள்ளை! அதனால் தன்னைக் காட்டிலும் இந்தப் பிள்ளையை எல்லா அம்சங்களிலும் பெரியவனாக்கிக் காட்டிப் பூரித்துப் போகிறார் பரமேச்வரன். 'என்னைவிட இவன் ஞானி' என்று பிள்ளையிடமே குழைந்து பிரணவோபதேசம் வாங்கிக் கொள்கிறார். 'தாரகன், சூரன் இவர்களுடைய வர பலத்தால் நான் அவர்களை அழிக்க முடியாது. என்னாலும் முடியாததைச் செய்ய, என்னை விடப் பெரியவனாக ஒருத்தன் வர வேண்டும்' என்றே இந்தப் பிள்ளையைப் படைத்தார். 'எங்கேயும் தனக்கு வெற்றியைத்தான் விரும்ப வேண்டும்; ஆனால் பிள்ளையிடத்தில் மட்டும் தோல்வியை விரும்ப வேண்டும்' (புத்ராத் இச்சேத் பராஜயம்) என்பார்கள். பரமேச்வரனுக்கே இப்படித்தான் இருந்திருக்கிறது. தாமே அம்பாளோடு சேர்ந்து பிள்ளையாக வந்தார். என்றாலும், இப்போது வீரம், ஞானம், லாவண்யம் எல்லாவற்றிலும் முன்னைவிட அதிகமான பிரகாசத்தை எடுத்துக்கொண்டார்.

லாவண்யத்தைச் சொன்னேன். காம தகனம் ஆனபின், காமன் திமிரோடு பிரயோகம் செய்த அதே கரும்பு வில், மலர்ப் பாணங்களை அம்பாள் எடுத்துக் கொண்டு அடக்கத்துடன் ஈச்வரனிடம் வந்து அன்போடு அவரைப் பார்த்துக் ''காமாக்ஷி''யானாள். வில்லையும் அம்பையும் அவர் பாதத்தில் அர்ப்பணம் செய்தாள். அதன் விளைவாகவே ஜனித்த குமாரன் இவன். இப்போது பார்த்தால், இவனே ஈச்வரன் பொசுக்கின மன்மதனுக்கும் மன்மதனாக இருக்கிறான். தமிழில் 'காமவேள்' 'செவ்வேள்' என்று மன்மதன், முருகன் இருவருக்கு மட்டுமே 'வேள்' என்ற பதத்தைப் பொருத்துகிறார்கள்.

'முருகன்' என்றாலும் அழகானவன், என்றும் இளமை நலம் மாறாத ஸௌந்தரியம் வாய்ந்தவன் என்பதே அர்த்தம்.

அது வெறும் சரீர அழகில்லை. அருளின் அழகுதான் தேஹ காந்தியாயிருக்கிறது. பரமேச்வரன் இப்போது அம்பாள் சம்பந்தத்தோடு குமாரனாக உற்பவித்திருக்கிறபோது அருளிலும் முன்னைவிட அதிகப் பிரகாசத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார். (தொடரும்)

1932-ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது.

“இது என்ன அக்கிரமம்! கேள்வி கேட்பார் இல்லையா?” என்று சிறிக் கொண்டே கையிலிருந்த டெலிஃபோன் பில்லைத் துரைசாமி வீசவும் அவர் மனைவி காந்திமதி உள்ளேயிருந்து ஹாலுக்கு வரவும் சரியாக இருந்தது.

“என்ன அக்கிரமம் நடந்துவிட்டது?” என்று இதமாகவே கேட்டவள் கீழே கிடந்த பில்லை எடுத்துப் பார்த்தாள்.

“ஓ! இதுவா?.... உங்களுக்கு டெலிபோனில் பேசும்போது அதற்கு ‘மீட்டர்’ என்று ஒன்று இருக்கிறது என்பதே மறந்து போய்விடுகிறது. என்னவோ மொட்டை மாடியில் உலவிக் கொண்டே பக்கத்து வீட்டுக்காரருடன் நிதானமாக வம்பு பேசுவதுபோல, டில்லியில் உள்ள உங்க அண்ணா கூடவும், பம்பாயில் இருக்கும் பெண்ணுடனும் பேசுகிறீர்கள்.....” என்றாள்.

“ஏன், நீ மட்டும் என்னவாம்? அன்றைக்குச் சித்தூரில் உள்ள உன் சிநேகிதிக்கு ஆவக்காய் அனுப்பும்படி சொல்ல ‘டிரங்கால்’ போட்டு அரை மணி நேரம் பேசித் தள்ளினியே! அதற்கும் சேர்த்துத்தான் பில்லில் பணம் ஏறுகிறது” என்று இரைந்தார் துரைசாமி.

ஃஃஃ

டிரங்கால் பேசும்போது குஷியாக இருக்கிறது. பில் வரும்போது ‘ஷாக்’ அடிக்கிறது. அதுவும் எஸ். டி. டி. என்ற நேரடி இணைப்பு வந்த பிறகு தம்பதிகளிடம் மட்டுமின்றிப் பல காரியாலயங்களிலும் நிர்வாகிகளுடைய ஆத்திரத்துக்கு ஆளாகிறது டெலிஃபோன் பில். எனவே டெலிஃபோன் பில் தயாராகும் விதத்தைச் சற்று ஆராயலாம் என்று தீர்மானித்துச் சென்றேன்.


ஃஃஃ

நம் வீட்டிலோ காரியாலயத்திலோ இருக்கும் ஒவ்வொரு தொலைபேசிக்கும் அதற்கு அளிக்கப்பட்டிருக்கும் எண்ணுக்கு இணையாகச் சம்பந்தப்பட்ட ‘எக்சேஞ்’சில் ஒரு மீட்டர் இருக்கிறது. நம்முடைய ‘அழைப்புக்கள்’ அனைத்துமே இந்த மீட்டர் மூலம்தான் இயங்குகிறது. உள்ளூர் அழைப்புகளில் நாம் கூப்பிட்டு மறு முனையில் உள்ளவர்கள் போனை எடுத்துவிட்டால் எவ்வளவு நேரம் பேசினாலும் நமது போன் நம்பருக்கான மீட்டரில் ஓர் எண்தான் ஏறும். ஆனால் நீங்கள் பம்பாய்க்கு நேரடியாக டெலிபோன் செய்கிறீர்களே அப்போது பம்பாய் போன் நம்பரைச் சுற்று முன் அதற்கு அடையாள எண்ணான 022 என்ற எண்ணைச் சுழற்றுகிறீர்கள் அல்லவா? மதுரை என்றால் 9452 என்ற நம்பர்களை முதலில் சுற்றுவீர்கள். இந்த ஆரம்ப நம்பர்களுக்கான மின் இணைப்பு அந்த அந்த டெலிபோன் எக்சேஞ்சுகளில் உள்ள விசேஷ கடிகாரத்தின்

■ டெலிஃபோன் அழைப்புக்களைப் பதிவு செய்யும் மீட்டர்.



■ கம்ப்யூட்டர் இயங்கிக் கொண்டிருக்கிறது.



ஹலோ

அலைவுகளுடன் சம்பந்தப் பட்டிருக்கிறது. இந்த இரண்டு ஊர்களும் சென்னையிலிருந்து வெவ்வேறு தூரங்களில் இருப்பதால் தொலைபேசிக் கட்டணங்களும் வெவ்வேறாக இருக்கும். பம்பாய்க்கு 022 சுற்றிப் பிறகு பம்பாயில் உள்ள நபரிடம் பேசும்போது, உங்கள் மீட்டரில் இரண்டு விநாடிகளுக்கு ஓர் எண்ணிக்கை ஏறுகிறது. மூன்று நிமிடங்கள் நீங்கள் தொடர்ந்து பேசினால் தொண்ணூறு எண் மீட்டரில் ஓடி விடும். அதாவது உள்ளூரில் நீங்கள் தொண்ணூறு ‘லோக்கல் கால்கள்’ போடுவதும் பம்பாயில் உள்ளவரிடம் மூன்று நிமிடங்கள் பேசுவதும் ஒரே செலவுதான்! மதுரையில் உள்ளவர்களிடம் பேசும்போது மூன்று நிமிடங்களுக்கு முப்பது எண்கள்தான் ஏறுகின்றன. ஏனெனில், மதுரை முந்நூறு மைல் தூரத்தில்தானே இருக்கிறது. இது காலை எட்டு மணியிலிருந்து மாலை ஏழு மணி வரையிலான விகிதம். மாலை ஏழு மணியாகியதும் அந்த விசேஷக் கடிகாரத்தில் உள்ள இணைப்புக்கள் எண்ணிக்கையின் வேகத்தைச் சரி பாதியாகக் குறைக்கின்றன.

கம்ப்யூட்டரா?

★ ★ ★

சென்னை நகரில் டெலிபோன் வைத்திருப்ப வர்கள் சுமார் எண்பதாயிரம் பேர். ஏறத் தாழத் தினசரி ஏழாயிரம் டிரங்கால் இணைப் புக்கள் வேண்டுகிறார்கள். டிரங்கால் கட்ட ணங்கள், டெலிஃபோன் வாடகை, 'போனோ கிராம்' கட்டணங்கள் போன்ற அத்தனை விவரங்களையும், தனித் தனி சந்தாதாரர் களின் கணக்கில் இணைத்து பில் தயார் செய்ய 1973ம் ஆண்டு மத்தியிலிருந்து டெலிபோன் இலாக்கா கம்ப்யூட்டரின் உத வியை நாடியிருக்கிறது.

கம்ப்யூட்டரை உபயோகப் படுத்துவதற்கு முன் அதற்கு வேண்டிய விவரங்களை, பிரத்தி யேகமான அட்டைகளில் விசேஷ யந்திரங் களைக் கொண்டு 'பஞ்ச்' செய்துகொள் கிறார்கள். பிறகு இந்த வெவ்வேறு விவரங் களைக் கொண்ட அட்டைகளின் அமைப்பை கம்ப்யூட்டரின் டேப்புக்களில் பதிவு செய்து கொள்கிறார்கள். அந்தக் காந்த கம்ப்யூட்டர் டேப், கம்ப்யூட்டருடன் இணைந்து செய லாற்றும்போது சாமர்த்தியமாக ஒவ்வொரு டெலிபோன் சந்தாதாரருக்கும் உரிய விவரப் பட்டியல்களையும் வசூலிக்க வேண்டிய தொகைகளையும் தொகுத்துத் தனித் தனி 'பில்' ஆக டைப் செய்து கொடுத்துவிடுகிறது. ஒரு மணி நேரத்தில் ஆயிரத்து இருநூறு பில்களைத் தப்பிதமில்லாமல் தயாரித்துக் கொடுத்துவிடக் கூடிய ஆற்றல் இந்தக் கம்ப்யூட்டருக்கு உண்டு.

பொதுவாக முந்திய நான்கு காலாண்டு களுக்கான பில் தொகைகளையும் இந்தத் தொகுப்பு அட்டைகளில் அடித்து வைக் கிறார்கள். நடப்பு காலாண்டுக்கு வரும் பில் தொகை அதிக வித்தியாசம் இல்லாமல் இருக் கிறதா என்று கவனித்துக் கொள்ள இது உதவுகிறது. மிகுந்த வித்தியாசம், அதிக பட்சமாகவோ, குறைவாகவோ இருந்தால் அந்த 'பில்லை' நிறுத்தி வைத்துக் கொண்டு மீண்டும் ஆரம்ப முதல் எல்லாக் குறிப்புக் களையும் பரிசோதித்துத் திருப்தியடைந்த பிறகே பில்லை வாடிக்கையாளர்களுக்கு அனுப் புகிறார்கள். ஆகவே, இந்தக் கம்ப்யூட்டரின் உபயோகம் வந்த பிறகு, மனித உழைப்பால் நேரிடும் தவறுகள் குறைந்திருக்கின்றன. டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நான்கு பெரிய நகரங்களிலும் இப்போது டெலிபோன் இலாக்கா கம்ப்யூட்டரின் உத வியை நாடியிருக்கிறது.

ஓர் அசுரனைப் போல் இயங்கினாலும் கம்ப்யூட்டர் நமது அடிமை. எதிர்காலத்தில் இன்னும் எத்தனையோ அற்புதங்களைச் சாதிக் கப்போகும் அன்பன்.

— கோமதி சுவாமிநாதன்





■ அந்த நாளைய டெலிஃபோனும் இன்றைய அற்புதமும். நவீன ஃபோன் மூலம் கம்ப்யூட்ட ருடன் நேரடித் தொடர்பு கொண்டு தகவல் களை அதில் சேமிக்கலாம்; அல்லது கோரிப் பெறலாம். மேற்கு ஜெர்மானிய தயாரிப்பு.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

செலவில்லாமல்.....

பெட்ரோல் விலை உச்சாணிக் கொம்பில் ஏறியுள்ள காலத்தில் செலவில்லாமல், மணிக்கு 60 மைல் வேகத்தில் போகக் கூடிய சைக்கிளைக் கண்டு பிடித்திருக்கிறார் காலிஃபோர்னியாவைச் சேர்ந்த டெரிக் என்பவர். இந்தச் சைக்கிள் அழுத்தமான காற் றடைத்த சிலிண்டர் ஒன்றிலிருந்து சக்தியை உப யோகித்து ஓடுகிறது. வெறும் காற்றுதான். வேறு செலவு ஏதும் இல்லை!

நன்றி: சயன்ஸ் டைஜஸ்ட்
அனுப்பியவர்: ஜெயஸ்ரீ விசுவநாத்

புதிய திட்டம்

கார்பொரேஷன் பாங்க் அளிக்கும்

க்ஷேமநிதி

ரொக்கப் பத்திரங்கள்



உங்கள் சேமிப்பு 84 மாதங்களில் இரண்டு மடங்காக வளர்கிறது

விலைவாசி 'கிடு கிடு' வென்று ஏறும் இந்நாட்களில் வீண் செலவுகளைக் குறைத்து வருவாயைக் கண்காணித்து சேமிப்பு செய்வதுதான் ஒரு குடும்பத்தின் சிறந்த நிர்வாகமாகும். விலைவாசியும் கட்டுக்கடங்கும்.

கார்பொரேஷன் பாங்க் உங்கள் நன்மைக்கென்றே புதியதொரு திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. க்ஷேமநிதி ரொக்கப்பத்திரங்கள். குறைந்தபட்சம் ரூ. 100 முதலீடு செய்யலாம். கைநிறைய வட்டி. பாதுகாப்பு. கடன் வசதிகள். குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகாலத்திற்கு முதலீடு செய்யலாம்.

84 மாதங்களில் உங்கள் சேமிப்பு இரண்டு மடங்காக வளர்கிறது. சிறு சேமிப்பு, குழந்தைகள் நலனுக்கான சேமிப்பு, பாதுகாப்பு நிதிகள் மற்றும் கூட்டு ஸ்தாபனங்களின் உபரி வருமானம். கம்பெனி பாதுகாப்பு நிதி. இவையனைத்தையும் கார்பொரேஷன் பாங்கின் க்ஷேமநிதி ரொக்கப் பத்திரங்களில் முதலீடு செய்யலாம்.

—நேசமனப்பான்மையுடன் விளங்கும் வங்கி


ESTD. 1906

கார்பொரேஷன் பாங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: உடுப்பி நிர்வாக அலுவலகம்: மங்களூர்

mas/CBL/88

பக்தியை ஊட்டும் பஞ்சாட்சரம்!





- கோடி அர்ச்சனையில் மத்திய நிதி அமைச்சரும் பங்கேற்கிறார். பக்கத்தில் திரு என். மகாலிங்கம்.
- சுவாமி அபேதானந்தர்.

பொள்ளாச்சி நகரமே புனித பக்திப் பெரு வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. ஐந்து ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்திருக்கும் சக்தி நிலையம் மாளிகை பெரும் பந்தல்களும், மகர தோரணங்களும், வாழை மரங்களும் அணி செய்யத் தெய்விகத் திருவிழாக் கோலம் பூண்டு திகழ்ந்தது. நெற்றியில் திருநீறும், இடையில் 'கோடி அர்ச்சனைப் பெருவிழா; ஓம் நமச்சிவாய' என்று அச்சடித்த மஞ்சள் நிற ஆடையும் அணிந்து ஆண்மணிகள் வரிசை வரிசையாக வந்த வண்ணமா யிருந்தனர்; மங்களம் பொங்கும் மஞ்சள் பூசிக் குளித்து, ஈரக் கூந்தலை நுனியில் முடிந்து, தலையில் பூச்சூடி, வண்ண வண்ணப் புடவைகளுடன் வந்த பெண் மணிகள் சக்தி நிலையத்தை உண்மையிலேயே சக்தி நிலையமாக்கி விட்டனர்!

இந்தக் கோடி அர்ச்சனைப் பெரு விழாவுக்காகவே திருவனந்தபுரத்திலிருந்து 480 மைல்களை நாற்பத்தொரு நாட்களில் கால் நடையாகவே கடந்து வந்த சுவாமி அபேதானந்தர் இருபத்தொரு நாட்கள் கோடி அர்ச்சனைப் பெரு விழாவை நடத்திவைத்தார்.

பொள்ளாச்சித் தொழிலதிபர் திரு என். மகாலிங்கம், தம் இல்லமாகிய சக்தி நிலையத்தில் தெய்விகப் பெரு விழாவை நடத்தி அதில் பங்கு பெறுவதற்காக அறிஞர்களையும், கலைஞர்களையும், வேத சாஸ்திர விற்பன்னர்களையும் அழைத்து ஒரு வித்வத் சபை கூட்டினார்.

சக்தி நிலையத்தில் பக்தி வெள்ளம் பிரவாகமாய் ஓடியது. சொற்பொழிவு மேடையில், ஞான, தத்துவ, வேதாந்தப் பெருமழை பொழிந்தது. கோடி அர்ச்சனை நடந்த தெய்விகக் கூடத்தில் சிவகாம சுந்தரி சமேத ஆனந்த சிற்சபேசனின் ஐம்பொன் வடிவம் குத்து விளக்குகளின் அடக்கமான ஒளியில் ஞானச் சுடராய் ஒளிர்ந்தது. சுவாமி அபேதானந்தர், 'ஓம் ஹ்ரீம் நமச்சிவாய' என்னும் பஞ்சாட்சர மகா மந்திரத்தைச் சொல்ல, வரிசை வரிசையாய் அமர்ந்திருக்கும் ஆண்களும் பெண்களும் (நூறு பேர்கள்) அதை அடுத்துச் சொல்லி ஜோதி வடிவங்களாக விளங்கும் குத்துவிளக்குகளைப் புஷ்பங்களால் அர்ச்சித்தார்கள். இருபத்தொரு நாட்கள் இத் தெய்வப் பணி தொடர, திரு என். மகாலிங்கம் ஏற்பாடு செய்திருந்தார்.

சக்தி நிலைய மாளிகையில் இனம்பிய பஞ்சாட்சர மகா மந்திர ஒலி பொள்ளாச்சி நகர வானவெளியை எட்டி, பின்னர் நாடெல்லாம் பரவ நலன் விளையும்.

— விஜயம்

அம்பேல்!



நாகர்கோவிலில் ஒரு வாசகசாலையில் தமிழ் வாராந்தரப் பத்திரிகை ஒன்றில் தமிழ் நாடு செய்தி மக்கள் தொடர்புத் துறையால் முழுப் பக்க அளவில் தி.மு.க. அரசின் சாதனைப் பட்டியல் வெளியிடப்பட்டிருந்ததைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அதில் அநேக சாதனைகள் வரிசையாக வெளியிடப்பட்டிருந்தன. கடைசிச் சாதனையாக யாரோ ஒரு குறும்புக்கார வாசகர் தமது பேனாவினால் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தார்.

''மக்களுக்கு மிகவும் இன்றியமையாத தேவைகளான உணவும், தண்ணீரும், மின்சாரமும் அம்பேல்.'' — ஹட்சன்

மனமிருந்தால் வழியுண்டு சேமிக்க

சம்பள தினம் என்ன? எந்த நாளிலும் சேமிக்கலாம், மனம் மட்டும் இருந்தால். சந்தேகமே இல்லை.

சேமிக்கத் தீர்மானியுங்கள். (இன்றே இதைச் செய்யலாமே) சேமிக்கும் தொகையை தபால் நிலைய ரிகரிங் டெபாசிட் கணக்கில் போடுங்கள். மாதம் 10 ரூபாய் போட்டு வந்தால் கணக்குத் தொகை 5 ஆண்டுகளில் 750 ரூபாயாக வளரும். அதாவது, உங்கள் பணத்திற்கு 9.25% தொடர் வட்டி கிடைக்கும்.

நீங்கள் 2 ஆண்டுகள் சீராகச் சேமித்தால் சிறியதொரு இன்ஷ்யூரன்ஸ் வசதியும் கிடைக்கும்: கணக்கு வைத்திருப்பவர் ஒருவேளை அகால மரணம் அடைந்தால், மேற்கொண்டு பணம் செலுத்த வேண்டிய அவசியமின்றி, கணக்கின் முழுத் தொகையான 750 ரூபாயும் அளிக்கப்படும்.

விவரங்களுக்கு
அருகிலுள்ள
தபால் நிலையத்தில்
விசாரியுங்கள்.

அல்லது இந்த
முகவரிக்கு எழுதுங்கள்:
தேசிய சேமிப்பு
நிறுவனம்
த. பெ. எண் 96
நாக்பூர்

davp 74/309

சிவகாமியின் சபதம்

அமரர் கல்கி

ஐந்தாம் அத்தியாயம்


மாமல்லரின் பயம்

காஞ்சி அரண்மனையின் மேல் உப்பரிகையில் பளிங்குக் கல் மேடையில், விண் மீன் வைரங்கள் பதித்த வான விதானத்தின் கீழ், மாமல்லரும் மானவன்மனும் அமர்ந்திருந்தார்கள்.

இலட்சக்கணக்கான ஜனங்கள் வாழ்ந்த காஞ்சி மாநகரத்தில் அப்போது அசாதாரண நிசப்தம் குடி கொண்டிருந்தது.

மாமல்லர் அந்த நள்ளிரவில் காஞ்சி நகரின் காட்சியை ஒரு தடவை சுற்றி வளைத்துப் பார்த்து விட்டு ஒரு பெருமூச்சு விட்டார்.

''இந்தப் பெருநகரம் இன்றைக்கு அமைதியாகத் தூங்குகிறது. நாளைக்கு இந்நேரம் ஏக அமர்க்களமா யிருக்கும். நகர மாந்தர் நகரை அலங்கரிக்கத் தொடங்குவார்கள். படை வீரர்கள் புறப்பட ஆயத்த







மாவார்கள். ஆகா! நாளை இரவு இந்த நகரில் யாரும் தூங்கவே மாட்டார்கள்!'' என்றார் மாமல்லர்.

''பல்லவேந்திரா! அப்படியானால் குறித்த வேளையில் புறப்படுவதென்று முடிவாகத் தீர்மானித்து விட்டீர்களா, பாண்டியன் வந்து சேரா விட்டால்கூட?'' என்று மானவன்மன் கேட்டான்.

''விஜயதசமியன்று காலையில் ஒருவேளை சூரியன் தன் பிரயாணத்தைத் தொடங்காமல் நின்றாலும் நான் நிற்கமாட்டேன். ருத்ராச்சாரியார் சொன்னதைக் கேட்கவில்லையா? இளவரசே!''

மானவன்மன் இலங்கை அரசனாக இன்னும் முடி சூட்டப்படவில்லையாதலால், 'இளவரசன்' என்றே அழைக்கப்பட்டு வந்தான்.

''ஆம்; ருத்ராச்சாரியார் கூறியதைக் கேட்டேன். பல்லவேந்திரா! அப்புறம் ஒருமுறை நான் தனியாகவும் ருத்ராச்சாரியாரிடம் சென்று ஜோசியம் கேட்டுவிட்டு வந்தேன்.''

''ஓஹோ! அப்படியா! ஆச்சாரியார் என்ன சொன்னார்?''

''எல்லாம் நல்ல சமாசாரமாகத்தான் சொன்னார்.''

''அப்படியென்றால்?''

''இலங்கை சிம்மாசனம் எனக்கு நிச்சயம் கிடைக்குமென்றார். அதற்கு முன்னால் பல இடையூறுகள் நேரும் என்றும் பல போர்முனைகளில் நான் சண்டை செய்வேன் என்றும் சொன்னார்.''

மாமல்லர் புன்னகை புரிந்து, ''இவ்வளவுதானா? இன்னும் உண்டா?'' என்று கேட்டார்.

''தாங்கள் வாதாபியைக் கைப்பற்றி வெற்றி வீரராகத் திரும்பி வருவீர்களென்றும், இந்தக் காரியத்தில் இரண்டு இராஜகுமாரர்கள் தங்களுக்கு உதவி புரிவார்கள் என்றும் கூறினார்.''

மாமல்லர் சிரித்துக் கொண்டே, ''அந்த இரண்டு இராஜகுமாரர்கள் யார்?'' என்று கேட்டார்.

''இதே கேள்வியை நானும் ருத்ராச்சாரியாரைக் கேட்டேன். ஜோசியத்தில் அவ்வளவு விவரமாகச் சொல்ல முடியாது என்று கூறி விட்டார்'' என்றான் மானவன்மன்.

''என் அருமைத் தோழரே! அந்த விவரத்தை நான் சொல்கிறேன்: எனக்கு வாதாபிப் போரில் உதவி செய்யப் போகிற அரச குலத்தினரில் நீர் ஒருவர். நீர் இந்தக் காஞ்சி நகரில் இருந்தபடியே எனக்கு உதவி செய்யப் போகிறீர்!'' என்று மாமல்லர் சொல்வதற்குள், இலங்கை இளவரசன் குறுக்கிட்டு, ''பல்லவேந்திரா! என்னுடைய விண்ணப்பத்தைக் கேட்டருளுங்கள். குமார பாண்டியன் வந்து சேருவது தான் சந்தேகமாயிருக்கிறதே. அவ



னுடைய ஸ்தானத்தில் என்னை அழைத்துப் போகலாகாதா? தாங்கள் போர்க்களம் சென்றபிறகு, காஞ்சி அரண்மனையில் என்னைச் சுகமாக உண்டுஉடுத்தி உறங்கச் சொல்கிறீர்களா? இது என்ன நியாயம்?'' என்று கேட்டான்.

''என் அருமைத் தோழரே! நான் உம்மைப் போருக்கு அழைத்துப் போக மறுப்பதற்கு எல்லாவற்றிலும் முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது. அதை இதுவரையில் சொல்லவில்லை. நீர் பிடிவாதம் பிடிப்பதால் சொல்கிறேன். ஒருவேளை போர்க்களத்தில் உமது உயிருக்கு அபாயம் நேர்கிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். பின்னர் இலங்கை இராஜ்ய வம்சத்தின் கதி என்ன ஆவது? உமது இராஜ்யத்தை அநீதியாகவும் அக்கிரமமாகவும் அபகரித்துக் கொண்டிருக்கிறவனுக்கே அல்லவா இராஜ்யம் நிலைத்துப் போய்விடும்? மானவன்மரே! இராஜ குலத்தில் பிறந்தவர்கள் தங்களுடைய வம்சம் தடைப்பட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வதில் முதன்மையான சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். பல்லவ வம்சத்தை விளங்க வைப்பதற்கு எனக்கு ஒரு புதல்வன் இருக்கிறான்; உமக்குஇல்லை. ஆகையினால் தான் முக்கியமாக உம்மை வரக் கூடாதென்கிறேன்'' என்றார் மாமல்லர்.

இதைக் கேட்ட மானவன்மன் பொருள் பொதிந்த புன்னகை புரிந்த வண்ணம், ''பல்லவேந்திரா! இதைப் பற்றி என் மனைவி சுஜாதையிடம் இப்போதே சொல்லி அவளோடு சண்டை பிடிக்கப் போகிறேன். இலங்கை இராஜ வம்சத்துக்கு அவள் இன்னும் ஒரு புதல்வனைத் தராத காரணத்தினால்தானே என் வாழ்நாளில் ஓர் அரிய சந்தர்ப்பம் கைநழுவிப் போகிறது. உலக சரித்திரத்தில் என்றென்றைக்கும் பிரசித்தி பெறப் போகிற வாதாபி யுத்தத்தில் நான் சேர்ந்து கொள்ள முடியாமல் இருக்கிறது!'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தான்.


''நண்பரே, உட்காரும். உமது துணைவியோடு சண்டை பிடிப்பதற்கு இப்போது அவசரம் ஒன்றும் இல்லை. நான் வாதாபிக்குப் புறப்பட்டுப் போன பிறகு சாவகாசமாகத் தினந்தோறும் சண்டை போட்டுக் கொண்டிருக்கலாம்'' என்றார் சக்கரவர்த்தி.

மேடையிலிருந்து எழுந்த மானவன்மன் மீண்டும் உட்கார்ந்து, ''பிரபு! நள்ளிரவு தாண்டி விட்டதே? நாளை இரவுதான் யாரும் தூங்குவதற்கில்லை. இன்றைக்காவது தாங்கள் சிறிது நேரம் தூங்க வேண்டாமா?'' என்று கேட்டான்.

''என்னைத் தூங்கவா சொல்கிறீர்? எனக்கு ஏது தூக்கம்? நான் தூங்கி வருஷம் பன்னிரண்டு ஆகிறது!'' என்றார் மாமல்லர்.

''லக்ஷ்மணர் காட்டுக்குப் போன போது அவருடைய பத்தினி ஊர்மிளை அவருடைய தூக்கத்தையும் வாங்கிக் கொண்டு இரவும் பகலும் பதினாலு வருஷம் தூங்கினாளாம். அம்மாதிரி தங்களுடைய தூக்கத்தையும் யாராவது வாங்கிக் கொண்டு தூங்குகிறார்களா, என்ன?'' என்று மானவன்மன் கேட்டான்.

''இளவரசே! என்னுடைய தூக்கத்தையும் ஒரு பெண்தான் கொண்டு போனாள். என்னைக் கேட்டு அவள் வாங்கிக் கொள்ளவில்லை. அவளே அபகரித்துக் கொண்டு போய் விட்டாள். ஆகா! அந்தச் சிற்பி மகள் இங்கே சமீபத்தில் அரண்ய வீட்டில் இருந்த போதும் எனக்குத் தூக்கம் இல்லாதபடி


காலைப்புத்துணர்ச்சியும்
நறுமணமும்
நாள் முழுதும்
திகழட்டும்!
குளிர்ந்த நீரில் குளித்த புத்துணர்ச்சியை நிலைக்க வைக்கிறது-பல மணி நேரங்களுக்கு. ஆம், பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் நாள் முழுதும் உங்களை அவ்வண்ணம் திகழச் செய்கிறது. அங்கம் முழுதும் பூசிக்கொள்ளுங்கள். இது பொலிவுடனும், சுத்தமாகவும், குளுமையுடனும் வைக்கிறது. இதன் இதமான நறுமணம் நிலைத்திருக்கிறது. ஈரத்தை உறிஞ்சி உலர்ந்த நிலையில் வைத்து சுகப்படுத்துகிறது. கோடைகாலங்களில் வியர்வையின் துர்நாற்றத்தைப் போக்குவதுடன், 'பிசுக்' என்று ஒட்டுவதைத் தடுக்கிறது. பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் பட்டுப்போன்று இருப்பதால் அதை முகத்தில்கூட பூசிக் கொள்ளலாம்.
பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர்
டால்க்
மீடியம், ஃபேமிலி மற்றும் இப்போது புதிய 195 கிராம் லார்ஜ் சைஸ்களில் கிடைக்கிறது
Pond's
Dreamflower talc
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது)
HT-CP-8341



35 வயதுக்கு மேல்
உங்களுக்கு ஒரு
சிறந்த டானிக் தேவை
அதுவே...
அல்பால்பா
டானிக்
(ALFALFA TONIC)
ALFALFA
BAHOLA PHARMACEUTICALS
சக்திவாய்ந்த
ஹோமியோபதி
மருந்துகள்
BAHOLA
அறுவை சிகிச்சையின்றி
டான்சில் வியாதியை
குணப்படுத்த...
டான்சிலோ
மாத்திரைகள்
(TONSILO TABLETS)
90 TABLETS
TONSILO
HOMOEOPATHIC MEDICINE
BAHOLA PHARMACEUTICALS COMPANY
பஹோலா தயாரிப்புகள்
விநியோகஸ்தர்கள்: பஹோலா சேல்ஸ் கார்ப்பரேஷன்
ஹோமியோ ஹவுஸ், கும்பகோணம், 612001. போன்: 44 & 76
கிளைகள்: 3/186, அண்ணா சாலை, சென்னை-600002. போன்: 85350
78, மேல கோபுர வீதி, மதுரை-625001. போன்: 23441. 96-98, ராஜவீதி-கோவை-641001. போன்: 35453
எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்
Designed by G.K. MURTHY

செய்தான். இப்போது நூறு காத தூரத்துக்கப்பால் பகைவர்களின் நகரத்தில் இருக்கும் போதும் எனக்குத் தூக்கம் பிடிக்காமல் செய்கிறாள்" என்று மானவன்மனைப் பார்த்துச் சொல்லிவந்த மாமல்லர், திடீரென்று வான வெளியைப் பார்த்துப் பேசலானார்: "சிவகாமி! ஏன் என்னை இப்படி வருத்துகிறாய்? உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காகப் பகலெல்லாம் பாடுபடுகிறேனே; இரவிலே சற்று நேரம் என்னை நிம்மதியாகத் தூங்கவிடக் கூடாதா? வாதாபியில் தனி வீட்டிலே இரவெல்லாம் தூண்டா விளக்கே துணையாக உட்கார்ந்து என்னைச் சபித்துக் கொண்டிருக்கிறாயா? தூங்காத களைப்பினால் தப்பித் தவறி நான் சற்றுத் தூங்கினால், கனவிலும் வந்து என்னை வதைக்கிறாயே? உன்னை நான் மறக்கவில்லை, சிவகாமி! உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியையும் மறந்து விடவில்லை. இத்தனைநாள் பொறுத்துக் கொண்டிருந்தவள் இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திரு!"

மாமல்லர் வெறி கொண்டவர் போல் வானவெளியைப் பார்த்துப் பேசியது இலங்கை இளவரசனுக்குப் பயத்தை உண்டாக்கிற்று.

"பல்லவேந்திரா! இது என்ன? சற்று அமைதியாயிருங்கள்!" என்றான் மானவன்மன்.

"நண்பரே! என்னை அமைதியாயிருக்கவா சொல்கிறீர்! இந்த வாழ்நாளில் இனி எனக்கு எப்போதாவது மன அமைதி கிட்டுமா என்பதே சந்தேகந்தான். மானவன்மரே! பத்து வருஷத்துக்கு முன்பு நான் ஒரு தவறு செய்தேன். ஓர் அபலைப் பெண்ணின் ஆத்திரமான பேச்சைக் கேட்டு அந்தக் கணத்தில் மதியிழந்து விட்டேன். நானும் சேனாபதியும் வாதாபியில் சிவகாமியைச் சந்தித்து அழைத்தபோது, அவள் சபதம் செய்திருப்பதாகவும், ஆகையால் எங்களுடன் வர மாட்டேனென்றும் சொன்னாள். அப்போது சேனாபதி அவளுடைய பேச்சைக் கேட்கக் கூடாதென்றும், பலவந்தமாகக் கட்டித் தூக்கி வந்துவிட வேண்டும் என்றும் கூறினார். அதைக் கேளாமல் போய் விட்டேன். அந்தத் தவறுதலை நினைத்து நினைத்துப் பத்து வருஷமாக வருந்திக் கொண்டிருக்கிறேன்."

இவ்விதம் கூறிவிட்டுச் சற்று மாமல்லர் மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். பிறகு கூறினார்: "மானவன்மரே! வாதாபிக்குப் படையெடுத்துச் செல்லும் நாளை நான் எவ்வளவோ ஆவலுடன் எதிர்பார்த்திருந்தேன்.



அந்த நாளைத் துரிதப்படுத்துவதற்காக எவ்வளவோ தீவிரமான முயற்சிகள் எல்லாம் செய்தேன். ஆனால், கடைசியாகப் புறப்படும் நாள் நெருங்கியிருக்கும்போது பயமாயிருக்கிறது."

"என்ன? தங்களுக்கா பயம்?" என்று மானவன்மன் அவநம்பிக்கையும் அதிசயமும் கலந்த குரலில் கூறினான்.

"ஆம்! எனக்குப் பயமாய்த்தானிருக்கிறது. ஆனால், போரையும் போர்க்களத்தையும் நினைத்து நான் பயப்படவில்லை! புலிகேசியைக் கொன்று வாதாபியைப் பிடித்த பிறகு நடக்கப் போவதை எண்ணித்தான் பயப்படுகிறேன். பகைவரின் சிறையில் பத்து வருஷமாகச் சிவகாமி எனக்காகக் காத்திருக்கிறாள். அந்த நாளில் அவளுடைய குழந்தை உள்ளத்தில் தோன்றிய காதலை அன்று போல் இன்றும் தூய்மையாகப் பாதுகாத்து வந்திருக்கிறாள். ஆனால், என்னுடைய நிலைமை என்ன? கல்யாணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாக இருக்கிறேன். சிவகாமியை எந்த முகத்தோடு நான் பார்ப்பது? அவளிடம் என்ன சொல்லுவது? இதை நினைக்கும் போதுதான் எனக்குப் பயமாயிருக்கிறது. அதைக் காட்டிலும் போர்க்களத்தில் செத்துப் போனாலும் பாதகமில்லை!"

"பல்லவேந்திரா! தாங்கள் போர்க்களத்தில் உயிரை விட்டால், தங்களை நம்பி இங்கு வந்து உட்கார்ந்திருக்கும் என்னுடைய கதி என்ன? இலங்கைச் சிம்மாசனத்தில் என்னை அமர்த்துவதாகத் தாங்கள் எனக்கு அளித்த வாக்குறுதிதான் என்ன ஆவது?" என்று நாத் தழுதழுக்கக் கேட்டான் மானவன்மன்.

ஆறாம் அத்தியாயம்

ஏகாம்பரர் சன்னதி

பரத கண்டம் எங்கும் புகழ் பரவியிருந்த காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோவிலில் உச்சிக் கால பூஜை நடந்து கொண்டிருந்தது. அதற்கு அறிகுறியான ஆலாசிய மணியின் ஓங்கார நாதமும், பேரிகை முழக்கமும் கேட்டுக் கொண்டிருந்தன.

கோயிலுக்கு வெளியே கோபுர வாசலிலும் சந்நிதி வீதியிலும் கணக்கற்ற ஜனங்கள் நெருங்கி மொய்த்துக் கொண்டிருந்தார்கள். பல்லவ சக்கரவர்த்தி பரிவார சகிதமாக ஆலயத்துக்கு வந்திருந்ததுதான் இவ்விதம் ஜனக் கூட்டம் திரண்டிருந்ததற்குக் காரணமாகும்.

*　　*　　*

ஆலயத்துக்குள்ளே ஏகாம்பரநாதரின் சந்நிதி என்றுமில்லாத சோபையுடன் அன்று விளங்கிற்று.



வெள்ளிக் குத்துவிளக்குகளில் ஏற்றியிருந்த பல முக தீபங்களின் ஒளியில், சந்நிதியில் நின்ற இராஜ வம்சத்தினரின் மணி மகுடங்களும், ஆபரணங்களும் ஜாஜ்வல்யமாகச் சுடர் விட்டுப் பிரகாசித்தன.

சந்நிதியின் ஒரு பக்கத்தில் இராஜ குலத்து ஆடவர்களும், மற்றொரு பக்கத்தில் அந்தப்புரத்து மாதர்களும் நின்றார்கள்.

அவர்கள் யார் யார் என்பதைச் சற்றுக் கவனிப்போம்.

எல்லாருக்கும் முதன்மையாகப் பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி மாமல்ல நரசிம்மர் அறுநூறு வருஷங்களாக அவருடைய மூதாதையர் அணிந்த கிரீடத்தைத் தம் சிரசில் அணிந்து கம்பீரமாக நின்றார். கரங்களைக் கூப்பி இறைவனை இறைஞ்சி வழிபட்டுக் கொண்டிருந்த நிலையிலும் அவருடைய தோற்றத்திலே பரம்பரையான இராஜ குலத்தின் பெருமிதம் காணப்பட்டது.

அவருக்கு இரு புறத்திலும் இலங்கை இளவரசர் மானவன்மரும் சேனாதிபதி பரஞ்சோதியும் நின்றார்கள். பரஞ்சோதிக்கு அடுத்தாற்போல் பல்லவ வம்சத்தின் மற்றொரு பிரிவைச் சேர்ந்தவனும், வேங்கி நாட்டை மீண்டும் புலிகேசிக்குப் பறி கொடுத்து விட்டுக் காஞ்சியில் வந்து அடைக்கலம் புகுந்தவனுமான அச்சுதவர்மன் அடக்க ஒடுக்கத்துடன் நின்றான்.

அவனுக்குப் பின்னால் கொடும்பாளூர்ச் சோழ வம்சத்தைச் சேர்ந்த செம்பியன் வளவனும், அச்சுத விக்கிராந்தனுடைய சந்ததியில் தோன்றிய உண்மையான வஜ்ரபாஹுவும் நின்றார்கள்.

இன்னும் பின்னால் பல்லவ சாம்ராஜ்யத்துப் பிரதம மந்திரி சாரங்க தேவ பட்டர், முதல் அமைச்சர் ரணதீர பல்லவ ராயர், மற்ற மந்திரி மண்டலத்தார், கோட்டத் தலைவர்கள் முதலியோர் ஒருவரை யொருவர் நெருக்கி யடித்துக்கொண்டு நின்றார்கள்.

நல்லது! எதிர்ப் பக்கத்தில் நிற்கும் பெண்மணிகளை இனிப் பார்க்கலாம். முதற் பார்வைக்கு அந்தப் பெண் மணிகள் எல்லாரும் சௌந்தரிய தேவதையின் பலவித வடிவங்களாகவே தோன்றுகிறார்கள்.

சிறிது நிதானித்துப் பார்த்துத்தான் அவர்களில் யார் இன்னவர் என்று தெரிந்து கொள்ள வேண்டி யிருக்கிறது.

முதலில் காலஞ்சென்ற மகேந்திர சக்கரவர்த்தியின் பட்டமகிஷி புவன மகாதேவி சாந்தமும் பக்தியுமே உருக் கொண்டாற் போல் தெய்விகத் தோற்றத்துடன் நின்றார்.

அவருக்கு அருகில் மாமல்ல சக்கரவர்த்தியின் தர்மபத்தினியும், பாண்டிய ராஜன் திருக் குமாரியுமான வானமாதேவி நின்றாள். சக்கரவர்த்தினியோடு இணைந்து நின்று இளவரசி குந்தவி தேவி தன் கரிய விழிகளினால் குறுகுறுவென்று அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வானமா தேவிக்கு அருகில் பக்தியும் தூய்மையும் சௌந்தரியமுமே உருக் கொண்டவள் போல் நின்ற மற்றொரு பெண் தெய்வத்தைச் சிறிது கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். சுமார் பதினெட்டுப் பிராயமுடைய

இந்த இள மங்கைதான் சோழ வம்சத்தின் கொடும்பாளூர்க் கிளையைச் சேர்ந்தவனை செம்பியன் வளவனுடைய திருப் புதல்வியான மங்கையர்க்கரசி. பிற்காலத்தில் பாண்டியன் நெடுமாறனின் தேவியாகி, ஞான சம்பந்தரை மதுரைக்குத் தருவித்துச் சிவனடியார் கூட்டத்தில் என்றும் அழியாத புகழ் பெறப் போகிறவர். இன்னும் பல அந்தப்புர மாதரும் அங்கே இருந்தார்கள். அவர்களை யெல்லாம் பற்றி நாம் தனித்தனியாகத் தெரிந்து கொள்வது அவசியமில்லையாதலால் மேலே செல்வோம்.

டண் டாண், டண் டாண் என்று ஆலாசிய மணி அவசரம் அவசரமாக அடித்தது. தம் தாம், தம் தாம் என்று பேரிகை பரபரப்புடன் முழங்கிற்று. சங்கங்கள், எக்காளங்கள், மேளங்கள், தாளங்கள் — எல்லாமாகச் சேர்ந்து சப்தித்து ஆலயத்தின் விசாலமான மண்டபங்களில் நாற்புறமும் கிளம்பிய எதிரொலியுடன் சேர்ந்து மோதிய போது, நாதக் கடல் பொங்கி வந்து அந்தக் கோயிலையே சூழ்ந்து அடித்தது போன்ற உணர்ச்சி அனைவருக்கும் உண்டாயிற்று.

ஏகாம்பரேசுவரருக்குத் தீபாராதனை நடந்ததை முன்னிட்டு இவ்வளவு ஆரவார ஒலிகளும் எழுந்தன. அந்த ஒலிகளுக்கு மத்தியில் பரவசமடைந்த பக்தர்களின் தழுதழுத்த குரல்களிலிருந்து கிளம்பிய ''நமப் பார்வதீ பதயே!'', ''ஹர ஹர மகாதேவா!'' முதலிய கோஷங்களும் ஏற்பட்டன.

தீபாராதனை சமயத்தில் பலர் பக்தியுடன் கைகூப்பி நின்றனர். பலர் கன்னத்தில் அடித்துக் கொண்டனர். இளவரசன் மகேந்திரனும் இளவரசி குந்தவியும் மற்றவர்களைப் பார்த்து விட்டுச் சடசடவென்று தங்கள் கன்னத்தில் போட்டுக் கொண்டது வெகு வேடிக்கையா யிருந்தது.

தீபாராதனை முடிந்ததும் குமார சிவாச்சாரியார் கையில் விபூதிப் பிரஸாதத்துடன் கர்ப்பக்கிருஹத்துக்குள்ளிருந்து வெளியே வந்தார்.

சக்கரவர்த்தியின் அருகில் வந்து நின்று, சிவாச்சாரியார் உரத்த குரலில் கூறினார்: ''காலனைக் காலால் உதைத்தவரும், சிரித்துப் புரமெரித்தவரும், கஜமுகாசுரனைக் கிழித்து அவன் தோலை உடுத்தவரும், நெற்றிக் கண்ணில் நெருப்பை உடையவருமான திரிபுராந்தகரின் அருளால் பல்லவேந்திரருக்குப் பூரண வெற்றி உண்டாகட்டும்! புலிகேசியை வதம் செய்து வாதாபியை அழித்து வெற்றி வீரராய்த் திரும்புக! ஜய விஜயீ பவ!''

இவ்விதம் சிவாச்சாரியார் சொல்லி விபூதிப் பிரசாதத்தைச் சக்கரவர்த்தியின் கையில் கொடுத்தார். அதை மாமல்லர் பக்தியுடன் பெற்று நெற்றியிலே தரித்தபோது, உள்ளே சிவலிங்கத்துக்கு அருகில் எரிந்து கொண்டிருந்த தீபம் திடீரென்று சுடர் விட்டு எரிந்து அதிக ஒளியுடன் பிரகாசித்தது. அப்படி எரிந்த தீபப்பிழம்பிலிருந்து ஒரு சுடர் சடசடவென்ற சத்தத்துடன் கீழே விழுந்து சில விநாடி நேரம் பிரகாசமான ஒளி வீசி விட்டு மங்கி அணைந்தது.

இந்தச் சம்பவமானது சக்கரவர்த்தி எந்த நோக்கத்துடன் கிளம்புகிறாரோ, அந்த நோக்கம் நன்கு நிறைவேறும் என்பதற்கு ஒரு நன்னிமித்தம் என்ற எண்ணம் அங்கே கூடியிருந்த எல்லாருடைய மனத்திலும் ஏக காலத்தில் தோன்றவே, ''ஜய விஜயீ பவ!'' ''ஹர ஹர மகாதேவா!'' என்ற கோஷங்கள் கிளம்பி, கர்ப்பக்கிருஹம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் எல்லாம் அதிரச் செய்தன.

பல்லவேந்திரரின் திக்விஜயத்துக்கு ஏகாம்பரநாதர் அனுமதி கொடுத்து விட்டார் என்ற செய்தி வெளி மண்டபங்களிலும் கோயில் பிராகாரங்களிலும் கோயிலுக்கு வெளியே வீதிகளிலும் கூடியிருந்த ஜனங்களிடையே பரவி எங்கெங்கும் ''ஹர ஹர மகாதேவா!'' என்ற கோஷத்தைக் கிளப்பிற்று. அப்படிக் காஞ்சி நகரையே சூழ்கடித்த உற்சாக ஆரவார ஜயகோஷத்தில் கலந்து கொள்ளாமல் மௌனம் சாதித்தவன் ஒருவனும் அந்தக் கூட்டத்தில் இருந்தான். அவன் பல்லவ சக்கரவர்த்தியின் ரத சாரதியான கண்ணபிரான்தான். (தொடரும்)

புதிய கவிதை

அங்கத பாணியில் அமைந்த புதிய கவிதைகளை வரவேற்கிறோம். பிரசுரமாகும் கவிதைகளுக்குச் சன்மானம் உண்டு.

முடிவு தேதி 20-5-75.

திருப்பி அனுப்புவது, கடிதப் போக்குவரத்து முதலியன கிடையாது. உறை மீது புதிய கவிதை எனக் குறிப்பிடவும்.


ஆசிரியர், கல்கி, சேத்துப்பட்டு, சென்னை-31


நாட்டின் நிலையும் கார்ட்டூன் கலையும்!


1975 சுயராஜ்யா மலரில் கருத்துக் கருவூலங்களான பல கட்டுரைகளில் அடங்கியிருப்பதுடன் நாட்டு நிலவரத் தைப் படம் பிடித்துக் காட்டும் பல கார்ட்டூன்கள் அக்கட்டுரைகளி னூடே இடம் பெற்றுள் ளன. அக்கார்ட்டூன் களில் சில:

நாட்டின் நிலையும் கார்ட்டூன் கலையும்!


இமே உள்ளே கார்ட்டூன்: சாமா
மற்றவை நாணு










தொழிலாளி
பலசரக்குக் கடை
விலைவாசி உயர்வு
வாங்க, வாங்க என்ன வேண்டும்?
உற்பத்தி
வணிகர்
நீ என் முதுகைச் சொறி நான் உன் முதுகைச் சொறிகிறேன்!
அரசியல் தலைவர்
கள்ளக்கடத்தல் காரர்
அரசியல்வாதி
நீதி
நிபுணர்
பணவீக்கம்
நேற்று
இன்று
லஞ்சஊழல்

காமராஜ் அவர்கள் கூட்டங்களில் பேசுவதை பிரசங்கம் என்றோ சொற்பொழிவு என்றோ சொல்ல முடியாது. அகட விகட சாமர்த்தியங்களோ, சொல் ஜாலங்களோ அடுக்குமொழிகளோ ஏதுமின்றி நேருக்கு நேர் ஓர் உறவினரிடமோ நண்பரிடமோ பேசுவது போலத்தான் பேசுகிறார். உள்ளத்தைத் திறந்து ஒளிவு மறைவின்றிப் பேசுகிறார். அவருக்குத் தாம் பேசும் ஒவ்வொரு சொல்லிலும் அவ்வளவு உறுதி, நம்பிக்கை. மக்களுக்கும் அவர் கூறும் ஒவ்வொரு வார்த்தையும் உள்ளத்தைத் தொடுகிறது. ''உங்கள் ஊரில் உள்ள கால் வட்டம் அரை வட்டங்கள் வீடு வாசல்கள் எல்லாம் சேர்த்துக் கொண்டு விட்டார்கள் இல்லையா?''

''ஓ!'' என்று கூட்டத்திலிருந்து ஆமோதிக்கும் குரல் எழும்புகிறது. உடனே காமராஜுக்குக் கட்டுக்கடங்காத சிரிப்பு வந்து விடுகிறது. விழுந்து விழுந்து சிரிக்கிறார்.

லஞ்ச ஊழல் பரவியிருப்பதை, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதை விடத் தங்கள் வசதியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தாம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லாதபடி ''ஓ'' என்ற மக்களின் குரல் மிகத் தெளிவாக விளக்கி விட்டதானது அவரிடம் சிரிப்பு அலைகளைத் தோற்றுவிக்கிறது.

''ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பணம் திரட்டி உள்ளூர் கால்வட்டம், அரை வட்டம், எம். எல். ஏ.க்கள் ஆகியோர்களுக்குக் கார் வாங்கித் தருகிறார்கள். இது லஞ்சமன்றி வேறென்ன? ஆனால் தி. மு. க.க்காரர்கள் கெட்டிக்காரர்கள். லஞ்சம் என்று சொல்வதில்லை. '**அன்பளிப்பு**' என்று பெயர் சூட்டி விடுகிறார்கள்'' என்கிறார். இம்முறை கூட்டத்தினர் 'கொல்' என்று சிரிக்கிறார்கள். காமராஜ் முகத்தில் கவலை படர்கிறது! ''இந்த ஊழல் ஆட்சியை நீக்கியே தீர வேண்டும். நேர்மைக்கு மதிப்புக் கொடுக்கும் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும்'' என்கிறார்.


மற்றோர் ஊரில் பேசுகிறார் தலைவர்: ''தி. மு. க. ஆட்சியில் லஞ்ச ஊழல் மலிந்து விட்டது என்று நான் முன்பு சொன்னதற்கு எம். ஜி. ஆர்., 'லஞ்ச ஊழல் எங்கே மலிந்து விட்டது?' என்று திருப்பிக் கேட்டார். இப்போது அவரே தி. மு. க. ஆட்சியின் மீது லஞ்ச ஊழல் புகார்ப் பட்டியல் எழுதித் தில்லிக்குச் சென்று பிரதம மந்திரியிடம் சமர்ப்பித்திருக்கிறார். முதலில் மறுத்தவரே பின்னர் அதே குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டுமெனில், அதற்கு என்ன அர்த்தம்? உண்மையில் நாட்டு மக்கள் நலனில், நல்ல நிர்வாகத்தில் எம். ஜி. ஆருக்கு அக்கறை யில்லை. கருணாநிதிக்கும் எம். ஜி. ஆருக்கும் ஏதோ சொந்த விஷயத்தில் சண்டை, அதன் விளைவாகக் கருணாநிதி மேல் லஞ்சப் புகார் கூறியிருக்கிறார் எம். ஜி. ஆர். என்று தெளிவாகிறதல்லவா?''

குடும்பச் சண்டை, நண்பர்களிடையே ஏற்பட்ட பரஸ்பர மனத்தாங்கல், தமிழ்நாட்டு மக்களின் வாழ்வைப் பாதிக்கக் கூடிய அரசியலாக உருவெடுப்பதைக் காமராஜ் ஒவ்வொரு கூட்டத்திலுமே எடுத்துக் கூறி எச்சரித்து வருகிறார்.

தி. மு. க. வுக்கும் அ. தி. மு. க.வுக்கும் கொள்கை அளவிலோ கட்சியளவிலோ ஒரு வித்தியாசமும் கிடையாது. தி. மு. க. ஆளும் கட்சியாக இருக்கிறது. அது செய்து வரும் தவறுகளாலேயே மக்களிடையே செல்வாக்கு இழந்து வருகிறது. தி. மு. க. கட்சி அங்கத்தினர்கள் நிர்வாகத்தில் தலையிடுவதன் காரணமாக மக்களின் அதிருப்தியைப் பெரிதும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்நிலையில் அ. தி. மு. க.வின் ஏமாற்று வேலைகளில் மக்கள் மயங்கி விடாமலிருக்க வேண்டும் என்று எச்சரிப்பதில்தான் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார் காமராஜ்.

எம். ஜி. ஆரே மக்கள் தம் முகத்தைப் பார்த்துத்தான் முன்னர் தி. மு. க.வுக்கு

சேலம் மாவட்டம் கொளத்தூரில் நடந்த கூட்டத்தில் பெண்கள் பகுதி



வாக்களித்தார்கள் என்று சொல்லிக் கொள் கிறார். இப்போது அதே முகத்தைப் பார்த்து அ. தி. மு. க.வுக்கு வோட்டளித்து விடு வார்கள் என்று எம். ஜி. ஆர். நம்புகிறார். சினிமா மோகம் அந்த அளவில் இருக்கிறது. நமது பாமர மக்கள் எம். ஜி. ஆர். அவர்களை ஆபத்பாந்தவனாகவும் அனாதை ரட்சகனாகவும் கருதுகின்றனர். ஏனெனில் சினிமாவில் அவர் அப்படித் தோன்றுகிறார். வெள்ளித் திரையில் செய்வதையெல்லாம் எம். ஜி. ஆர். நாட்டு நிர்வாகத்திலும் செய்துவிட முடியும் என்று நம்பி மக்கள் வோட்டுப் போட்டு விட்டார்களானால் தேசம் பாழாகிப்போகுமே என்பது தலைவர் காமராஜரின் கவலை.

''1967ல் ஒரு படி அரிசி ரூ. 1.50 அல்லது ரூ. 1.75க்கு விற்றது. அப்போது நீங்கள் எல்லாம் எவ்வளவு கூப்பாடு போட்டீர்கள். காங்கிரஸ்ஆட்சியை எவ்வளவு தூற்றினீர்கள்! ரூபாய்க்கு மூன்று படி அரிசி தருவதாகச் சொன்ன தி. மு. க.வுக்கு வோட்டுப் போட் டீர்கள். இப்போது அரிசி என்ன விலை விற் கிறது?''

ஆட்சியில் எல்லா ஊர்களுக்கும் மின்சாரம் வழங்கி விட்டோம்' என்று பெரிய விழாவே கொண்டாடினார்கள்.

''காங்கிரஸ் ஆட்சியை விட நான்கு மடங்கு பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரம் விவசாயிகளுக்குத் தருவார்கள்; ஆனால் என் ஐயா, உங்கள் ஊரிலே பம்புசெட் ஓடு கிறதாய்யா?'' இங்கே காமராஜ் பேச்சை நிறுத்துகிறார்.

''எங்கே ஓடுதுங்க! மின்சாரம் விட்டால் தானே? ஒரு நாளைக்கு அரை மணி நேரம் ஓடினாலே பெரிய காரியம்!'' கூட்டத்திலி ருந்து இப்படிப் பதில் வருகிறது.

பெருவாரியான விவசாய மக்கள் கூடி யிருக்கும் கூட்டத்தில் பம்பு செட்டுகள் பற்றிக் கூறியவுடன் அவர்களுக்கு விஷயம் மிகத் தெளிவாகப் புரிகிறது.

''என் ஐயா, காங்கிரஸ் ஆட்சியிலே பம்பு செட்டு எத்தனை மணி நேரம் ஓடிச்சு?'' என்று பொது மக்களைப் பார்த்தே கேட்கிறார் காமராஜ்!

வாழிய பயிருக்கு வான்முகில் காமராஜ்

எஸ். வி. எஸ்.



சேலம் மாவட்டம் மேட்டூரில் நடந்த கூட்டத்தில் தலைவரிடம் டி. ரத்னவேலு ரூ. பத்தாயிரத்து நூற்றி ஒன்று நிதி வழங்கினார்.

உடனே கூட்டத்திலிருந்து ''ஏழு ரூபாய்!'' என்று பதில் வந்தது.

இவ்வாறு முன்பு தி. மு. க.வுக்கு வாக் களித்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை மக்கள் தாமாகவே உணரச் செய்கிறார் தலைவர்.

இன்னொரு வேடிக்கையும் அவர் கூட்டங் களில் நடக்கும். பேசுகிறார்: ''தி. மு. க வினர் கெட்டிக்காரர்கள். புள்ளி விவரம் தருவதிலே ரொம்பக் கெட்டிக்காரர்கள். காங் கிரஸ் ஆட்சியை விடத் தங்கள் ஆட்சியில் எவ்வளவு அபிவிருத்தி, முன்னேற்றம் என்று புள்ளி விவரங்களோடு கூறுவார்கள். 'காங் கிரஸ் ஆட்சியின்போது 10,000 கிராமங் களுக்கு மின்சாரம் கொடுத்தார்கள். எங்கள்

''இருபது மணி நேரம் ஓடுங்க. தாங்க வேணுங்கிற போதெல்லாம் ஓடுங்க!'' என்று மக்கள் சொல்கிறார்கள்.

''இப்ப?''

''வேணுங்கிறபோது ஓடறதில்லே; வேண் டாங்கிறபோது ஓடுதுங்க—ஒரு மணி அல்லது அரை மணி!''


தலைவர் காமராஜ் அடக்க மாட்டாமல் சிரிக்கிறார். மக்களும் சிரிக்கிறார்கள். காமராஜ் சட்டென்று சிரிப்பை நிறுத்திப் பேசுகிறார்: ''இந்த அவல நிலைக்குக் காரணம் என்ன? இருக்கிற மின்சாரத்தைக் கண்ணை மூடிக் கொண்டு தி. மு. க. ஆட்சிக்கு விநியோகிக் கத் தெரிந்ததே தவிர புது மின் உற்பத்தி நிலையங்களைத் தொடங்கத் தெரியவில்லை. மின் சார உற்பத்தியைப் பெருக்காமல், பம்பு செட்டுகளை மட்டும் கொடுத்ததால் விவசாயம் பாழாயிற்று. அதோடு நம் மாநிலத்துக்கு வரவேண்டிய தொழில்கள் எல்லாம் அண்டை

மாநிலமான கர்நாடகத்துக்கும் ஆந்திராவுக்கும் போய் விட்டன. நம் மக்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள்.''

தலைவர் காமராஜ், தமது சுற்றுப் பிரயாணத்தில் ஒரு விஷயத்தைத் தெளிவாக்கிக் கொண்டு வந்திருக்கிறார். அவருக்குத் தி.மு.க. மீதோ அதன் தலைவர்கள் மீதோ அ.தி.மு.க., அதன் தலைவர்கள் மீதோ எந்த விதக் கோபமோ வன்மமோ கிடையாது. சொல்கிறார்:

''1967ல் காங்கிரஸ் தோற்றுத் தி. மு. க. பதவிக்கு வந்தபோது, நான் ஒரு சிறு விபத்துக்கு உள்ளாகிப் படுக்கையில் இருந்தேன். தி. மு. க. வெற்றி பெற்றது என்று கேள்விப்பட்டவுடன் முதல் வாழ்த்து நான்தான் அண்ணாதுரைக்கு அனுப்பினேன். தி. மு. க. நல்லபடியாக ஆட்சி செய்திருந்தால் நான் மகிழ்ந்திருப்பேன். ஆனால் நாளுக்கு நாள் தி. மு. க. ஆட்சியில் பாமர மக்கள் படும் இன்னல்களைப் பார்த்துக் கொண்டு, வளரும் லஞ்ச ஊழலைப் பார்த்துக் கொண்டு நான் சும்மா இருந்தால் நான் உங்களுக்குத் துரோகம் செய்தவனாவேன். காந்திஜிக்குத் துரோகம் செய்தவனாவேன். அதனால்தான் ஒரு முறைக்கு இரண்டு முறை ஏமாந்தீர்கள். மூன்றும் முறையும் ஏமாந்து போய்விடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்ய வந்திருக்கிறேன்.''

(தொடரும்)



சர்வ தேச மாதர் ஆண்டினையொட்டி இன்றையத் தலைமுறைப் பெண்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறார் ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் என்று கேட்டோம். அவர் கூறுவன தலைமுறை இடைவெளியை நீக்குவதோடு நில்லாமல் தலைமுறை நெருக்கத்தையே ஏற்படுத்தும்.

''இன்றைய நிலையில் கணவன், மனைவி இருவருமே வேலைக்குப் போக வேண்டியது அவசியமாகிவிட்டது. வேலைக்குப் போக வேண்டும் என்றால் பெண்களும் படிக்க வேண்டும். அந்தக் காலத்தில் பெண்கள் குறிப்பிட்ட சில உத்தியோகங்களைத்தான் நாடுவது வழக்கம். இன்று அப்படியில்லை. தொழிலாளர் யூனியன் தலைவர் பதவியில் இருக்கிறாள் என் உறவுக்காரப் பெண் ஒருத்தி. எந்த வேலையில் அமர்ந்தாலும் மனப்பூர்வமாகப் பணியாற்ற வேண்டும் என்பதுதான் முக்கியம். வேலைக்குப் போகாத பெண்கள் சமூகப் பணிகளில் ஈடுபடலாம். ஸ்தாபன ரீதியாகத்தான் செயல்பட வேண்டும் என்பதில்லை. தனிப்பட்ட முறையிலேயே சமூகநலனுக்கு உகந்த பணிகளைச் செய்யலாம். படித்த பெண்கள்தான் இதைச் செய்ய வேண்டும் என்பதில்லை. அதிகம் படிக்காதவர்களும் சமூக சேவையில் ஈடுபடலாம்'' என்கிறார், இவ்வாண்டு 'தேசிய அன்னை' விருது பெற்ற திருமதி அம்மு சுவாமிநாதன்.

இந்தக் காலத்துப் பெண்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?

''நிச்சயமாக அவர்களுக்கு நான் புத்திமதி ஏதும் கூற விரும்பவில்லை.''

''ஏன்?''

''அவர்கள் பொதுவாக அதனை ரசிப்பதில்லை; வரவேற்பதில்லை. என் அம்மாவிடம் நான் பழகியதற்கும், இன்று பொதுவாய்ப் பெண்கள் தங்கள் தாயாரிடம் பழகுவதற்கும் வித்தியாசம் உண்டு. பெண்கள் மட்டுமில்லை, பிள்ளைகளும்கூடத்தான். நம்மைக் கேட்டுத்தான் அவர்கள் எதையும் செய்ய வேண்டும் என்று அவர்கள் நினைப்பதில்லை. அவர்களே முடிவு எடுக்கிறார்கள். தங்களுடைய தீர்மானத்தில் யாரும் குறுக்கிடுவதை அவர்கள் விரும்புவதில்லை. 'தலைமுறை இடைவெளி' தான் இதற்குக் காரணம் என்று நான் நினைக்கவில்லை. உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் பழக்க வழக்கங்கள் மாறிவிட்டன. நம் நாட்டுப் பெண்களும் மாறி உள்ளனர். சில பழக்க வழக்கங்கள் நமக்குப் பிடிக்காவிட்டாலும் அதனை எடுத்துச் சொல்ல முடிவதில்லை. 'இது சரியில்லை', 'இப்படிச் செய்யாதே!' என்று சொன்னால், 'So what?' என்று திருப்பிக் கேட்பார்கள். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகச் சொல்வேன். இந்தத் தலைமுறைப் பெண்கள் மிகவும் புத்திகூர்மை உள்ளவர்கள். பொதுஅறிவு நிரம்பப் பெற்றுள்ளனர்.''

''எனவே அவர்கள் போக்கில் விட்டுவிடுவதுதான் சரி என்று கருதுகிறீர்களா?''

''அவர்களுக்கு நாம் வழிகாட்டியாகத்தான் இருக்கலாம். உபதேசம் செய்யக் கூடாது. 'ஹிந்து கோட் பில்' உருவான போது, நான் டில்லியில் இருந்தேன். விவாகரத்துக்குக்கூட வழி செய்துவிட்டார்களே என்று பலர் துடித்தனர். இன்று...? சகஜமாகிவிட்டது. காலம் மாறுகிறது. அதையொட்டி நமது பெண்களும் மாறி உள்ளனர்.''

பேட்டி: **ஆர். பி.**

மேலட்டையில் ஸ்ரீமதி அம்முசுவாமிநாதனுடன் அளவளாவும் யுவதி ஜெயஸ்ரீ வேங்கடராமன். வண்ணப்படம்: உத்ரா




உம்மிடி சாரதி ஜுவல்லர்ஸ் அளிக்கும்

நகை சேமிப்புத் திட்டம்

ரூ.3000, ரூ.1500/- குருப்புகள்


பெரு மதிப்புக்குரிய ஆதரவாளர்களுக்கு உம்மிடி சாரதி ஜுவல்லர்ஸ் மிகப் பெருமையுடன் அளிக்கும் புதிய நகை சேமிப்புத் திட்டம். இரு வகை குருப்புகள்: ரூ. 3000, ரூ. 1500. மாதத் தவணை ரூ. 200, ரூ. 100. இது 15 மாதத் திட்டம், ஒவ்வொரு குருப்புக்கும் மொத்த அங்கத்தினர்கள் 100 மட்டுமே. பிரதி மாதமும் 15 தேதி அளவில் சீட்டுக் குலுக்கல் நடைபெறும். அதில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகள் மேற்கொண்டு மாதத் தவணைகளுக்குப் பணம் செலுத்தவேண்டியதில்லை. வெற்றி பெற்றவர்கள் தங்கள் பணத்திற்குரிய தேவையான தங்க நகைகளையோ, வெள்ளிப் பொருட்களையோ தேர்ந்தெடுக்கலாம்.



அரிய பரிசு!

சேரும் மெம்பர்களுக்கு முதல் தவணை செலுத்திய உடனேயே ஒரு அழகிய வெள்ளி குத்துவிளக்கு பரிசாகக் கொடுக்கிறோம்.

ADWAVE-VSJ-281



மேற்கொண்டு விபரங்களுக்கு:

உம்மிடி சாரதி ஜுவல்லர்ஸ்

40, பாண்டி பஜார், மாம்பலம்.
சென்னை-600 017. போன்: 442500

- ஞாயிற்றுக்கிழமை கடைதிறந்திருக்கும்
- செவ்வாய்க்கிழமை விடுமுறை


கோடையில்—
சாதாரணமான சருமம்....
...வாடிவிடும் வியர்க்குருவினுல்..
Glaxo
nycil
PRICKLY HEAT
POWDER
SOOTHES AND
PROTECTS THE SKIN
நைஸில்*
கிளாக்ஸோ தயாரிப்பு
*டிரேடு மார்க்
காலையிலே குளித்தபின்...
மேனிமீது தூவித் தெளிப்பீர்
நைஸில் பவுடரை
வேர்க்குரு என்றுல்
வீசை என்ன விலே
என்று கேட்பீர்கள்!
அபரிமிதமான வியர்வையினுல் சருமத் துவாரங்கள் அடைபடும் போது, யாரும் வியர்க்குருவினுல் அவதிப் படுவார்கள் என மருத்துவ ஆராய்ச்சிகள் காட்டுகின்றன, எரிச்சலும் அரிப்பும் ஏற்படுகின்றன; சருமம் பாதிக்கப் படுகிறது. இதனை எதிர்த்துப் போராடும் குளோர் பென்னின் மற்றும் போரிக் பவுடர் அடங்கியது நைஸில் 'ப்ளூ' ஒன்றுதான்-அதோடு உங்கள் சருமத்திற்குப் பாதுகாப்புத் தரும் ஸிங்க் ஆக்ஸைடும் அதில் அடங்கியுள்ளது.
SISTA'S-GN-410-TAM B

கிருஷ்ணய துப்யம் நம:

'சிடகில் தொட்டில் கிழிய உதைத்திடும்' குருகுருத்த குழந்தையாகவும், போக்கிரித்தனம் செய்யும் சிறுபயலாகவும், வெண்ணெய் திருடும் கண்ணனாகவும், காளியன் என்னும் கொடிய விஷப் பாம்பை அடக்கிய வீர பாலகனாகவும், கன்னியர் உள்ளங்களில் காதல் பிரேமையை வளர்த்துத் தவிக்க வைத்து ராதையை மட்டும் மகிழ்விக்கும் பொல்லாதவனாகவும், இணையிடற்ற ருக்மிணியின் காதலை ஏற்று அவள் கரம் பற்றிய வீரக் கணவனாகவும், ஏழைக் குசேலனின் அருமை நண்பனாகவும் — அந்தப் பரந்தாமனைப் பார்க்கும்போது நமக்கு நேரம் போனதே தெரியவில்லை.

கிருஷ்ண பரமாத்மாவின் இத்தனைவிதமான தோற்றங்களை மட்டுமின்றி யசோதையையும், தேவகியையும், வசுதேவரையும், ராதையையும், ருக்மிணியையும், கோபிகைகளையும், குசேலரையும் குமாரி பத்மா ஒருவரே மேடையில் கொண்டு வந்து நிறுத்தி ரசிகர்களைப் பிரமிக்க வைக்கும் நேர்த்தியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவர் முகத்தில்தான் எத்தனை எத்தனை பாவங்கள்! அவர் தனியாக ஆடுவதாகவே நமக்குத் தோன்றவில்லை. அத்தனை பாத்திரங்களும் மேடையில் நம் முன் தோன்றி விளையாடுவதாகவே தோன்றுகிறது.

மேற்கூறிய அபிநயக் காட்சிகளில் திரௌபதி மான சம்ரக்ஷணம் நம் விசேஷ பாராட்டைப் பெறுகிறது.

'' கண்ணபிரான் அருளால் — தம்பி
கழற்றிடக் கழற்றிடத் துணிபுதிதாய்

வண்ணப் பொற் சேலைகளாய் — அவை
வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே''

என்ற பாரதியின் வாக்கை நேரில் பார்க்கிறோம். கண்ணனின் நினைவினில் ஒன்றித் தன்னை மறந்த பாஞ்சாலியையும் பார்க்கிறோம்; முதலில், வீர நடை நடந்து சேலைகளை உரிந்து உரிந்து கை ஓய்ந்து, பின்பு கால்கள் தளர்ந்து தள்ளாடும் கொடியவன் துச்சாதனனையும் பார்க்கிறோம்.

இறுதிக் காட்சி பார்த்த சாரதி அர்ஜுனனுக்குக் கீதை உபதேசம் செய்த காட்சி. போர்க்களத்தையும், வீரர்களையும் பார்க்கிறோம். விசுவரூப தரிசனத்தில் பிரபஞ்சம் முழுவதையுமே காண்கிறோம். மறக்க முடியாத இந்த ஆனந்த அனுபவம் யாரையும் பிரமிப்பில் ஆழ்த்திவிடும்.



''கிருஷ்ணய துப்யம் நம:'' என்னும் இந்த நடன நிகழ்ச்சிக்குரிய கருத்துக்கள்—ஜயதேவரின் அஷ்டபதி, பெரியாழ்வாரின் பாசுரங்கள், நாச்சியார் திருமொழி, நாராயணீயம், குலசேகராழ்வார் பாசுரம், ஸ்ரீமத் பாகவதம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் குசேலோபாக்கியானம் ஆகியவற்றிலிருந்து பொருத்தமாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

இந்த நடன நிகழ்ச்சியின் வெள்ளி விழா அண்மையில் மாண்புமிகு முதல் அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது.

''ஆழி மழைக் கண்ணா'' என்ற பாடலின் அபிநயத்தில் குமாரி பத்மா... ''...வாழ உலகினில் பெய்திடாய்'' — என்ற அடியைச் சொல்லிச் சொல்லி அபிநயம் பிடித்த அழகைப் பாராட்டிய முதல் அமைச்சர், ''இந்த அழகான அபிநயத்துக்காவது வான் மழை இறங்கி வந்து பொழிந்தால் நாட்டுக்கு எவ்வளவு நல்லது'' என்று ஏங்கினார்.

திரு ம. பொ. சி. அவர்களும், டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்களும் குமாரி பத்மாவின் அபிநயக் கலைச் சிறப்பைப் பாராட்டிப் பேசினர்.

குமாரி பத்மா சுப்பிரமணியத்தின் நடன நிகழ்ச்சியின் சிறப்புக்குப் பின்னணி பாடியவர்களையும் குறிப்பிட வேண்டும். நிருத்யோதயாவைச் சேர்ந்த திருமதி சியாமளா பாலகிருஷ்ணன், திருமதி விஜயா நடராஜன் ஆகியவர்களின் இனிய கானம் நடனத்துக்குத் தனிச் சிறப்பைச் சேர்த்தது. இன்னிசையும், லய சுத்தமும், அபூர்வமான அபிநயங்களும் கொண்ட இந் நடன நிகழ்ச்சியைப் பாராட்ட அது வெள்ளி விழாக் கொண்டாடியிருப்பதே போதுமே! — **காந்தன்**



பொன்னியின்

41. புகழ் பெற்ற வீடு

நாட்டுக்கு ஒரு புதல்வர் வாழ்ந்ததால்–ஒரு வீட்டுக்கு அடித்தது யோகம்

ஆசிரியராய்க் கூடு விட்டுக் கூடு பாய்ந்து கொண்டிருந்த கல்கி, குடித்தனக்காரராய் வீடு விட்டு வீடு மாறிக் கொண்டேயிருந்தார். நவசக்தியிலும் ஆனந்தவிகடனிலும் வேலை பார்க்கையில் அவர் குடியிருந்த வீடுகள் எல்லாவற்றையும் எண்ணியோ எட்டியோ பார்ப்பது சாத்தியம் அல்ல; அவசியமும் அல்ல. அதனால்தான் குறிப்பிடத்தக்க வீடுகளை மட்டுமே பார்த்தோம்.

இனி பார்க்க வேண்டிய குறிப்பிடத்தக்க வீடுகளில் ஒன்று, அவருடைய முதலாவது சொந்த வீடு — முதலில் அவரால் ஓரளவும், பின்னர் இன்னொருவரால் பெரும் அளவிலும் புகழ் கொண்ட வீடு.

புது மாம்பலத்தின் வட பகுதி விருத்தி ஆகிக் கொண்டிருந்த காலத்தில் பலரும் போட்டி போட்டுக் கொண்டு அங்கே வீடு கட்டப் பிளாட்டுகள் வாங்கினார்கள். பிரிட்டிஷ் ஆட்சியாளரின் பிரித்தாளும் பிளாட்டுகள், காங்கிரஸ் விரோதிகளின் வஞ்சகப் பிளாட்டுகள், காங்கிரசுக்கு உள்ளேயே நடந்த வெவ்வேறு வேற்றுமைப் பிளாட்டுகள், தாம் எழுதவேண்டிய கதைகளுக்கான விதவிதப் பிளாட்டுகள் இவற்றில் மனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த கல்கி, வீடு கட்டுவதற்கான பிளாட்டின் மேல் சாதாரணமாய் நாட்டம் கொண்டிருக்க மாட்டார். ஆயினும், ராமசாமித் தெருவில் உடன் குடியிருந்த ராஜாஜியின் குமாரர் கிருஷ்ணசாமியின் வற்புறுத்தலின்பேரில் பஸ்லுல்லாத் தெருவில், அவர் வாங்கிய மனைக்கு வலப்புறத்தில், 1933 இறுதியில் கல்கியும் ஒன்றை வாங்கிக் கொண்டார் — ஆயிரம் ரூபாய்க்கு மூன்று கிரௌண்ட்.

கதையைப் போல் கற்பனையால் வீட்டைக் கட்ட முடியாதாகையால், கல்கி வாங்கிய மனை, ஓராண்டுக்கு மேலாகக் காலி மனையாய்க் கிடந்தது. பின்னர் கிராமத்தில் உள்ள தமது நிலத்தின் பேரில் அவர் பணம் புரட்டி வைத்துக் கொண்டு, வீட்டைக் கட்டிப் பார்க்கத் துணிந்தார். அப்படித் துணிந்த பிறகோ வேண்டிய ஆயத்தங்கள் செய்வதற்கும், கட்டிட வேலையைப் பார்வையிடுவதற்கும் அவருக்கு நேரம் இல்லை. ஆனந்த விகடன், பிராட்வேயில் பெரிய கட்டிடம் ஒன்றில் அலுவலகம் கொண்டு அவர் பிளாட் வாங்கிய அதே சமயம் வாரத்துக்கு ஓர் இதழாகப் பல்கியதை யடுத்து, அதன் மெய்யாசிரியருக்கு மெய்யாகவே மூச்சுத் திணறும்படி வேலைகள் பெருகியிருந்தன.



புதல்வர்



சுந்தா

அந்தத் திறமையுடன் வீட்டைக் கட்டு வது எப்படி என்று அவர் திகைத்துக் கொண்டிருக்கையில், அவருடைய பாலிய நண்பர் சுப்பிரமணியம் உதவி செய்ய முன் வந்தார். மாயவரத்தில் குடியேறிக் கட்டிடங்கள் கட்டுவதில் ஈடுபட்டு அநுபவம் பெற்றிருந்த அந்த நண்பர், தமது சொந்த வேலைகளையெல் லாம் கட்டி வைத்துவிட்டு, சென்னைக்கு வந்து கல்கியுடன் தங்கியிருந்து, பினான் போடுவது முதல், மேல் பூச்சுப் பூசி வெள்ளை அடிக்கிற வரை எல்லாவற்றை யும் அக்கறையுடன் கவனித்து, வசதி யான வீடு ஒன்றை மிகச் சிக்கனமாய் ஒன்பதாயிரம் ரூபாய் செலவில் கட்டிக் கொடுத்தார். மற்ற வசதிகளுடன், தமது நண்பர் நிம்மதியாய் எழுதுவதற் கேற்ற அறை, ஊஞ்சல் ஆடுவதற்குக் கூடம், உலாத்துவதற்குத் தாழ்வாரம் ஆகியவற்றை அமைத்துக் கொடுத் தார்.

அந்தச் சொந்த வீட்டில் குடிபுகுந்த தற்குச் சில வாரங்களில் கல்கி புத்திர பாக்கியம் அடைந்தார். 1935 ஆகஸ்டு 20-ம் தேதி ராஜேந்திரன் பிறந்தான்.

அந்த ஆண்டு எந்தக் காங்கிரசின் இயக்கங்களில் எல்லாம் சொல்லாலும் செயலாலும் கல்கி ஈடுபட்டிருந்தாரோ, அந்தக் காங்கிரஸின் பொன் விழாக் கொண்டாட்ட ஆண்டாக அமைந்தது. அந்த விழாவைப் போற்றிக் கல்கி அவருடைய அந்தக் காலத்துப் பாணி யில் தலையங்கம் ஒன்றை எழுதினார்:

பாரத நாட்டுக்கு இந்த நாளில் இரண்டு கதிகள்தான் உண்டு. ஒன்று கடவுள்; இரண் டாவது, காங்கிரஸ்.

இவற்றில் கடவுளைவிடக் காங்கிரஸே நம்பு வதற்கு உரியது எனலாம். எப்படியெனில், கடவுளுக்குச் சம்சாரம் அதிகம்; இந்தப் பாரத தேசம் மட்டுமின்றி இன்னும் எத்தனையோ தேசங்கள், கண்டங்கள், அண்டங்கள் அவர் காப்பதற்கு இருக்கின்றன. ஆனால் காங் கிரஸுக்கோ இந்தியாவின் கதி மோக்ஷத் தைத் தவிர வேறு கவலை கிடையாது...

அப்படிப்பட்ட காங்கிரஸின், ஐம்பதாவது ஆண்டு நிறைவு இவ்வருஷம் நேர்கிறபடியால் தேசமெங்கும் காங்கிரஸ் பொன்விழா கொண் டாடுகிறோம். (கடவுளுக்கு ஏன் பொன் விழாக் கொண்டாடவில்லை என்று கேட் டாலோ, அவருடைய வயது இன்னும் நிர்ணயமாகாது இருப்பதுதான் காரணம். போர்வழி பிறந்த வருஷம் மாதம் தேதி ஒரு வருக்கும் தெரியாது. ஜாதகம் கணிக்கப் பட்டதாகவும் தெரியவில்லை.)

கடவுளுக்கு ஆதியும் அந்தமும் இல்லை. காங்கிரஸுக்கு ஆதி உண்டு; அந்தமில்லை. அநுமாரைப் போல் காங்கிரஸ் சிரஞ்சீவிப் பட்டம் பெற்று விட்டது. பாரத மக்கள் இழந்த சுதந்திர தேவியை மீட்டுக் கொடுத்து, என்றைக்கும் அழியாதபடி பாரத சந்ததி களின் உள்ளத்தில் அது நிலைபெறப் போகிறது.... (ஆனந்த விகடன் 29-12-'35)

இதற்குச் சுமார் இரண்டு மாதங் களுக்கு முன்னால் காங்கிரஸ் தலைவர்





1. மகாத்மா காந்தி எனும் சூரியனிடமிருந்து குளிர்ந்த ஜோதியைப் பெற்ற ராஜன் பாபு. 2. வீட்டுக்கும் புகழ் தேடித் தந்த நாட்டுக்கொரு புதல்வர். 3. சொந்த வேலைகளைக் கட்டி வைத்துவிட்டுக் கல்கியின் வீட்டைக் கட்ட வந்த ஆர். கே. எஸ். 4. உமா குடிலேயாரி என்ற தலைப்பு மின்ஸ் சாண்டிரியின் உபமாதுகள். 5. கல்கியால் 'தம்பி' என்று அழைக்கப்பட்ட ராஜேந்திரன்.

ராஜேந்திரப் பிரசாத், சென்னைக்கு வருகை புரிந்தார். அவரை வரவேற்கும் கல்கியின் தலையங்கத்திலிருந்து—

சந்திரனைப் போல் சகல ஜனங்களுக்கும் குதூகலம் அளிப்பவரான நமது காங்கிரஸ் தலைவர், மகாத்மா காந்தி என்னும் சூரியனிடமிருந்து தமது குளிர்ந்த ஜோதியைப் பெற்ற தியாகமூர்த்தி பாபு ராஜேந்திரப் பிரசாத்.

சந்திரன் வருகை, சகல ஜீவராசிகளுக்கும் எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்குமோ அவ்வளவு ஆனந்தம் ராஜேந்திரரின் வருகையினால் சென்னை வாசிகள் அனைவருக்கும் ஏற்படப் போகிறதென்பதில் சந்தேகமில்லை.

சந்திரன் எல்லா ஜீவஜந்துக்களுக்கும் இன்பம் தருகிறான். பட்சிகளும் விருட்சங்களும் கூடச் சந்திரன் வருகையால் களித்துக் குதூகலமடைகின்றன. அவனுடைய வரவை நோக்கிச் சமுத்திரம் பொங்கி எழுகின்றது. உலகமே ஆனந்த மயமாய்க் காண்கிறது. குழந்தைகூடக் கைநீட்டி அம்புலி மாமா வா வாவென்று அழைக்கின்றது...

(ஆனந்த விகடன் 13-10-'35)

இவ்வாறு ராஜேந்திரரின் வருகையை அவரைச் சந்திரனுடன் ஒப்பிட்டுக் கொண்டாடியதுடன், அவர் பெயரையே தம் மகனுக்குச் சூட்டியும் கொண்டாடினார் கல்கி. ராஜாஜியின் பெயரை அவனுக்கு இடாமல் போனோமே என்று பிறகு நினைத்தாரோ என்னமோ; உபநயனத்தின் போது, ''ராஜகோபால சர்மா'' என்று அவனுக்கு நாமகரணம் செய்தார். ஏற்கெனவே அவனுக்கு இரண்டு பெயர்களுக்கும் பொதுவான ''ராஜா'' என்பது செல்லப் பெயராகி விட்டது. அத்துடன் ''தம்பி'' என்பதும், அப்படி அவனைக் கல்கி கூப்பிட்ட காரணத்தால் சேர்ந்து கொண்டது.

கல்கி வீட்டின் இலக்கம் முதலில் 48 ஆக இருந்து பிறகு 60 ஆக மாறியது. அந்த வீடு கட்டி முடிந்த அதே சமயத்தில் அதற்கு இடப்புறத்தில் ராஜாஜியின் குமாரரும் வீடு கட்டிக் குடியேறி விட்டார். ஆகவே, அவருடைய குடும்பத்தாரின் ஒட்டுறவு கல்கி குடும்பத்துக்குத் தொடர்ந்து கிடைத்து வந்தது. அத்துடன், குமாரர் வீட்டில் ராஜாஜி தங்க வந்தபோதெல்லாம், அவருடைய அன்பும் ஆதரவும் தொடர்ந்தன.

வலது பக்கத்து மனையில் ஆர். வி. சாஸ்திரி வீடு கட்டிக் கொண்டார். அவர் யார் என்பதை, அவரைப் பூனாவில் லக்ஷ்மி — தேவதாஸ் திருமணத்தின் போது சந்தித்த பிறகு கல்கி அறிமுகப்படுத்தி எழுதியதன் மூலமே தெரிந்து கொள்ளலாம்:

''நமது தேசம் நிச்சயமாய்க் கதிமோட்சம் அடையுமென்று நான் தளராத நம்பிக்கை கொண்டிருப்பதேன்? இவரைப் போல் தியாகம் செய்யக் கூடியவர்கள் நம் நாட்டில் இருப்பதால்தான்'' என்று மகாத்மாஜி ஒருவரைப் பற்றிப் பேசும்போது கூறினார். அவ்வாறு மகாத்மாவுக்கு நம்பிக்கை ஊட்டியவர் ஒரு தமிழர் என்றால் நமக்கெல்லாம் பெருமை அல்லவா? இந்தத் தமிழர் ஸ்ரீமான் ஆர். வி. சாஸ்திரி. (காந்திஜி நிறுவிய) ஆங்கில ஹரிஜன் பத்திரிகையின் ஆசிரியர். இவரைப் பற்றிக் கொஞ்ச காலமாகத் தெரியுமானாலும் இப்போதுதான் முதன் முதலாகச் சந்தித்தேன்.

சாஸ்திரியார் ஜெம்ஷெட்பூர் டாடா கம்பெனியில் பிரதம கணக்காயரா யிருந்தார். சம்பளம் ரூ. 1000. இவருக்கும் இவரது மனைவியாருக்கும் தேச ஊழியம் முதலிய காரியங்களில் வெகு காலமாகவே பைத்தியம் உண்டாம். கடைசியாக ஒரு நாள் பைத்தியம் முற்றிற்று. ஆயிரம் ரூபாய் உத்தியோகத்தை விட்டுவிட்டு ஹரிஜனத் தொண்டு செய்ய விரும்பினார் சாஸ்திரி. (அப்போது ஹரிஜனத் தொண்டில் ஈடுபட்ட பெருந் தலைவர்) டக்கர் பாபா, அவரைக் காந்திஜியிடம் கொண்டு சேர்த்தார்.

பர்ணகுடியிலும் இந்திய ஊழியர் சங்கத்திலும் ஸ்ரீமான் சாஸ்திரியாருடன் பல மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன். இவருடைய பைத்தியம் ஹரிஜனத் தொண்டு மட்டும் அல்லவென்றும், தமிழ் மொழி வளர்ச்சி, நாடகமேடை புனருத்தாரணம் முதலிய ரகவாரியான பைத்தியங்கள் அநேகம் அவருக்கு உண்டென்றும் தெரிந்தது.

''இவ்வளவு பைத்தியங்கள் உள்ள ஆசாமிக்குப் பூனாவில் என்ன வேலை? தமிழ் நாட்டுக்கு வந்து எங்கள் கோஷ்டியில் அல்லவா சேர வேண்டும்'' என்று கேட்டேன். ''மகாத்மா அநுமதி கொடுத்ததும் வந்து விடுகிறேன்'' என்று சாஸ்திரியார் எனக்கு வாக்களித்தார். (ஆனந்த விகடன் 10-7-'33)

வாக்களித்தபடியே அவர் சென்னைக்கு வந்துவிட்டார். வந்தவருக்கு அவர் பதிப்பித்த பத்திரிகையின் பெயரையொட்டி, ''ஹரிஜன் சாஸ்திரி'' என்ற விசித்திரமான பெயர் உண்டாகி வழங்கிற்று. அதையடுத்து, அவருடைய மனைவி விசாலாட்சி அம்மாளின் பெயரும், ''மிஸஸ் ஹரிஜன் சாஸ்திரி'' என்றாயிற்று. அத்துடன் அவருக்குக் காந்திஜி கொடுத்திருந்த ''ஸேவிகா'' என்ற பெயரும், அவர் எழுதிய சிறுகதைகளுக்குப் புனைபெயராய் அமைந்தது.

முதலில் ஆனந்த விகடனிலும் பின்னர் சொந்தப் பத்திரிகையிலும் வாசகர்



முன்பெல்லாம் நாம் இருவரும் ஒப்புக்கொள்வோம் நான் நீயாக இருக்கிறேன், நீ நானாக இருக்கிறாய் என்று. ஓ! இன்று நமக்கு என்ன நேர்ந்து விட்டது! நான் நானாக இருக்கிறேன், நீ நீயாக இருக்கிறாய்! —ரவீந்திரநாத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது

'டெபிலைஸ்ட்'

துணிகளுக்கு ஒரு மகத்தான பலனைச் சேர்க்கிறது— சுருக்கம் விழாமலிருக்கின்றன



சுத்தமான பருத்தி துணிகளுக்கும் அல்லது காட்டன் சிந்தடிக் கலந்த துணிகளுக்கும் ''டெபிலைஸ்ட்'' ஒரு மகத்தான பலனைச் சேர்க்கிறது. சுருக்கம் விழாத தன்மைக்கென சோதிக்கப்பட்டது உங்கள் துணிகளுக்கு மிகக் குறைவான இஸ்திரி செய்வதுடன் பார்ப்பதற்கும் மிக அழகாக உள்ளது.

''டெபிலைஸ்ட்'' எனும் வியாபாரச் சின்னம் உலகப் புகழ் பெறுவதுடன் இந்தியாவில் உள்ள முதன்மையான மில்களான அரவிந்த், பின்னி, டி.ஸி.எம், பாம்பே டையிங், ஸ்ரீ அம்பிகா தாகர்ஸே, மற்றும் டாட்டா, மபத்லால் தயாரிக்கும் தரமான துணிகளுடன் திகழ்கின்றது.

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மீட்டர் துணியிலும் **TEBILIZED**® மார்க் இருக்கிறதா என்று பார்த்து வாங்கவும்.

TEBILIZED® சுருக்கம் விழாத தன்மைக்கென சோதிக்கப்பட்டது.

® ரெஜிஸ்டர்ட் டிரேட் மார்க்கின் உரிமையாளர்கள்
மேட்டூர் பியர்ட்ஸெல் லிட்.
தபால் பெட்டி எண், 7, சென்னை-1.

SISTA'S-MBT-190-TAM-A

களுடன் நேராகப் பேசுவதற்காக, கல்கி உபயோகித்த பத்தியின் "உபயகுசலோபரி" என்ற தலைப்பு, மிஸஸ் சாஸ்திரியின் உபயமாகும். பூனாவிலிருந்து அந்த அம்மாள் கல்கிக்கு எழுதிய பாராட்டுக் கடிதங்களில், நலம் அறிவித்து நலம் விசாரிப்பதான அந்த வட மொழிச் சொல்லைக் கையாண்டிருந்தார். அதைக் கண்ட கல்கி அதையே ஆசிரியர் குறிப்புக்களுக்குத் தலைப்பாகக் கொண்டார். 1—3—33 ஆனந்த விகடன் இதழில் அந்தத் தலைப்பை முதல் தடவையாக உபயோகித்தபோது, அதை விளக்கியே ஒரு குறிப்பு எழுதியிருந்தார்.

சாஸ்திரி தம்பதியர் இலக்கியத்திலும் இசையிலும் நேர்த்தியான ருசியும் நல்ல தேர்ச்சியும் கொண்டிருந்தார்கள். தமிழ்ப் பாடல்களை மனைவி உணர்ச்சி பாவத்துடன் பாடக் கூடியவர்; கணவர் கதாகாலட்சேபம் செய்தவர். கல்கியின் எழுத்து வன்மையை இருவரும் பாராட்டி, அவருடைய இலக்கியப் படைப்பு முயற்சிகளுக்கு ஊக்கம் ஊட்டினார்கள். இலக்கியத் துறையிலும் இசைத் துறையிலும் அவர் கொண்ட ஈடுபாடுகளிலும், செய்ய முயன்ற சீர்திருத்தங்களிலும் அவர்கள் பங்கு பற்றி அவருக்குப் பக்க பலம் அளித்தார்கள்.

சாஸ்திரியார் வீட்டு மேல் மாடி, டி. கே. சி.யின் வட்டத்தொட்டி மாதிரியில் ஒரு சதுரத் தொட்டியாக விளங்கிற்று. சங்கீத, நாட்டியக் கச்சேரிகளுக்குக் கல்கியுடன் போகாத மாலை வேளைகளில் அங்கே, சாஸ்திரி தம்பதியர், நண்பர்களை வரவேற்றுப் பேச்சுக் கச்சேரி நடத்தினார்கள். அரசியல் வேலை இல்லாதபோது, ராஜாஜியும் அதில் கலந்துகொள்வதுண்டு. ரசிகமணியின் குழாத்தைப் பற்றி ஒரு சமயம் கல்கி சொன்னது, சாஸ்திரியாரின் அரங்குக்கும் பொருந்தும்: "பரதத்துவத்திலிருந்து பப்படம் வரையில், தொல்காப்பியத்திலிருந்து தமிழ் டாக்கி வரையில், பகவத்கீதையிலிருந்து பரத நாட்டியம் வரையில் அங்கே அடிபடாத விஷயமே கிடையாது."

வசித்தவர்களின் சிறப்பால் பிரபலமாகியிருந்த அந்த மூன்று வீடுகளில், நடு வீட்டில் வசிக்கும் பெருமைகொண்டிருந்த கல்கி, 1937 மத்தி வாக்கில், அந்தப் பெருமையை விட்டுக் கொடுத்து ரங்கநாதன் தெருவில் வாடகை வீடு ஒன்றுக்குப் பெயர்ந்து சென்றார். அரசியல் நிலை மாற்றத்தாலும் ராஜாஜியின் சௌகரியத்துக்காகவும் நேர்ந்த அந்த ஜாகை மாற்றம், கல்கி கட்டிய வீட்டுக்குப் பெரும் புகழை அளித்தது.

காங்கிரஸ் கட்சி, ஒத்துழையாமைக் கொள்கையை விடுத்து, சட்டசபைகளைக் கைப்பற்றி, மட்டான சுயாட்சி உரிமையை ஒரு கை பார்ப்பது எனத் தீர்மானித்ததன பயனாய், ராஜாஜி சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றார். தேர்தல் முதல் பதவி ஏற்பு வரை, ராஜாஜியின் பக்கத்தில் இருந்து, அவருடைய யோசனைகளில் கலந்து கொண்ட கல்கிக்கு ஒரே ஆனந்தம். எவ்வளவு ஆனந்தம் என்பதை, 18—7—37 ஆனந்த விகடனில், "நமது சர்க்கார்" என்ற மகுடத்துடன் அவர் எழுதிய தலையங்கத்தைக் கொண்டு அளந்து பார்க்கலாம்:

இந்திரா சோஷலிஸம்!

மோகன் தாரியாவும், புரட்சி இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த கிருஷ்ணகாந்தும் சென்னை கோகலே மண்டபத்தில் உரை நிகழ்த்தினார்கள். இருவர் சொன்ன இரு கருத்துக்கள்:

"பெரிய வர்த்தக நிலையங்களைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவும் சட்டம் இயற்றப்பட்டது. இந்திரா ஆட்சியில், சட்டம் இயற்றப்பட்ட போது பெரிய வர்த்தக நிலையங்கள் 75 இருந்தன என்றால் இப்பொழுது சட்டம் இயற்றப்பட்ட பின்னர் 95 இருக்கின்றன! இதுதான் இந்திரா சோஷலிஸம்!" என்றார் கிருஷ்ணகாந்த்.

ஜப்பானில் ஒரு நண்பரின் விருந்தினராகத் தாரியா தங்கியிருந்தார். புத்தர் ஆலயமொன்றில் சிலர் பிண்டங்கள் செய்து தமது மூதாதையருக்கு வழங்குவதைக் கண்டார்.

"உங்களுக்கும் இந்த வழக்கத்தில் நம்பிக்கை உண்டா?" என்று தாரியா நண்பரைக் கேட்டார்.

"உண்டு" என்றார் நண்பர்.

"அப்படியானால் சீக்கிரம் ஓர் ஆண் மகனைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தற்சமயம் ஒரே மகள்தானே இருக்கிறாள்?" என்றார் தாரியா.

"அதுதான் முடியாது!" என்றார் அந்த ஜப்பானிய நண்பர். "என் மனைவி ஒரு குழந்தைக்கு மேல் பெற்றெடுப்பதில்லை என்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டிருக்கும் மகளிர் சங்கத்தின் உறுப்பினர்!"

"இப்படித் தேசப் பற்று மிக்க மகளிர் சங்கங்கள் நம் நாட்டிலும் ஏற்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றார் தாரியா கோகலே ஹால் கூட்டத்தில்.


மோகன் தாரியா

சென்ற 14ந் தேதி புதன்கிழமையன்று நமது சென்னை மாகாணத்தில் அதிகாரவர்க்க ஆட்சியும், வகுப்புவாத ஆட்சியும் வீழ்ந்து, காங்கிரஸ் ஆட்சி ஆரம்பமாயிற்று. முதன் முதலில் காங்கிரஸ் ஆட்சி ஏற்படும்போது, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியாரை அரசாங்கத் தலைவராய்ப் பெறும் மகா பாக்கியத்தை நாம் அடைந்திருக்கிறோம். இந்த விஷயத்தில் மற்றக் காங்கிரஸ் மாகாணங்களைக் காட்டிலும் சென்னை மாகாணம் அதிர்ஷ்டம் செய்தது என்பதில் சந்தேகமில்லை. கௌதம புத்தரின் தியாகமும், சங்கராச்சாரியாரின் மதி நுட்பமும், இராமாநுஜரின் தயாளமும், பட்டினத்தடிகளின் வைராக்கியமும் சேர்ந்து உருவெடுத்தது போன்று, இன்றைய தினம் தென்னாட்டுக்கே பெருமை அளித்துக் கொண்டிருப்பவர் நமது ராஜாஜி. அவர்தான், மந்திரி சபைகளைக் காங்கிரஸ் கைப்பற்றும் வேலைத் திட்டத்தையே சாத்தியமாகச் செய்தார். ராஜாஜியைப் போன்ற ஒருவர் இந்த வேலையைத் தாமே மேற்கொண்டு நடத்த முன்வந்ததினால்தான் காங்கிரஸ் காரியக் கமிட்டியார் மந்திரி வேலை ஏற்கும் திட்டத்தை ஒப்புக் கொண்டார்கள். நமது சென்னை மாகாணத்துப் பொதுமக்களின் ஒருமுகமான விருப்பத்தை நிறைவேற்றி வைப்பதற்கென்றே அவர் இந்த முயற்சியில் தலையிட்டார். அதற்காகவேதான் அவர் தமது வாழ்வு நெறிக்கும் ஜீவிய லட்சியத்துக்கும் மிகவும் தாழ்ந்து கிடப்பதான மாகாண மந்திரி வேலையை இன்றைய தினம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்...

''நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்'' என்பதாக நமது தேசியக் கவி ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார் தமது அருள்வாக்கினால் கூறினார். இன்னும் அந்த வாக்கு பூரணமாய்ப் பலிக்கவில்லைதான். ஆனாலும் இன்றைய தினம் ''நாம் எல்லோரும் இந்நாட்டு மந்திரிகள்'' ஆகி இருக்கிறோம். தலைவர் ராஜாஜி அப்படி நமக்கு உறுதி கூறியிருக்கிறார். ''காங்கிரஸ் மகாசபை மந்திரி வேலை ஏற்றுக் கொள்ளும்போது தேசத்தில் உள்ள ஒவ்வொருவரும் மந்திரி வேலை ஏற்றுக் 'கொள்கிறார்கள்'' என்று அவர் தெரிவித்தார்....

தேர்தலுக்கு ஆயத்தங்கள் தொடங்கியபோதே, அவை சம்பந்தமான வேலைகளைக் கவனிக்கவும், அதிகமான ஆட்களின் போக்குவரத்தைச் சமாளிக்கவும், குமாரருடைய இல்லத்தில் ராஜாஜிக்கு இட வசதி போதாது என்பதைக் கண்ட கல்கி, தம் வீட்டை அவருக்குக் காலி பண்ணிக் கொடுக்க முன்வந்தார். அந்தச் சமயத்தில் சேத் ஜம்னலால் பஜாஜ், கல்கியின் வீட்டை அடக்க விலைக்கு வாங்கி ராஜாஜிக்கு வசிக்கக் கொடுத்தார். ராஜாஜி வற்புறுத்திய தன் பேரில் அதற்கு மாதம் இருநூறு ரூபாய் விதம் வாடகை வாங்கிக்கொண்டார். சில ஆண்டுகளுக்குப் பிறகு, ஜம்னலால் பஜாஜின் குமாரர் அந்த வீட்டை ராஜாஜிக்குக் கிரயம் செய்தே கொடுத்து விட்டார்.

ராஜாஜியின் மூலம் தமது முன்னாள் வீடு, எவ்வளவு புகழ் அடையலாயிற்று என்பதைக் கல்கி எண்ணி எண்ணிப் பெருமைப்பட்டுக் கொண்டே இருந்தார். அந்தப் புகழை எடுத்துச் சொல்ல 1940ன் இறுதியில் வாய்ப்பு உண்டாயிற்று.

பிரதம மந்திரி பதவியை ராஜாஜி துறந்து தனி நபர் சத்தியாக்கிரகத் திட்டத்தின்படி சிறை புகுந்தார். அவருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த அந்த முக்கியமான கட்டத்தைப் பற்றி நீண்டதொரு கட்டுரை எழுதினார் கல்கி. அதன் தொடக்கத்தில் வருகிறது அந்த இல்லத்தின் பெருமை:

மனிதர்களுக்கு யோகம் வருவது போல், ஊர்களுக்கும் வீதிகளுக்கும் கூட யோகம் வரும்போலிருக்கிறது. தியாகராஜ நகரில் உள்ள பஸ்லுல்லா சாலை சென்ற நாலு வருஷங்களாகப் பெரிய யோகத்தை அனுபவித்து வருகிறது. இந்த வீதியில் காங்கிரஸ் நிறமான மஞ்சள் வர்ணம் அடித்த ஒரு சிறு வீட்டை, ராஜயோகம் பெற்ற வீடு என்றே சொல்ல வேண்டும். சுமார் நாலு வருஷங்களுக்கு முன் ராஜாஜி அந்த வீட்டுக்குக் குடி வந்ததுதான் அதன் யோகத்துக்குக் காரணம்.

இந்த நாலு வருஷ காலத்தில் அந்த வீட்டிலிருந்து நாட்டின் வாழ்க்கையையே மாற்றி அமைக்கக் கூடிய எத்தனை எத்தனை காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன! புதிய மாகாண சட்டசபைகளுக்குத் தேர்தல் நடந்தபோது, அநுமார் படம் போட்ட கவர் விளம்பரங்கள் முதற்கொண்டு தேர்தல் பிரசாரத் திட்டங்கள் எல்லாம் இந்த வீட்டுக்குள்ளிருந்துதான் கிளம்பின. தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்கள் மகத்தான வெற்றிகள் அடைந்ததும், சந்தோஷ சமாசாரத்தைச் சொல்லி ஆசி பெறுவதற்கு இந்த வீட்டை நோக்கித்தான் விரைந்து வந்தார்கள். சென்னை மாகாணத்துக்கு மந்திரி சபை அமைக்கும்படியாக கவர்னர் பிரபுவின் அழைப்பை எடுத்துக் கொண்டு, தங்கப் பட்டை தரித்த சேவகர்கள் இந்த வீட்டைத்தான் தேடி வந்தார்கள். ராஜாஜி இங்கிருந்து கிளம்பிச் சென்றுதான் வார்ட் எர்ஸ்கினைக் கண்டு, ''மந்திரிகளின் காரியங்களில் தலையிடுவதில்லை என்று வாக்குறுதி கொடுத்தால்தான் மந்திரி சபை அமைக்க முடியும்'' என்று சொல்லி விட்டு வந்தார்.

பிறகு அற்பாயுஸ் மந்திரி சபை ஏற்பட்டு மூன்றரை மாதங்கள் நடந்த காலத்தில், அரசியல் சட்டத்துக்கு மாறான அந்த மந்திரி சபையின் மீது சரமாரியான பாணங்கள் இந்த பஸ்லுல்லா சாலை 48ம் நம்பர் வீட்டிலிருந்துதான் கிளம்பின. அந்தக் காலத்தில்



நம் பெற்றோர்களை முட்டாள்கள் என்றும் நாம் புத்திசாலிகள் என்றும் நாம் நினைக்கிறோம். - சந்தேகமில்லை, நம்மைவிடப் புத்தி கூர்மையான நம் பிள்ளைகளும் இப்படித்தான் நினைக்கப் போகிறார்கள்.

—யாரோ

ராஜாஜி செய்த தீவிரக் கிளர்ச்சியானது இந்த மாகாணத்தை மட்டுமின்றி இந்திய நாடு முழுவதையுமே கலக்கி விட்டது. அதனுடைய வேகம் சீமைக்கும் சென்று எட்டியது. கடைசியில் காங்கிரஸ் கோரிய நிபந்தனைகளை பிரிட்டிஷ் சர்க்கார் ஒப்புக் கொண்டார்கள்.

இரண்டாவது முறையும் தங்கப் பட்டை தரித்த கவர்னரின் சேவகர்கள் இந்த எளிய வீட்டை நோக்கி வந்தார்கள். இந்தத் தடவை ராஜாஜி கவர்மெண்ட் மாளிகைக்குச் சென்று பிரதம மந்திரி வேலையை ஒப்புக் கொண்டு திரும்பி வந்தார்.

பிறகு, சுமார் இரண்டே கால் வருஷ காலம் இந்த வீட்டின் வாசலில் வில்லை தரித்த சர்க்கார் சேவகர்கள் நின்று, வரு கிறவர்களையெல்லாம் கும்பிடு போட்டு அழைத்து உள்ளே விட்டுக் கொண்டிருந் தார்கள். ''யார்? நில்!'' என்று அதட்டும் பழைய சம்பிரதாயம் அவர்களுக்கு மறந்தே போய்விட்டது.

நாட்டு மக்களின் வாழ்வு தூய்மையும் மேன்மையும் அடைவதற்குரிய புதிய புதிய மசோதாக்களும், உத்தரவுகளும், அறிக்கை களும் இந்த 48ம் நம்பர் வீட்டிலிருந்து புறப்பட்டுக் கொண்டே இருந்தன.

பிரசித்தி பெற்ற மதுவிலக்குச் சட்ட மசோதா இந்த வீட்டிலேதான் தயாரிக்கப் பட்டது.... உலகப் பிரசித்தி பெற்ற ஹரிஜன ஆலயப் பிரவேச உத்தரவும் இந்த வீட்டி லிருந்துதான் கிளம்பியது... இன்னும் கடன் நிவாரண மசோதா முதலிய பொது நன்மைக் குரிய பல மசோதாக்களும் இங்கேதான் ஜனனமாயின.

இவ்வளவு மகத்தான காரியங்களை யெல் லாம் ராஜாஜி அந்தச் சிறு வீட்டில் தரையில் விரித்த பாயில் உட்கார்ந்து கொண்டோ, ஊஞ்சலில் சங்கிலியை இணைத்துப் போட் டிருந்த பலகையில் சாய்ந்து கொண்டோ தான் செய்து முடித்தார்...

(ஆனந்த விகடன் 8-12-'40)

கல்கி எழுதியுள்ள ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றில், ''நாட்டுக்கு ஒரு புதல்வர்'' என்ற மகுடப் பெய ருடன் அத்தலைவர் திகழ்ந்தார். அந்த நாட்டுக்கு ஒரு புதல்வரின் புகழிலே பொன்னியின் புதல்வருக்குப் பங்கும் பெருமையும் உண்டு; அவர் வசித்த வீட்டின் புகழிலும் உண்டு. (தொடரும்)

பரீட்சைகள் முடிந்திருக்கும் சமயத்தில்......

கிண்ணனுகவும் ஆண்டாளாகவும் வேஷமணிந்து நடனமாடும் இந்த அழகிய குழந்தைகள் யார்? சென்னை அரும்பாக்கம் கோலப்பெருமாள் செட்டி வைணவப் பள்ளியில் படிப்பவர்கள். அங்கு நடந்த கோகுலாஷ்டமிக் கொண்டாட்டத்தின்போது எடுத்த படம்.

கோலப்பெருமாள் செட்டியார் சென்னையில் பிரபலமான வணிகர். அவருக்குப் பகவான் நிறைய செல்வத்தைக் கொடுத்திருந்தும் ஏனோ மழலைச் செல்வத்தை வழங்கவில்லை. ஒருவேளை ஊர்க் குழந்தை களுக்கு இவரது செல்வம் பயன்பட வேண்டும் என்பது இறைவனின் திருவுளம் போலும்!



திரு கோவிந்ததாஸ்

மூன்று லட்சம் ரூபாய் நிதியைக் குழந்தைகள் கல்விக்காக ஓசைப்படாமல் வழங்கினார் கோலப் பெருமாள் செட்டியார். அவரது ஆசையைப் பூர்த்தி செய்ய ஒரு நல்ல நண்பரும் கிடைத்தார். சென்னை அரும்பாக்கத்தில் வைணவக் கல்லூரியை நிறுவிக் கல்விப் பணியில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீ வல்லபாசார்ய வித்யாலயா சபையைச் சேர்ந்த கோவிந்ததாஸ் புருஷோத்தம தாஸ்தான் அவர்! ஸ்ரீ வல்லபாசார்ய வித்யா சபை உதவியுடன் ஸ்ரீ கோலப்பெருமாள் செட்டியாரின் நன் கொடையும் சேர்ந்து கோலப்பெருமாள் செட்டி வைணவப் பள்ளி உருவாயிற்று. சென்னை அரும்பாக்கத்தில் வைணவக் கல்லூரிக்கு அருகி லேயே கட்டடம் எழுந்தது. ஆறு லட்சம் ரூபாய் செலவில்! -பி.எஸ்.எம்.

ஒரு பள்ளி பிறந்த கதை



திரு கோலப்பெருமாள் செட்டி



''ஊருக்கு ராஜாவாக இருந்தால் என்ன? வீட்டிலே பிள்ளைதானே?'' — என்று சொல்வார்கள். (ராஜா என்று என்னை நானே அழைத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்கு நீண்ட நாட்களாகவே ஓர் ஆசை உண்டு.) அது என்னைப் பொறுத்தவரையில் உண்மை. எனக்கு நன்கு அறிமுகமான நாடக, திரை உலக நண்பர்கள், ரசிகர்கள் என்னைச் சந்திக்கும் போது நான் எழுதிய திரைப் படங்களில் என் நகைச்சுவை வசனங்களைப் பாராட்டியிருக்கிறார்கள். குறிப்பாக நண்பர் 'சோ' அவர்கள் ''உன் காமெடியை ரசித்து நானே பொறாமைப்பட்டிருக்கிறேன்'' என்று கூறி, ''உன் உடல் நலத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள். உன்னை அசைக்கவே முடியாது'' என்று உண்மை நண்பன் என்ற முறையில் என்னைப் பாராட்டினார். உடனே நான் ''சினிமாத் துறையில் உடல் நலத்தைப் பற்றியெல்லாம் கவனிக்க நேரம் ஏது, அப்பா?'' என்று சிரித்துச் சமாளித்து விட்டேன்.

எனக்கு இந்த நேரத்தில இவ்வளவு புகழ் இருந்தும் நான் வீட்டுக்கு வந்தால், அதைப் புரிந்து கொள்ளுபவர் மிகச் சிலரே. இந்த வகையில் என் முதல் எதிரி என் மாமனார் அவர்கள். மாமனாரை 'அவர்கள்' என்று ஒரு பதத்தைச் சேர்த்துக் குறிப்பிடாவிட்டால் என் மனைவியின் கோபம் என்னைத் தாக்குமோ என்னவோ? எதற்கு வீண் வம்பு....?

இன்றும் என் மாமனார், தம் பெண்ணிடம், ''மாப்பிள்ளைக்கு எந்த ஆபீஸில் வேலை? பர்மனென்ட்டானு? பிராவிடென்ட் பண்ட் உண்டா? பென்ஷன் உண்டா?'' என்று கேட்டுக் கொண்டுதான் இருக்கிறார். அவரை நான் என்ன செய்வது? எப்படி அவருக்கு விளக்குவது? ஆக எனக்கு எவ்வளவு புகழ் தந்தாலும், என்னுடைய இந்த வேலை எனக்குப் பெண்ணைத் தந்தவருக்குத் திருப்தி தரவில்லை என்பது தெரிகிறது.

இவர்தான் இப்படி என்றால் எங்கள் வீட்டில் குடி இருக்கும் ஒரு குடித்தனக்காரர் தனி ரகம்.... நான் தினமும் காரில் போகிறேன்.... வருகிறேன். (ஐ மீன், சினிமாக் கம்பெனிக் கார்களில்) அந்தக் குடித்தனக்காரர் அதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். அவர் ஏதோ ஒரு பையுடன் தினமும் போய் வருவதை நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ஒரு நாள் ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் இருவரும் சந்திக்க நேர்ந்தது. அவர் முதலில் பேசட்டும் என்று நான் மௌனமாக இருந்தேன். அவருக்கும் அதே எண்ணம் ஏற்பட்டு விட்டது. அவர் முகத்தை நானும், என முகத்தை அவரும் பார்த்துக் கொண்டு, அதாவது ஒருவரை யொருவர் முறைத்துக் கொண்டு சில நிமிஷங்களைக் கழித்தோம்.

அடுத்ததாக எடுக்கும் போதே ஒரு கேள்வியுடன்தான் அவர் பேச ஆரம்பித்தார். கேள்வியா அது? எனக்குச் சரியான அடி அது. ''என் சார், ஒவ்வொரு நாள் ஒவ்வொரு காரில் போகிறீர்களே? நீங்கள் என்ன சார் ஏதாவது மெக்கானிக் ஷெட்டில் வேலை செய்கிறீர்களா?'' என்றார்.

எனக்கும் அவரை ஏதாவது சூடாகக் கேட்க வேண்டும் என்று ஆத்திரம்தான் வந்தது. ஆனால் நல்ல வேளையாக, உடன் பிறந்த சகோதரன் மாதிரி அந்த மனிதர் என் குடும்பத்துக்காக எத்தனையோ விஷயங்களில் - க்யூவில் நின்று பொருள்கள் வாங்கித் தருவதிலிருந்து, குழந்தைகளை ஸ்கூலில் சேர்க்கும் விஷயம் வரை - உதவிகள் செய்வதாக என் மனைவி என்னிடம் கூறியிருந்தது என் நினைவுக்கு வந்தது. நானும் எனக்கு ஏற்பட்ட ரோஷத்தை அந்த நிமிடமே உதறினேன். இல்லாவிட்டால் இந்தக் குடித்தனக்கார




ருக்கு என் மேல் கோபம் வந்து அவர் விலகி விட்டால், என் மனைவி, என் புகழ், தொழில் எதையும் சட்டை செய்யாது என்னையே ரேஷன் கடைக்கோ, அல்லது பால் டிப்போவுக்கோ விரட்டிவிடுவாளே!

நான் நிதானமாகக் கூறினேன்: ''நான் தான் கோபு, திரைப்பட வசனகர்த்தா, டைரக்டர்'' என்று விளக்கினேன். அவர் முகத்தில் எந்தவிதமான பாவமும் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகக் காணப்படவில்லை. அப்பொழுதுதான் எனக்கும் ஒரு விஷயம் நினைவில் வந்தது. புகழ்பெற்ற

எனது தொழில் பெயரைப் பற்றி அவருக்குக் கவலையோ, அக்கறையோ ஏற்படுவதற்கு, சினிமாவைப் பற்றி ஏதாவது ஆர்வமோ, ஞானமோ இருந்தால்தானே, அவருக்கு? எனது முழுப் பெயர் ஒன்றுதான் அவருக்குத் தெரியும். அதனால் நானும் அத்துடன் நிறுத்தி விட்டேன்.

அடுத்தபடியாக அவர் இங்க்ரிமெண்ட், லாஸ் ஆப் பே.... என்று என்னென்னவோ கேட்க ஆரம்பித்துவிட்டார். ''என்னை விடுங்கள்'' என்று சொல்லி அந்த இடத்தை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழி



எதுவும் எனக்குத் தோன்றவில்லை. என் தொழிலின் ரகசியத்தை அவருக்கு விளக்குவது அவ்வளவு சுலபமானதாக எனக்குத் தோன்றவில்லை. அதுவும் தவிர ஏனோ எனக்கு அவரிடம் ஒரு மதிப்பும், கௌரவமும் ஏற்பட்டு, அவர் சினிமாவைப் பற்றித் தெரிந்து கொள்ளாததே மிகவும் நல்லது என்று நினைத்தேன்.

சரி, வீட்டில்தான் இப்படிப்பட்ட சூழ்நிலை என்றால், வெளியிலிருந்து என்னைத் தேடி வருவோரிடமும் எனக்கு வேடிக்கை அனுபவங்கள் ஏற்படாமல் இருப்பதில்லை. ஒரு சமயம் ஒரு விசிறி வந்தபோது தற்செயலாக நானே எதிர்ப்பட்டு அவனை வரவேற்றேன். ''கோபு இருக்கிறாரா?'' என்று அவன் கேட்டதற்கு, ''நான்தான் கோபு'' என்றேன். அவன் கண்கள் ஏற இறங்க என்னை ஒரு முறை நோக்கின. அடுத்த சில நிமிடங்களில் அவன் கண்கள் மாறி மாறி வாசல் வராந்தாவில் இருந்த மின்சார விளக்கு, சாளரம், மாடிப் படிக்கட்டுகள், சோபா என்று மாற்றி மாற்றிச் சஞ்சரித்ததுடன், நடு நடுவில் என் முகத்தையும் பார்த்துக் கொண்டன.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும் நான் பொறுமையுடன் நின்றேன். கடைசியில் அவன், ''என்ன சார், விளையாடறீங்களா?'' என்று முணுமுணுக்கும் குரலில் கேட்டுவிட்டு வீட்டைவிட்டே வெளியேறினான். ஆனால் அவன் பக்கத்து வீட்டு வாசலில் நின்றதைக் கண்ட நான் வாசலிலேயே நின்றேன்.

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பக்கத்து வீட்டுப் பையனை அணுகி, என்னைக் காட்டி, ''இவன்தான் கோபுவா?'' என்று சந்தேகத்துடன் கேட்டான். ஏகவசனத்தில்



கண்ணை மூடிக் கொண்ட பூனை !

டெல்லியில் ஜெயப்பிரகாஷ் நாராயண் நடத்திய ஊர்வலம், மொரார்ஜி தேசாய் இருந்த உண்ணாவிரதம் இவையெல்லாம் நியூஸ் ரீல் சினிமாப் படத்தில் காட்டப்படவில்லை. டைம்ஸ் ஆஃப் இந்தியா

— கேஸரி

அவன் குறிப்பிட்டுப் பேசியது மண்டையில் அடிப்பது போல் இருந்தாலும், 'கடவுளையே சில சமயங்களில் ஏகவசனத்தில் பேசுவதில்லையா?' என்று என்னை நானே சமாதானம் செய்து கொண்டேன். வந்தவனை மன்னித்தும் விட்டேன். மன்னிப்பது என்ன? அவன் உடற்கட்டையும், அவனது ஆகிருதியான தோற்றத்தையும் கவனித்தபோது என் வெறும் 125 பவுண்ட் உடல் எந்த மூலை? என்னுடைய நல்ல காலம், பக்கத்து வீட்டுப் பையன், ''நான்தான் கோபு'' என்பதை 'சர்ட்டிபை' செய்துவிட்டான். பாருங்களேன். ''நான்தான் கோபு'' என்று நான் சொன்னதைவிட, ''இவன்தான் கோபு'' என்று பக்கத்து வீட்டுப் பையன் சொன்னதற்குத்தானே மதிப்பு அதிகம் கிடைத்திருக்கிறது ?

உடனே என் விசிறி திரும்பி வந்தான். இந்தத் தடவை வரும் போதே, மன்னிப்புக் கேட்டான். '' உங்களை நான் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. என் பெயர் காளிமுத்து. சொந்த ஊர் காங்கேயம்'' என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டான்.

'' உங்களுடைய ஊர் காங்கேயம் என்பதில் எனக்கு ரொம்பத் திருப்தி சார் !'' என்று நான் கூறியதும், அதிலிருந்த நகைச்சுவையைப் புரிந்து கொண்ட அவன் அசடு வழியச் சிரித்தாலும், அதைப் பெருமையுடன் ஏற்றுக் கொண்டான் என்று எனக்குத் தோன்றியது.

'' சார்! நான் உங்களைப் பற்றிக் கற்பனை செய்திருந்ததே வேறு. என்ன சார் நீங்கள் ? வெறும் சாதாரண வேட்டி, ஜிப்பாவுடன் இருக்கிறீர்களே !'' என்று தைரியமாகக் கேட்டான்.

நான், ''ஏம்பா, வேட்டி ஜிப்பா போட்டவன் டைரக்டராக இருக்கக் கூடாதா ?'' என்று கேட்டுவிட்டு மறுபடியும் கூறினேன்:

''வடநாட்டிலே ஒரு பிரபல டைரக்டர் சத்யஜித் ரே வேட்டி, ஜிப்பாதான் அணிகிறார்!'' என்றேன்.

''அப்படியா சார் ?'' என்று காளிமுத்து வியப்புடன் கேட்டான்.

''ஆனால் எனக்கும், அவருக்கும் உள்ள ஒரே ஒரு பொருத்தம் அந்த வேட்டி ஜிப்பா தான்'' என்றேன்.

உடனே காளிமுத்து, '' சார் ! நீங்கள் ரொம்ப வேடிக்கையாகப் பேசுகிறீர்கள்.... எனக்கு உங்கள் சிரிப்புப் படத்தில் ஒரு சந்தர்ப்பம் தர வேண்டும் !'' என்றான்....

'இதற்கா என் பொறுமையை இப்படிச் சோதித்தாய்?' என்று எண்ணிக் கொண்டு ''ஊருக்குப் போய் வாங்க.... சந்தர்ப்பம் நேரும்போது உங்களுக்குத் தெரிவிக்கிறேன்'' என்று ஒரு கும்பிடு போட்டு அனுப்பினேன். இப்பொழுது அவன் ஏற இறங்கப் பார்க்கவில்லை. வெளியே போய்விட்டான்.

ஒரு நாள் நான் ஷூட்டிங் முடிந்து வீட்டுக்கு வந்த நேரம். கல்லூரி மாணவிகளைப் போல் தோற்றம் அளித்த நான்கைந்து பெண்கள் என் வீட்டு ஹாலில் அமர்ந்து என் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தனர். சாதாரணமாகவே என் மனைவியைத் தேடிக் கொண்டு வரும் பெண்கள் என்னைக் கண்டதும் விடைபெற்றுக் கொண்டு நாசுக்காக நழுவி விடுவது வழக்கம். அன்று நேர்மாறாக அந்தப் பெண்கள் இடத்தைவிட்டு அசையவில்லை.

எனக்காகக் காத்திருக்கும் ரசிகைகள் என்று நினைத்து 'ரொம்ப நேரமாகக் காக்க வைத்து விட்டேனோ' என்று மரியாதையுடன் கேட்டேன். என் மனைவி விசித்திரப் புன்னகையுடன் என்னைப் பார்த்துவிட்டுத் தன் கதையைத் தொடர்ந்து படித்து வரும் அந்தப் பெண்கள் தன்னைப் பாராட்ட நேரில் வந்திருப்பதாகக் கூறினாள். அப்பப்பா, அந்தக் குரலில்தான் எத்தனை சவால்? உங்களுக்கு மட்டும்தானா விசிறி ? இதோ எனக்கும் விசிறிகள் என்று அவள் சொல்லாமல் சொல்லியது எனக்கு நன்றாக விளங்கியது.

அதற்குள் ஒரு பெண் அவசரம் அவசரமாக எழுந்தாள். ''உங்களையும் பாராட்ட வந்திருக்கிறோம், சார் !'' என்றாள்.

''அப்படியா ? ரொம்ப சந்தோஷம். என்னுடைய எந்தப் படத்துக்காக என்னைப் பாராட்ட நினைக்கிறாய்?''

'' அதில்லை சார், இந்த அருமையான 'கதவு' என்ற கதையை எழுதியவர் உங்கள் மனைவி இல்லையா?'' என்று கேட்டாளே, பார்க்க வேண்டும் !

அதற்குள் மற்றொரு பெண் கேட்டாள் : ''ஏன் சார், உங்கள் மனைவிக்கு நீங்கள் எழுதிக் கொடுத்தீர்களா? அல்லது அவர்கள் உங்களுக்குக் காமெடியை எழுதிக் கொடுத்தார்களா?''

உடனே நான், ''இதோ, பாருங்கம்மா.... எழுத்து விஷயமாக என் பாணியை அவள் என்றுமே ஒப்புக் கொள்ள மாட்டாள்... அவள் பாணி எனக்குப் புரியாது'' என்றேன். வந்த பெண்கள் 'களுக்' என்று சிரித்தார்கள். இருவரில் ஒருவர் நிச்சயம் பொய் சொல்வதாகச் சத்தியமாக அவர்கள் நம்புவதை அந்தச் சிரிப்பு உணர்த்தியது. என்ன செய்ய, ஒரே வீட்டில் இரண்டு எழுத்தாளர்கள் இருந்தால் இதுதான் தொல்லை!

துன்பம் தாங்கும் இதயம்

பெரும்பான்மையோருக்குத் தங்களுடைய துயரங்களைப் பொறுத்துக்கொள்ள முடிகிறது. ஆனால் மற்றவர்களின் இன்பத்தைத்தான் பொறுத்துக் கொள்ள முடிவதில்லை.

(வில்லியம்ஸ் பால்ஸ்) - சரஸ்வதி பஞ்சு

புதிய கன்டெய்னர்
உயர்ந்த தரம்
மனம் கவரும்
நறுமணம்



பண்டைய வழக்கப்படி
உங்களின்
விருப்பத்திற்கு ஒரு
புதிய தோற்றம்

மலாய்

சாண்டல் டால்க்

சந்தனக் கட்டையின் நறுமணம் மனத்தைக் கவரும் தொன்று தொட்டு வருவது. மலாய் சாண்டல் டால்க்கின் பட்டுபோன்ற வழவழப்பான தன்மை உங்களுக்கு கலப்படமற்ற அதைத்திட்டத் தருகிறது.

இப்போது உங்களின் விருப்பமான டால்க் முன்னைவிட கவர்ச்சிகரமானதும்கூட - ஒரு பிரத்தியேகமான சிறந்த கன்டெய்னரில்.

கல்கத்தா கெமிக்கலின் ஒரு தரமான
தயாரிப்பு

விநியோகஸ்தர்கள்: சிவராம் & ஸ்வாமி, சென்னை

"இங்கு புளுகுகள் கிடைக்கும்!"

நாடோடி



"எல்லாப் பொருள்களின் விலைகளும் மிகவும் உயர்ந்து விட்டன. ஆனால் ஒன்று மாத்திரம்தான் விலை மலிவாகக் கிடைக்கிறது. அவைதாம் புளுகுகள்" என்று கூறுகிறார் திரு காமராஜ்.

நேற்று எனக்குச் சில புளுகுகள் தேவையாக இருந்தன. காரியாலயத்தை விட்டுத் தினந்தோறும் வெகு நேரம் கழித்து வீடு திரும்பும் எனக்கு அதன் காரணத்தை என் மனைவி சரசுவிடம் விளக்கச் சில புளுகுகள் தேவைப்பட்டன.

புளுகுகள்தாம் மிக மலிவாகக் கிடைக்கின்றன என்று காமராஜ் சொல்கிறாரே. நம் உபயோகத்துக்குச் சில புளுகுகள் வாங்கிக் கொண்டு வருவோமே என்று புளுகுகள் தயாரிக்கப்படும் ஒரு தொழிற்சாலைக்குச் சென்றேன்.

இந்த நகரத்தில் ஒரு தொழிற்சாலை இருக்கிறதா என்று ஆச்சரியப்படுகிறீர்கள். எனக்குத் தெரிந்த ஓர் அரசியல் கட்சி இந்தக் காரியத்தைத்தான் செய்து வருகிறது.

அந்தத் தொழிற்சாலைக் கட்டிடத்தின் முகப்பில், "இங்கு புளுகுகள் கிடைக்கும்" என்று ஒரு பெரிய விளம்பரப் பலகை மாட்டப்பட்டிருந்தது. உள்ளே நுழைந்ததும் ஏதோ பெரிய வாசகசாலைக்குள் நுழைந்தது போன்ற பிரமை ஏற்பட்டது. பெரிய பெரிய அலமாரிகளில் நிறைய அச்சடித்த புத்தகங்கள் அழகழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் அடியில் 'தேர்தல் புளுகுகள்', 'நிதி திரட்டப் புளுகுகள்' 'பதவிக்கு வரப் புளுகுகள்', 'கணக்கை ஏமாற்றப் புளுகுகள்', 'பதவிக்கு முந்தையப் புளுகுகள்', 'பதவிக்குப் பிந்தைய புளுகுகள்' என்று இப்படிப் பல பெயர்கள் டைப் அடித்து ஒட்டப்பட்டிருந்தன. அங்கு ஒரு மேஜை நாற்காலி போட்டுக்கொண்டு ஒரு கறுப்புக் கண்ணாடிக்காரர் உட்கார்ந்திருந்தார்.

"எல்லாம் அரசியல் புளுகுகளாகவே இருக்கின்றனவே! உங்களிடம் சாதாரணப் புளுகுகள் கிடையாதா?" என்று அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரரைக் கேட்டேன்.

"அப்படி யென்றால்?"

"லீவு கேட்கப் புளுகுகள், மனைவியை ஏமாற்றப் புளுகுகள், கடன் கொடுத்தவனுக்குச் சால்ஜாப்புச் சொல்லப் புளுகுகள் என்று இப்படி!"

"இந்தச் சாதாரணப் புளுகுகளையெல்லாம் இப்போது யாரும் விரும்பிக் கேட்பதில்லை. அதனால் அவற்றை நாங்கள் 'ஸ்டாக்' செய்வதில்லை."

"ஆனால் அரசியல் புளுகுகள் மாத்திரம் இத்தனை நிறைய வைத்திருக்கிறீர்களே!"

"இவற்றுக்கு உள்ள 'டிமாண்டு' சொல்லி முடியாது. அதனால்தான் இத்தனை நிறைய இவற்றை 'ஸ்டாக்' செய்திருக்கிறோம். அதிலும் தேர்தல் புளுகுகளுக்கு ஏகக் கிராக்கி. அது என்னமோ தெரியவில்லை, தேர்தல் வர இன்னும் பல மாதங்கள் உள்ளன. இருந்தும் இதை ஆயிரக்கணக்கானவர்கள் கேட்க ஆரம்பித்து விட்டார்கள்."

அந்தச் சமயம் ஒருவர் உள்ளே நுழைந்தார். அவர் கையில் வைத்திருந்த பிளாஸ்டிக் பையைக் கண்டதும் அவர் ஓர் அரசியல்வாதி என்று தோன்றிற்று.

"தேர்தல் புளுகுகள் இருக்கின்றனவா?" என்று கேட்டார்.

"இருக்கின்றன" என்றார் கறுப்புக் கண்ணாடிக்காரர்.

"எங்கே எல்லாம் தீர்ந்து போயிருக்குமோ என்று கவலைப்பட்டேன். எத்தனை இருக்கு?"

"தற்சமயம் நூறு இருக்கு. இன்னும் தயார் செய்து கொண்டிருக்கிறோம்."

"என்ன விலை?"

"புளுகு ஒன்று பத்து ரூபாய்."

"அவ்வளவுதானா? மிக மலிவாக இருக்கிறதே! இந்தாருங்கள் ஆயிரம் ரூபாய். அந்த நூறு புளுகுகளையும் கொடுங்கள்" என்று நூறு ரூபாய் நோட்டுக்கள் பத்தை நீட்டினார்.

உடனே அந்தக் கறுப்புக் கண்ணாடிக்காரர் நான் பார்வையிட்டுக்கொண்டிருந்தஒரு புத்தகத்தைப் பிடுங்கினார், அலமாரியிலிருந்து இன்னும் தொண்ணூற்றொன்பது புத்தகங்களை எடுத்தார். நூறையும் அந்த அரசியல்வாதியிடம் கொடுத்தார்.

அரசியல்வாதி சென்ற பிறகு நான் கறுப்புக் கண்ணாடிக்காரரைப் பார்த்து, "என்ன, புளுகு ஒன்று பத்து ரூபாயா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டேன்.

"ஆமாம்."

"இத்தனை கிராக்கியா? புளுகுகள் கொள்ளை மலிவு என்று காமராஜ் சொல்கிறாரே?"

"ஆமாம், ஐயா, ஆமாம்! புளுகியே பிழைப்பவர்களுக்கு அது கொள்ளை மலிவுதான். சற்று முன்னால் ஒருத்தர் வந்து, 'மலிவாயிருக்கிறதே!' என்று கூறி விட்டுத்தானே நூறு புளுகுப் புத்தகங்களை வாங்கிக் கொண்டு போனார்? பார்த்துக் கொண்டுதானே இருந்தீர்?" என்றார் கடைக்காரர்.

"ஓஹோ! அதைத்தான் காமராஜ் சொல்லியிருக்கிறார். ஆனால் காமராஜுக்கும் எனக்கும் புளுகுகளின் விலை அதிகம்தான். கட்டி வராது" என்று கூறியபடி ஒன்றும் வாங்காமல் திரும்பினேன்.



விரைவில் நிவாரணம் பெற சக்தி வாய்ந்த, நம்பகமான அனாஸின் சாப்பிடுங்கள்

சக்தி வாய்ந்தது : உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது : டாக்டரின் நம்பகமான மருந்தைப் போல பல மருந்துகளின் கலவையே அனாஸின். ஆகையால்தான் லட்சக்கணக்கானவர்கள் அனாஸின் சாப்பிடுகிறார்கள்; சிபாரிசும் செய்கிறார்கள்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளுவினால் ஏற்படும் வலிகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.



சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி

Regd. User of TM: Geoffrey Manners & Co., Ltd.

A/2/8-74

5

விஜயா திரும்ப 'ஹாலு'க்கு வந்த போது கட்பாலியா அவளை நோக்கி வந்தான்.

''கிடைத்தாரா ?''

''ரத்தன்லால் வீட்டில் யாரும் இல்லை போலிருக்கிறது. டெலிபோன் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. பதில் இல்லை.''

'' ரத்தன்லால் கல்யாணம் ஆகாதவர். புரோக்கர். இதனுடைய முழு அர்த்தமும் உங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் புன்னகை செய்தான் கட்பாலியா.

''சரி..... நான் வருகிறேன். உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி.''

அவன் அவளைப் பார்த்த பார்வை அவளுக்குப் பிடிக்கவில்லை. அவன் சொன்னதின் அர்த்தமென்ன?

அவள் திரும்பச் சென்ற போது, காரில் உட்கார்ந்தபடியே மோகினி யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். விஜயாவைப் பார்த்ததும் அவள் பேசுவதை நிறுத்திவிட்டாள்.

''மிஸ்டர் கபூர் கிளப்பில் இல்லை'' என்றாள் விஜயா.

''சரி.... உட்கார்.... நாம் போகலாம். தாங்க் யூ, மிஸ்டர் அத்வானி'' என்று சொல்லிக் கொண்டே காரை ஸ்டார்ட் செய்தாள் மோகினி.

மோகினியின் நாடை இறுகியிருந்தது.... அவள் மிகவும் கோபமாக இருக்கிறாள் என்று விஜயாவுக்குப் புரிந்தது. கட்பாலியா தன்னிடம் சொன்ன தகவலை அத்வானியும் கூறியிருக்கலாம் என்று விஜயாவுக்குப் பட்டது.

'' இப்பொழுது வீட்டுக்குத் தானே?'' என்று கேட்டாள் விஜயா.

மோகினி பதில் சொல்லாமல் மௌனமாகக் காரை ஓட்டிக் கொண்டு சென்றாள். அவள் வீட்டுக்குத் திரும்பாமல் வேறு எங்கோ போகிறாள் என்று விஜயாவுக்குத் தெரிந்தது.

கார் பழைய தில்லியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. கபூர் எங்கே போயிருக்கக் கூடும் என்று அத்வானி சொல்லியிருப்பாரோ அங்கே இவள் கபூரைச் சந்தித்தானானால் சாட்சியாக இருக்க வேண்டுமா ? கடவுளே, அங்கே கபூர் இருக்கக் கூடாது....

'சிவில் லைன்சை'த் தாண்டி இடப்புறமாகச் சென்ற ரோட்டில் காரைத் திருப்பினாள் மோகினி. ஒரே இருட்டாக இருந்தது. தெரு விளக்கெல்லாம் அணைந்திருந்தன.... சிறிது தூரம் தாண்டிச் சென்றதும், ஒரு பெரிய ஹோட்டல் நிறுவனம் கட்டியிருந்த 'அபார்ட்மென்ட்' வீடுகள் வந்தன. மோகினி காரை உள்ளே செலுத்தினாள்.

''மிஸ்டர் கபூர் இங்குதான் வந்திருக்கிறாரா?'' என்று கேட்டாள் விஜயா.

''தெரியாது. பார்க்கலாம். ரத்தன்லாலுடன் போனதாக அத்வானி சொன்னார். ரத்தன்லால் இங்குதான் இருக்கிறான்.''

காரைப் 'பார்க்' செய்துவிட்டு இருவரும் கட்டடத்துக்குள் நுழைந்தார்கள். 'ரிஸப்ஷன்' ஹாலிலிருந்த பெயர்ப் பலகையிலிருந்தும், ரத்தன்லால் மூன்றாவது மாடியில் இருப்பதாகத் தெரிந்தது.

மூன்றாவது மாடிக்குச் சென்று, ரத்தன்லால் இருந்த 'ஃப்ளாட்'டின் வாசற்கதவருகே இருந்த 'காலிங் பெல்'லை அழுத்தினாள், மோகினி. பதில் இல்லை.... தொடர்ந்து அழுத்திக் கொண்டேயிருந்தாள்.

''உள்ளே யாரும் இல்லையோ என்னவோ?'' என்றாள் விஜயா.

''சரி, கீழே போய் ரிஸப்ஷன் ஹாலில் காத்திருப்போம். அவன் எப்படியும் இன்றிரவு வீட்டுக்குத் திரும்பித்தானே ஆக வேண்டும் ?''

''ஒரு வேளை மிஸ்டர் கபூர் இதற்குள் வீட்டுக்குத் திரும்பியிருக்கலாம், வீட்டுக்குப் போனால் என்ன?'' என்று கேட்டாள் விஜயா.



மோகினி பதில் கூறாமல், 'லிஃப்டை'யும் பயன்படுத்தாமல், மாடிப் படிகள் வழியே கீழே இறங்கலானாள். அவளைப் பின் தொடர்ந்து செல்வதைத் தவிர, வேறு வழி இருப்பதாக விஜயாவுக்குப் புலப்படவில்லை.

மோகினி 'ஹாலில்' போடப்பட்டிருந்த சோபாவில் போய் உட்கார்ந்தாள்.

சௌகிதார் அப்பொழுது அங்கு வந்தான். ''யார் வேண்டும் உங்களுக்கு?''

''ரத்தன்லால்.''

அவன் அவர்களை ஏற இறங்கப் பார்த்தான்.

''சாஹேப் எப்பொழுது வருவார் என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் வராமலேயே இருந்துவிடுவார்'' என்றான் சௌகிதார்.

''அதோ அந்த 'ஹீட்டரை'க் கொண்டு வந்து என் முன்னால் வை'' என்றாள் மோகினி.

''ஹா(ஞ்)ஜி.''

''ஹீட்டரு'க்கு முன்னால் தன் கைகளைக் காட்டிச் சூடேற்றிக் கொண்டாள் மோகினி.

''அவன் சொல்வது போல், ரத்தன்லால் என்பவர் இன்றிரவு இங்கு வராமலேயே இருந்து விட்டால் ?'' என்று கேட்டாள் விஜயா.

''வேண்டுமானால் நீ வீட்டுக்குத் திரும்பிப் போ. டாக்ஸிக்குப் பணம் தருகிறேன். அநாவசியமாகப் பேசிக் கொண்டிருக்காதே'' என்றாள் மோகினி.

போய் விடலாமா என்று நினைத்தாள் விஜயா. ஆனால் அந்த நேரத்தில் டாக்ஸியில் திரும்பிப் போக அவளுக்குப் பயமாக இருந்தது.

விஜயா மணியைப் பார்த்தாள். திடுக்கிட்டாள். மணி 12.30.

''குட்மார்னிங்....!'' என்றாள் விஜயா, சிரித்துக் கொண்டே மோகினியிடம்.

''என்ன?''

''குட்-மார்னிங். இப்பொழுது மணி 12.30.''

''உனக்குப் பொழுது போகாவிட்டால் வாசலுக்குச் சென்று ஆகாயத்தில் உள்ள நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிரு...... வேடிக்கையாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு என்னை 'போர்' அடிக்காதே.''

விஜயா உட்கார்ந்தபடியே குனிந்து வானத்தைப் பார்த்தாள்.

''வானத்தில் நட்சத்திரங்களே இல்லை. மேகங்கள்தான்...... இடி இடித்து மழை பெய்யலாம் என்று தோன்றுகிறது'' என்றாள் விஜயா.

அப்பொழுது வாசலில் ஒரு கார் நிற்கும் சப்தம் கேட்டது. அது கபூருடைய இள நீல நிற அம்பாஸடர்தான். விஜயாவுக்குத் 'திக்' கென்றது. மோகினி எழுந்து அவசர அவசரமாகப் பாதி நடையும் பாதி ஓட்டமுமாக வாசலுக்குப் போனாள். அவள் போவதற்குள் கார் போய் விட்டது. காரிலிருந்து இறங்கி வந்தவன் மோகினியைக் கண்டதும் திடுக்கிட்டு நின்றான்.

''யார் உங்களைக் கொண்டு விட்டார்கள், மிஸ்டர் கபூர்தானே ?'' என்று கேட்டாள் மோகினி.

''இ...ல்....லை...யே.... அது டிடக்கட்டும்.... நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள்?''

''பொய் சொல்லாதீர்கள். அது அவருடைய கார்தான். எங்கே போய்விட்டு வருகிறீர்கள் ?''

''மன்னிக்கவும்.... நீங்கள் ஏதோ தப்பாகச் சொல்கிறீர்கள்..... உலகத்தில் உள்ள எல்லா அம்பாஸிடர் கார்களுக்கும் சொந்தக்காரர் மிஸ்டர் கபூர்தானா ?''



''மிஸ்டர், ரத்தன்லால்..... நான் பச்சைக் குழந்தை அல்ல... நான் மிஸ்டர் கபூரைப் பார்த்தேன்..... 'கிளப்'பில் விசாரித்துக் கொண்டு வருகிறேன்..... எங்கே போய்விட்டு வருகிறீர்கள், சொல்லுங்கள்.''

''வந்தவர் கபூராகவே இருக்கட்டும்..... நீங்கள் இப்படி அவரை வேவு பார்ப்பது எனக்குக் கண்ணியமாகப் படவில்லை'' என்று சொல்லிக் கொண்டே ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான் ரத்தன்லால்.

''உங்களுடைய யோக்கியதையைப் பற்றித் தில்லி முழுவதும் பேசிக் கொள்கிறார்கள். நீங்கள் கண்ணியத்தைப் பற்றிப் பேசுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.''

''நானும் இதையே திருப்பிச் சொல்லலாம் அல்லவா ?''

''வாட் டு யூ மீன்?'' என்று கோபத்துடன் கத்தினாள் மோகினி.

''மிஸஸ் கபூர்...., தயவுசெய்து போய் விடுங்கள்..... நான் உங்களுடன் வழக்காட விரும்பவில்லை.''

''அவமரியாதையாகப் பேசிவிட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்காதே. என் கணவரை எங்கே அழைத்துக் கொண்டு போனாய், சொல்.''

''உங்கள் கணவரையே போய்க் கேளுங்களேன், ஏன் என் பிராணனை வாங்குகிறீர்கள் ?''

''அவர் ஒரு கோழை. எனக்குப் பதில் சொல்லப் பயப்படுவார்.''

''அவர் தைரியசாலியாக இருந்திருந்தால், இப்படி இந்த நேரத்தில் நீங்கள் இங்கு வந்திருக்கமாட்டீர்களே? — உங்களைப் பார்த்த பிறகு நான் கல்யாணம் செய்து கொள்ளவில்லை என்பதைப் பற்றி எவ்வளவு சந்தோஷப்படுகிறேன், தெரியுமா ?''.

''ஷட் அப் யு.......''

மோகினி அந்த வார்த்தையைச் சொல்வாள் என்று விஜயா எதிர்பார்க்கவில்லை.

ரத்தன்லால் மோகினியைப் பார்த்துப் புன்னகை செய்து கொண்டே சொன்னான் : ''மிஸ்டர் கபூரைக் கண்டு உலகத்தில் யாருமே பொறாமைப்பட மாட்டார்கள்.''

''நீங்கள் இரண்டு பேரும் எங்கே போயிருந்தீர்கள் என்பதைப் பற்றிச் சொல்லப் போகிறாயா, இல்லையா ?'' என்று கத்தினாள் மோகினி.

'' நாங்கள் எங்கே போனால் உங்களுக்கென்ன? மிஸ்டர் கபூர் உங்களைக் கண்டு இனி பயப்படப் போவதில்லை. உங்களுடைய யோக்கியதையை இன்று உங்கள் மகன் 'கிளப்'பில் அம்பலமாக்கிவிட்டான். மிஸ்டர்



கபூருக்கும் தெரிந்து விட்டது. கண்ணாடி வீட்டுக்குள் இருப்பவர்கள் கல்லெறியக் கூடாது, மிஸஸ் கபூர்'' என்றான் ரத்தன்லால்.

மோகினியின் முகத்தில் பீதி படர்ந்து இப்பொழுதுதான் முதல் தடவையாகப் பார்த்தாள் விஜயா. ரத்தன்லாலின் வார்த்தைகள் அவன் எதிர்பார்த்த பலனைத் தந்தன. மோகினி செயலற்றுச் சில விநாடிகள் நின்றாள். இதற்குள் ரத்தன்லால் தான் குடித்துக் கொண்டிருந்த சிகரெட்டின் சாம்பலைத் தட்டுவதற்குச் சுவர் ஓரமாக இருந்த 'ஆஷ்டிரே'யை நோக்கிச் சென்றான். மோகினி அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு விடுவாள் என்று விஜயா நினைத்தாள். ஆனால் மோகினி ரத்தன்லாலை மறுபடியும் அணுகினாள்.

''சதீஷ் என்ன சொன்னான்?'' என்று நிதானமாகக் கேட்டாள்.

''அவன் என்ன சொன்னான் என்று நான் சொல்லத் தயாராக இல்லை.''

''சொல்லப் போகிறாயா, இல்லையா ?''

''மிரட்டாதீர்கள், மிஸஸ் கபூர். உங்கள் குடும்பத்தில் என்ன நடக்கிறது என்பதைப் பற்றித் தெரிந்து கொள்வதைத் தவிர, எனக்கு வேறு வேலை இல்லை என்று நினைத்தீர்கள்? நேரமாகிறது, நான் போக வேண்டும். எனக்குத் தூக்கம் வருகிறது'' என்று சொல்லிக் கொண்டே மேலே நடந்து சென்றான் ரத்தன்லால்.

அங்கு ஒரு சின்னக் கூட்டம் கூடி விட்டது. சௌக்கிதார், இன்னும் சில வேலைக்காரர்கள். அவர்கள் மோகினியையே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

ரத்தன்லால் போய் விட்டான்.

''போகலாமா?'' என்று மெதுவாகக் கேட்டாள் விஜயா.

மோகினி பதில் சொல்லாமல் காரை நோக்கி நடந்தாள்.

காரை 'ஸ்டார்ட்' செய்ய முடியவில்லை. ஈனஸ்வரத்தில் முனகி விட்டு 'என்ஜின்' மறுபடியும் தூங்கப் போய் விடும். திரும்பத் திரும்ப முயற்சி செய்தாள் மோகினி. கார் புறப்படமறுத்துவிட்டது.

''கீழே இறங்கித் தள்ளட்டுமா ?''



''குளிர் காலத்தில் இதுதான் சங்கடம். சரி, உன்னால் தனியாகத் தள்ள முடியுமா? அந்தச் சௌக்கிதாரைக் கூப்பிடேன்.''

விஜயா இறங்கிக் காரைத் தள்ள முயற்சி செய்தாள். முடியவில்லை.

தெருவில் ஈ, காக்காய் கிடையாது. சுவர்க் கோழிகளின் சத்தந்தான் கேட்டுக் கொண்டிருந்தது. யாராவது போனால் தள்ளத் துணைக்குக் கூப்பிடலாம் என்று நினைத்தாள் விஜயா. இந்த நடுங்கும் குளிரில் யார் போவார்கள் ? கணவனைத் தேடிச் செல்லும் ஏழைப் பெண்கள் தில்லியில் எத்தனை பேர் இருக்கப் போகிறார்கள் ?

நல்ல வேளை, சௌக்கிதார் அப்பொழுது அங்கு வந்தான்.

''சௌக்கிதார்....'' என்று கூப்பிட்டாள் மோகினி.

அவன் கார் அருகே வந்தான்.

''தோடா தக்கா மாரோ....'' என்றாள் மோகினி.

''ஹா(ங்)ஜி.''

விஜயா சௌக்கிதார் ஆக இருவருமாகச் சேர்ந்து காரைத் தள்ளினார்கள்.

பயனில்லை. கார் நகர்ந்ததே தவிர, 'என்ஜின்' 'ஸ்டார்ட்' ஆகவில்லை.

எத்தனை நேரம் தள்ளுவது ? அந்த விடுதியின் இரும்பு 'கேட்' அருகே கார் தள்ளப்பட்டே வந்ததேயன்றி, அது 'உயிர்' பெற்று எழவில்லை.

மோகினி காரை விட்டு இறங்கி வந்தாள். அதை மேலும் கீழுமாகப் பார்த்தாள்.

''டாம் இட்'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு, மிகுந்த ஆத்திரத்துடன் சொன்னாள். காரைக் காலால் வெகு வேகமாக உதைத்தாள்.

''குதிரை வண்டி வைத்திருப்பவர்களைக் கண்டு பொறாமைப்படுகிறேன்'' என்றாள் மோகினி.

''ஏன்?'' என்று கேட்டாள் விஜயா.


''வண்டி புறப்படாவிட்டால், குதிரையை ஆத்திரம் தீர அடிக்கலாம். அடிக்கிறதை உணர்வதற்கு ஓர் உயிருள்ள பிராணி இருக்கிறது. இந்தக் காரை

விடாக்கண்டர்கள்!

ஜனாதிபதி ஃபோர்ட் உடற் பயிற்சிக்காகத் தினமும் ஓடுகிறார். அவர் ஓடும்போது ஒருநாள் பத்திரிகை நிருபர்கள் அவரோடு ஓடிக் கொண்டே கேள்வி கேட்டுக்கொண்டே வந்தனர். அவரும் ஓட்டத்தை நிறுத்தாமல் ஓடிக் கொண்டே பதில் சொல்லிக்கொண்டிருந்தார்!

டைம் - ராஜா

புதுமையின் பொலிவுக்கு
ஹமாம்



நாள்தோறும் ஹமாம் தேய்த்துக் குளியுங்கள். ஹமாம் தரும் நறுமணமுள்ள நுரை உங்கள் சருமத்தை சுத்தம் செய்வதுடன், புத்துணர்ச்சியையும் அளிக்கிறது. உங்கள் மேனிக்கு கவர்ச்சியான மெருகையும் ஊட்டுகிறது. நெடுங்காலம்...நீடித்திருக்கும் ஹமாம் டாய்லெட் சோப்பை உபயோகியுங்கள்.

அதிக காலம் நீடித்துழைக்கும் டாய்லெட் சோப்

டாடா
தயாரிப்பு

CMTH-14-152 TAM



CHAITRA-BLS-6 TAM REV.

உதைத்து என்ன பிரயோஜனம்.....? இது வெறும் ஜடம்'' என்றாள் மோகினி.

''ஜடங்களையும் தள்ளிக் கொண்டே இருந்தால், சில சமயங்களில் அவை உயிர் பெற்று எழுந்துவிடுகின்றன'' என்றாள் விஜயா.

மோகினி 'சடக்'கென்று திரும்பி அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்தாள்.

''என்ன சொல்லுகிறாய் நீ?'' என்று குரலில் ஓர் அமைதி புலப்பட, அவள் கேட்டாள்.

''ஒன்றுமில்லை.... இப்பொழுது எப்படி நாம் வீடு போய்ச் சேருவது ?'' என்று கேட்டாள் விஜயா.

''கார் இங்கு இருக்கட்டும். நான் ஒரு 'டாக்ஸி' கொண்டு வருகிறேன்'' என்றான் சௌக்கிதார்.

''சரி, போ!'' என்று தலையசைத்தாள் விஜயா. எப்படியாவது இந்த இடத்தை விட்டுப் போயாக வேண்டும். மணி இரண்டு!

''ஜடம் உயிர் பெற்று எழுந்துவிட்டது. இனி அதை அடிப்பதுதான் எனக்கு அதிக உற்சாகத்தைத் தரப் போகிறது'' என்றாள் மோகினி.

விஜயா அவளைக் கோபத்துடன் பார்த்தாள். மற்றவர்களிடம் குறை காண இவளுக்கென்ன தகுதி இருக்கிறது? 'உங்களுடைய யோக்கியதையை இன்று உங்கள் மகன், 'கிளப்'பில் அம்பலமாக்கிவிட்டான்' என்று ரத்தன்லால் சொன்னானே, அதற்கு என்ன அர்த்தம்? அப்பொழுது ஏன் இவள் வாய் அடைத்து நின்றாள்? இவள் தன்னுடைய சிநேகிதர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறாளே, அவர்களுக்கும் இவளுக்கும்இடையே உள்ள தொடர்பு, வெறும் சிநேகிதம் மட்டுமில்லையோ ? — இது உண்மையாக இருந்தால், இதைக் கண்டுபிடிக்கக் கபூருக்கு இத்தனை வருஷங்களா ஆயிற்று? அப்படியானால், மோகினி அடிக்கடி சொல்வது போல் அவர் வெறும் ஜடந்தான், சந்தேகமில்லை.... புழு நெளிந்து, வளர்ந்து, பாம்பாகிவிட்டதே! 'உயிர்' பெற்றெழுந்த 'ஜடத்'தை இவள் அடிக்க முயன்றால்.... பிரச்னை விசுவரூபம் எடுத்துக் கொண்டு போவது போல், விஜயாவுக்குத் தோன்றிற்று.

டாக்ஸி வந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக 'ஹார்ன்' சத்தம் கேட்டது.

இருவரும் 'கேட்'டைத் தாண்டி வெளியே சென்றார்கள்.

''நான் நாளைக்கு ஆளை அனுப்புகிறேன், காரை எடுத்துப் போக..... ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்'' என்று சொல்லிக் கொண்டே கைப் பையைத் திறந்து சௌக்கிதாரிடம் அவள் ஓர் ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினாள். முகமெல்லாம் பல்லாக அவன் வாங்கிக் கொண்டான்.

''சர்தார் பட்டேல் மார்க்'' என்றாள், மோகினி, டிரைவரிடம்.

''அச்சாஜி!''

''ரத்தன்லாலுடன் இவருக்குச் சிநேகம் ஏற்பட்டிருப்பது ஆச்சரியந்தான்'' என்றாள் மோகினி.

''ரத்தன்லால் என்ன செய்கிறார் ?''

''ஸ்டாக் புரோக்கர். பல விஷயங்களில் பிரசித்தமானவன். குறுக்கு வழிகளில் பணம் பண்ணுவது, பாட்டில், பெண் ஆகியவற்றைத் தவிர அவனுக்கு வேறு ஒன்றும் தெரியாது. இவர் இப்பொழுது ரத்தன்லாலை நாடிச் செல்கிறார் என்றால்.....'' என்று சொல்ல வந்ததை முடிக்காமல் பாதியில் நிறுத்தினாள் மோகினி.

விஜயா பேசாமல் இருந்தாள். 'பெரிய மனிதர்கள்' என்ற சமூகத்தில் அறிமுகமானவர்கள், இவற்றைத் தவிர, வேறு என்ன செய்கிறார்கள் என்று அவளுக்குத் தோன்றிற்று.

''ரத்தன்லால் மிகவும் மட்டமான இடத்துக்குத்தான் அவரை அழைத்துக் கொண்டு போயிருப்பான். இவர் யார் என்று தெரிந்திருந்தால், சே ! என்ன அவமானம் ? பரம்பரைச் செல்வம் உள்ளவர்களால்தான், அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.... இல்லாவிட்டால்......''

பரம்பரைச் செல்வம் தம் அந்தஸ்துக்கு ஏற்ற பெண்ணுடன் 'சிநேகமா'யிருப்பதைக் கற்றுத் தரும் போலிருக்கிறது. மோகினியுடைய ஆட்சேபணை, அவர் ஒரு 'மட்டமான' இடத்துக்குப் போய், அவர் யாரென்று அங்கு தெரிந்து கொண்டிருந்தால் என்ன ஆவது என்பதுதான்! அப்படியே அவர் போயிருந்தாலும், இதற்கு யார் காரணம் என்பதைப் பற்றி இவள் ஏன் யோசிக்கவில்லை? வீட்டுக்கு வந்தவரைச் சாப்பாடு போடாமல் விரட்டியது யார்? — சதீஷ் இவளைப் பற்றி 'கிளப்'பில் ஏதேதோ சொல்லியிருக்கிறானே, அதைப் பற்றி இவள் ஏன் பேசவேயில்லை? யாருடைய 'அந்தஸ்து' இப்பொழுது சர்ச்சைக்குரிய விஷயமாயிருக்கிறது? இவளுடைய சிநேகிதர்கள் 'பெரிய மனிதர்கள்' என்பது இவள் அந்தஸ்துக்கு ஏற்றத்தைத் தருகின்றதா ?— சே.....! இந்த இடத்தில் வேலைக்கு வந்ததே தப்பு..... போய் விடுவதுதான் நல்லது.....

அவர்கள் வீடு போய்ச் சேரும் போது மணி 2.30. 'காலிங் பெல்'லை அழுத்தினாள் விஜயா. மான்சிங், கண்களைக் கசக்கிக் கொண்டே கதவைத் திறந்தான்.

''சாஹேப் வந்து விட்டாரா?''

''ஹா(ங்)ஜி.....''

மோகினி தன் அறையை நோக்கிச் சென்றாள். சற்று நேரத்தில் வேகமாகத் திரும்பி வந்தாள்.

''சாஹேப் அறையில் இல்லையே ?''

''சாஹேப் மாடிக்குப் போனார்....'' என்றான் மான்சிங்.

''மாடிக்கா ?..... போய்ப் பார்த்துவிட்டு வா.....'' என்று விஜயாவிடம் சொன்னாள் மோகினி.

விஜயா போனபோது, ராகேஷின் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. கதவைத் தட்டினாள்.

கதவைத் திறந்த ராகேஷ் 'டிரெஸ்ஸிங் கவுன்' நாடாவை இறுகக் கட்டிக் கொண்டான்.

''எஸ்......?''

''மிஸ்டர் கபூர்......?''

''தூங்கிக் கொண்டிருக்கிறார்.....இங்கே அம்மா வரமாட்டாள் என்று அவருக்கு நிச்சயமாகத் தெரியும்......'' என்று புன்முறுவல் செய்து கொண்டே சொன்னான் ராகேஷ்.

(தொடரும்)


ராஜேஷ்
கன்னா
முன்னணி
நடிகர்
முற்றிலும்
தனிப்பட்ட
தோற்றத்தில்



U-BDM-25 TAM

பாம்பே டையிங்



கட்சி மாறும் பட்சி
5
கதை: குட்டி கிருஷ்ணன்
படம்: ராஜு
பட்சி பிரபலமடைந்ததற்கு ஏற்ப அவரைப் பொதுக் கூட்டங்களுக்குப் பேச அழைப்பதும் அதிகமாகிறது.
தந்தையிஸம் பற்றிய இந்தக் கொள்கை விளக்கக் கூட்டத்திலே என்னைப் பேச அழைத்தது எனக்குப் பெருமை என்றாலும் உங்கள் திறமையைக் காட்டாது அதுவும்....
...சில வார்த்தைகள் சொல்லுவேன். சுருங்கச் சொன்னால் முதலாளித்துவப் பழத்தைப் பிழிந்து, சாற்றிலே கம்யூனிஸச் சர்க்கரை சேர்த்து, சர்வோதய ஐஸ் போட்டு ஃபாஸிஸக் கோப்பையில் தருவதே......
..எங்கள் தந்தையிஸம் என்று சிலர் கருதினால் அதில் தவறில்லை என்றாலும் அதுவே முற்றிலும் தந்தையிஸம் ஆகாது. ஆதலால் தான் உறவுக்குக் கை கொடுக்கும் போதே மான்யத்துக்குக் கை யேந்தலாம் என்றும்.....
....உரிமைக்குக் குரல் கொடுக்கும் போதே சர்வாதிகாரப்போக்கில் நடந்து கொள்ளலாம் என்றும் தீர்மானிக்கும் காலம், நீதி விசாரணை கோரி அதை விசாரணையில் ஒத்துழைக்காத மனப் பக்குவம் பெற்று, கணக்குக் கேட்கும் வேளை....
....நமது கணக்கின் கணிப்பு என்ன என்பதை நாமே புரிந்து கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கவில்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்!
இவ்வளவு அழகாகக் கொள்கை விளக்கம் செய்து பேசிய நமது தோழர் பட்சிக்குத் தெளிவுத் திலகம் என்று பட்டம் சூட்டுகிறோம்.
தெளிவுத் திலகம் வாழ்க!


பதவிக் கட்சிப் பிரமுகர்கள் பட்சி வெகு வேகமாகப் பிரபலமடைந்து வருவது கண்டு கவலைப்பட்டுத் தூது அனுப்புகிறார்கள்.
வணக்கம்; வாங்க!
அன்பரே, இன்று உமது பிறந்த நாள் என்பதை நீங்கள் சார்ந்திருக்கும் பிரிந்த கட்சி மறக்கலாம்....
.... ஏன் நீங்களே கூட அதை மறந்து விடலாம். ஆனால் உங்கள் நலனை என்றும் நாளும் நாங்கள் மறவோம். மாற்றான் தோட்டத்து முள்ளானாலும் சமயத்துக்கு உதவும் முள் நீங்க!
ஹி.. ஹி... ரொம்ப நன்றிங்க.
எதுக்கு நன்றி? இந்தத் தட்டுக்கு நீங்க நன்றி கூறுவதென்றால் நீங்கள் பதவிக் கட்சியில் இருந்த போது ஆற்றிய அளப்பரிய பணிகளுக்கு நாங்கள் எப்படி எந்த அளவுக்கு நன்றி கூறி மீள முடியும்?
அந்தத் தொண்டும் உழைப்பும் மீண்டும் பதவிக் கட்சிக்கே கிடைக்க வேண்டும்; நடுவில் ஏற்பட்ட இந்த முறிவு ஒரு கெட்ட கனவாக மறைந்து விட வேண்டும் என்பதே எங்கள் ஆசை.
அதுக்கென்னங்க மறந்துட்டாப் போச்சு. அதுக்கு ஒரு மருந்து இருக்கு, வாங்கணும் அவ்வளவு தான்.
அதன் விலை என்ன, ஐந்து ரூபாய் இருக்குமா?
இல்லீங்க, பத்துக்குக் குறையாது.
ஆ!
பத்தாயிரமா!

தொடரும்

வாயில் சுற்றுக் கதவின் தாழ் நீங்கும் ஓசை கேட்கிறது. பகற்போது இரண்டு மணி வெயிலில் யார் வருகிறார்கள் ?


நீலா வாயிற் பக்கம் வந்து பார்க்கிறாள். பட்டை உரிக்கும் வெயிலில் காலில் செருப்புக் கூட அணியாமல் வந்த உருவத்தை அருகில் நெருங்கிய பின்னரே அவளால் இனம் கண்டு கொள்ள முடிகிறது.

''வாங்க, வாங்க சுந்தரம்மா ? அடையாளமே தெரியலியே ? உடம்பு சுகமில்லாம இருந்தீங்களா? வாங்க, உட்காருங்க...''

முன்னறையின் விசிறியைப் போட்டு, புதிய வீட்டில் புதியதாக வாங்கிப் போட்டிருக்கும் கூடை நாற்காலியைக் காட்டி நீலா உபசரிக்கிறாள். சுந்தரம்மாவைப் பார்த்துப் பத்து மாசம் இருக்குமா ? வீடு கட்டிக் கொண்டு இடம் பெயர்ந்து வந்து பத்து மாசம்தானே ஆகிறது? பத்து வருஷங்களாகி விட்டாற் போன்று அவர் முகம் வயோதிகத்தைக் காட்டுகிறது. வயோதிகமா இது ? அரும் பிஞ்சு மாங்காயை எண்ணெய்ப் பசை காட்டாமலே உப்பில் போட்டுச் சுருக்கினாற் போல் முகம் வற்றி உலர்ந்திருக்கிறது. நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு ஒன்றுதான் அணிகலன். மூக்கிலிருந்த மூக்குத்தியையும், செவிகளில் தொங்கிய முன்னுளிய வெப்புக் கல் தோட்டையும் கூடக் காணவில்லை. கறுப்பும் வெளுப்புமான கூந்தலை மேலாக வழித்துக் கோதி முடித்திருக்கிறாள். ரவிக்கை தெரியாமல் போர்த்திக் கொண்டிருக்கும் சேலை அறுபதுக்கு நாற்பதாக நெய்த மலிவு விலை நாற்புடவை. மேலே முன் பூத்து, நீலம் மங்கியிருக்கிறது. ஒடுங்கி ஒடுங்கிப் போயிருக்கிறாள்.

ஞானோபதேசம்

ராஜம் கிருஷ்ணன்



''நல்ல வெயில்லே புறப்பட்டீங்களாம்மா? முந்தா நான்தான் அவங்க ஞானத்தைக் கோட்டை ஸ்டேஷனில் பார்த்ததாகச் சொன்னாங்க. நான் இந்த ஞாயிற்றுக்கிழமை சேகரையும் பானுவையும் கூட்டிக்கிட்டு வரணும்னிருந்தேன். பானு தான் கஸ்தூரி அக்கா, பூரணி அக்கான்னு சொல்லிக்கிட்டே யிருக்கு.''

''எங்கே, ஸ்கூலுக்குப் போயிருக்குதுங்களா?''

''ஆமாம். வர வாரத்தோடு மூடறாங்க. ஞானம் வேலைக்குப் போயிட்டிருக்கிறானு ? மாமாவுக்கு உடம்பு சரியில்லாம இருந்த தாமே ?''

''சர்க்கரைதான். ஆசுபத்திரியிலே பத்து நாட்கள் படுக்கை போட்டாரு. இப்ப தேவ லாம். சில்லுனு கொஞ்சம் தண்ணி கொண்டாயேம்மா.''

நீலா ''இதோ!'' என்று உள்ளே ஓடுகிறாள்.

பானையிலிருந்து கொண்டு வரும் நீரைச் சுந்தரம்மா மூணு தம்ளர் குடித்து ஆசுவாசம் அடைகிறாள்.

''தண்ணி, நல்லாயிருக்கேம்மா ? கேணித் தண்ணிதானே ?''

''ஆமாம்.... உள்ளே வாங்க, சுந்தரம்மா! அன்னைக்குக்கூட வந்திட்டு விருந்து சாப் பிடாம காலையிலேயே போயிட்டீங்க!'' என்று வீட்டினுள் அழைத்து எல்லாப் பகுதி களையும் காட்டுகிறாள்.

ஒரே வீட்டில் முன்னும் பின்னுமாகப் பகிர்ந்து கொண்டு எட்டு வருஷங்கள் வாழ்ந்த பிணைப்பு. ஏன்? நீலாவும் ராஜுவும் புது மணம் புரிந்த தம்பதியாக அந்த வீட்டுக்கு வந்தார்கள். ரயில் நிலையத்துக்கு அருகில் இருந்த அந்த வீடு ராஜுவுக்கு அலுவல கம் செல்ல வசதியாக இருந்தது மட்டுமல்ல; நீலாவுக்குத் தாய் வீட்டில் இருப்பது போன்ற ஒரு பாதுகாப்பும் இருந்தது. நீலாவின் தாய் வீடு ஒரு குக்கிராமம். பெற்ற தாயும் இல்லை. எனவே, அடுத்தடுத்த இரண்டு குழந்தைகளும் அந்த வீட்டில்தான் பிறந்து வளர்ந்தார்கள். அத்தகைய உறவை விட்டு நெடுந் தொலைவு வருவது முதலில் உவப்பாகவே இல்லை. எனி னும், ராஜுவின் அலுவலகத்தார் சேர்ந்து பெரிய மனைக்கட்டைக் கூட்டுறவு முறையில் வாங்கி, வீடுகள் கட்டிக் கொண்ட பிறகு பெயர்ந்து வரத்தான் வேண்டியிருந்தது. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு வீட்டுப் பொறுப்பைத் தனியாக ஏற்றுப் பழகுவது அவ்வளவு எளிதாக இல்லை.

சமையல் அறையில் ஒரு மணை போட்டுச் சுந்தரம்மாவை உட்காரச் சொல்லிவிட்டு நீலா பூரி மாவைப் பிசைகிறாள்.

''ஞானம் சொன்னானு சொன்னாங்க. பூரணிக்குக் கல்யாணம் செய்யலான்னு இருக்கீங்களாமே ? பூரணி வேலைக்குப் போயிட்டிருக்கலே ?''

''போறா. முன்ன தாட்சாயணி டீச்சர் பேறு காலத்துக்குப் போனப்ப ஒண்ணரை மாசம் போட்டுக் கொடுத்தாங்க. நடுவில் ரெண்டு மாசம் ஐம்பது ரூபாய் சம்பளம் வாங்கிட்டு நர்சரியில் வேலைக்கிருந்தா. இப்ப இந்திரா டீச்சர் லீவில் போயிருக்கா. இப் படியே பர்மனெண்ட் ஆயிடும். கமலி டீச்ச ருக்குக் கல்யாணம், வேலையை விட்டுட்டு வடக்கே போயிடும்னுதான் சொல்றாங்க.''

''ஆமாம், அவளும் பி.டி. எடுத்து மூணு வருஷங்களாகப் போகுதே? பானு பிறக்கறப்ப பி.டி.க்குச் சேர்ந்துதுல்ல?''

''ஆமாம். இந்த மூணு வருஷங்களில் சேர்ந்தாப்பலே ஆறு மாசம் கூட வேலை கிடைக்கலே. கஸ்தூரிதான் தையல் கிளா செடுக்கிறா, வெல்ஃபேர் சென்டரிலே. அதுவும் வேலை நிரந்தரமில்லே. எல்லாம் படிச்சாலும் தொழில் தெரிஞ்சாலும் கஷ்டமாயிருக்கு. எத்தினி பேரு சிபாரிசு, போட்டி? ஞானம் பிடித்தமெல்லாம் போக மூந்நூத்தம்பது கொண்டாந்து கொடுக்கிறான். ரயில் பாஸ் மூணு மாசத்துக்கு எடுத்திடறதாலே தெரி யலே. கையிலே எதினாலும் செய்து குடுத்திட றேன். மாமா பென்சன் எண்பது ரூபா வருது. அது அப்பிடியே வீட்டு வாடகைக்குப் போயி டுது. உங்க இடத்திலே வந்தவங்களுக்கு வாடகை நூத்தி இருபதா ஒசத்திட்டான். இது எப்படிக் கேக்கறாங்களோ தெரியலே...''

''மாமா பென்சன் வாங்கினதும் படப்பை ரோடிலே வாங்கியிருக்கிற மனைக்கட்டிலே ஒரு குச்சுப் போட்டுட்டுப் போயிடணும்னு சொல்லுவீங்களே, அம்மா, சிமெண்டெல் லாம் கூடக் கிடைக்கிதுன்கிறாங்களே?''

''அப்படித்தாம்மா சொல்லிட்டிருந்தேன். ஆனா இப்பக் கல்யாணம் செஞ்சி கொடுப்பது மேல்னு படுது...''

சுந்தரம்மாள் சட்டென்று நிறுத்திவிட்டு மௌனமாகிறாள். குடும்பத் தலைவர் மாநில அரசு அலுவலகம் ஒன்றில் எழுத்தராக வேலை பார்த்த நிலையில், மூத்தவளைக் கல்யாணம் செய்து கொடுத்த பின், அடுத்த பெண்கள் ஏதோ வருவாய் கொணர்ந்தாலே திருமணம் செய்து கொடுக்க முடியும் என்று படிக்க வைத்தார்கள். பட்டப் படிப்பும் ஆசிரியப் பயிற்சியும் எடுத்துப் பூரணி மூன்றாண்டுகளாக நிலையான வேலையில் அமரவில்லை. கஸ் தூரியை நுழை முகத்துக்கு மேலாகப் படிக்கச் சேர்க்க இயலவில்லை. இடையில் பையன் வேறு பி. காம். முடித்து இரண்டாண்டுகள் வேலையில்லாமல் இருந்து வேலைக்குச் சேர்ந் திருக்கிறான். குடும்பத்தில் ஒரு சிலும்பல் பெயரச் சத்தம் வந்ததில்லை. பெற்றோரும் மக்களும் ஒரு மனமான அன்பும் அடக்கமு மாக வாழ்பவர்கள். இல்லையேல், அந்த வருவாயில் சுற்றமும் பேணி, குழந்தைகளை யும் இவ்வளவேனும் முன்னுக்குக் கொண்டு வர முடியுமா? ஆனால், முன்னுக்கு வந்து விட்டார்கள் என்று இன்னமும் பளு இறங்க வில்லை. சுந்தரம்மாளின் முகம் அசைவற்ற கல்லாய், எங்கோ சூனியத்தில் ஒன்றினாற் போலிருக்கிறது.

''ஏம்மா? பூரணி வேலைக்குத்தான் ரெண்டு வருஷம் போயிட்டு வரட்டுமே? மாசாமாசம் வாடகை கொடுக்கிறதுக்கு ஒரு வீடுன்னு நிழலைப் போட்டுட்டா, ஏதோ காய்கறி போட்டுக்கிடலாம். ஒரு மாடு கூட வாங்கிக் கட்டிக்கலாம்னு சொல்லுவீங்களே?...''

''சொன்னேம்மா நீலா, அரிசியே ஒரு நாளைக்கு முக்கால் படிக்கு மேலே வடிக்க வேண்டியிருக்குது. தோசை, இட்டிலின்னு அது வேறே ஏதானும் பண்ணிக் கொடுக்க வேண்டியிருக்குது. போன மாசம் எங்க மூத்தாரு பையன் ஊரிலிருந்து ஏதோ வேலைன்னு வந்தான். ஒரு மாசம் இருந்தான். எல்லோரும் இத்தனைக்கும் வீட்டிலிருக்கிற பொண்ணுங்கன்னு கஸ்தூரியும் கூட, ஒரே தரம்தான் இலையிலே சோறு வைச்சிக்கிறோம். அஞ்சு ஆழாக்குக்குமேலே வடிக்க முடியலே. கால் படி பாலுதான் காலையிலே வாங்குறேன். தயிருக்குக் காப்படி. முடியலே. புரட்ட முடியாமச் சங்கடமாயிருக்கு. சிட்டு வேறே



அதிசயமான பேச்சு!

1947 ஆகஸ்ட் 14-ந் தேதி இரவு. புதுதில்லி பார்லிமெண்ட் கட்டிடத்தில் சுதந்திரம் பெற நள்ளிரவை எதிர்பார்த்து நேரு, மவுண்ட் பாட்டன் எல்லோரும் காத்திருக்கிறார்கள். இன்னும் சில நிமிடங்களே பாக்கி யிருக்கும் போது அங்குள்ள ஒருவருக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. யுத்த காலத்தில் கடிகாரத்தை ஒரு மணி தள்ளி வைத்தார்கள். ஆகவே நள்ளிரவு வர இன்னும் ஒரு மணி நேரம் காத்திருக்க வேண்டும் என்று தெரிந்தது. ஒரு மணி நேரம் என்ன செய்வது? ஒரு மனிதர் மேடை ஏறிப் பேச ஆரம்பித்தார். 45 நிமிடம் போனதே தெரியவில்லை. அவ்வளவு அழகாக அவர் பேசியதை எல்லோரும் மெய்மறந்து ரசித்தனர். அந்தப் பேச்சாளர்- ராதாகிருஷ்ணன். ஸ்டேட்ஸ்மன் - கேமார்

ஒன்னு சேர்ந்தேன். கடையில் எட்டு நூறுக்குக் கடன் ஏறிப்போச்சு.''

சுந்தரம்மா இப்படிப் பேசி ஒருநாளும் நீலா கேட்டதில்லை. அவர்களுடைய வீட்டில் இல்லாமை என்பதை அருகில் நெருங்கிப் பழகிய அவளால் கூட உணிக்க முடியவில்லை. அவளுடைய சேகரும் பானுவும், அவள் பருப்பும் நெய்யும் கலந்து பிசைந்த அமுதைத் தொடாமல் அவர்கள் வீட்டில் போய் உட்கார்ந்து, ''எனக்கு நெய் போடு கஸ்தூரி அக்கா கையிலே...சர்க்கரை இன்னும்...'' என்று ரகளை செய்வது அவள் செவிகளில் விழும்.

''பாரு கஸ்தூரி, இங்கே வைச்சிக்கிட்டுக் கெஞ்சறேன்,...'' என்று ஆற்றாமையோடு நிற்பாள்.

''நீ போ நீலா, குழந்தைங்க சாப்பிட்டா குறைஞ்சு போகுமா?'' என்பார்கள்.

இப்போது, அவள் பிரிந்து வந்த பிறகு, இந்நாள் அன்றாடச் சாப்பாட்டுக்குச் சாமான்களாகவா விற்கின்றன?

''பின்னே ஏம்மா அவசரமா மாமா பிராவிடண்ட் பணத்தைப் போட்டுக் கல்யாணம் செய்யணும்?''

''ஒருத்தி கல்யாணமாகிப் போனா வீட்டுச் செலவு குறையுமில்லையா? அரிசி, பால், எண்ணெய், எதைக் குறைக்க முடியுது? தலைக்கு எண்ணெய் புரட்ட அரைக் கிலோ தேங்காய் எண்ணெய் ஆகுது நீலா. சம்பா இச்சுட்டு வந்து போடுறான்னு இன்னும் ரெண்டு வருஷம் சோறு போடுறதுன்னா, அதுக்கேத்த மாதிரி இன்னும் விலைவாசி ஏறிட்டா? ஞானம் சொல்றதும் நியாயம்தான். போன மாசம் ஒரு இடம் வந்திருக்கு. பையன் சிமெண்ட் கம்பெனியில் அறுநூறு சம்பளம். பொண்ணுங்க இல்லே. இன்னும் ரெண்டு பையங்க படிக்கிறாங்க. அப்பா அம்மா இருக்காங்க. நல்ல குடும்பம். ஆனா நாமதான் எல்லாம் செஞ்சி போடணும். நாலு சவரன் செயின், ரெண்டு ஜதை வளையல் கேக்கறாங்க. அதுக்குத்தான் சீட்டுக் கட்டி வைச்சேன். அரிசி வாங்கியே தாளலே. ஏம்மா, பாபு ஜுவல்லரிலதானே முன்ன நீ வளையல் செஞ்சிட்டே? அதுமாதிரிவேணுமின்னுது பூரணி.''

''ஓ, செஞ்சி தருவான். கூலிதான் நூறு ரூபா கேட்பான்.''

''கேட்டா குடுத்துத்தான் ஆகணும். எட்டாயிரம் பிராவிடெண்ட் பணம் இருக்கு. அதுக்குள்ளே கல்யாணத்தை முடிக்கணும்... பின்னும் ஞானம் சம்பாதிக்கிறான். அவன் மேலே கடன் வாங்கிக்கூட வீடு கட்டிக்கலாம். ஒரு ஆள் குறைஞ்சா செலவு குறையும். அஞ்சாறாக்கு போடறேன். அறு ரூபா விக்கிது அரிசி. நிதம் ராத்திரி ஒரு குத்து சோறு கூட மிஞ்சறதில்ல மீதின்னு. மக்கி மடிச்ச கோதுமையைத் தின்னு வயித்துக்குச் செரிக்கிறதில்லே...'' முட்டிய கன்னத் தெலும்புகளுக்குக் கீழே கண்கள் ஆழ்ந்த பள்ளத்துக்குப் போய்விட்டன. இவ்வளவு ஆண்டுகள் அருகிலிருந்த நீலாவுக்கு அவர்கள் வீட்டில் எவ்வளவு அரிசி போடுவாங்கன்னு தெரிந்திருக்கவில்லை. இப்போது இல்லாமை பொங்க வருகிறது. சுந்தரம்மா பகலிலும் அரை வயிறு உண்டு, இரவில் அதுவும் இல்லாததால் இந்நிலைக்கு வந்து விட்டாளா?

உட்கார்த்தி வைத்து வயிறு நிறையச் சோறு போடவேண்டு மென்று நீலாவுக்கு ஓர் ஆதங்கம் மேலிடுகிறது. ஆனால் சுந்தரம்மா குழந்தையா? சொந்தத் தாயும் மகளுமாக இருந்தாக்கூட வயசுக்கேற்ற இரைகள் விழுந்து விடுகின்றனவே? நீலா ஒரே வீட்டில் குடியிருந்த நாட்களில் கூட அருமையாக ஏதேனும் பண்டம் செய்து கொடுத்தால் பெண்களுக்கும் கணவனுக்கும் பிள்ளைக்கும் கொடுத்துவிட்டு மாதிரிக்குத் தான் அவள் சுவைப்பாளாக இருக்கும். ஆனால் பெருகாலம், உடல் நலிவு, எல்லா நாட்களிலும் நீலாவை உட்கார்த்திச் சோறிட்டிருக்கிறாள்.

பூரிக்கென்று கிழங்கு வேக வைத்திருக்கவில்லை. குழந்தைகளும் அவளும் வெறும் சர்க்கரையுடன் உட்கொண்டு விடுவார்கள். இன்று பேசிக்கொண்டே கிழங்கை வேக வைத்துத் தாளிதம் செய்கிறாள். பூரிகளைப் பொரித்துத் தட்டில் வைத்து, ''சாப்பிடுங்கம்மா'' என்று வேண்டுகிறாள்.

''ஐயோ! எனக்கென்னம்மா இப்ப? குழந்தைகள் வரட்டும். எனக்கென்ன அவசரம் இப்ப?''

''பிள்ளைங்க வரட்டுமே? நீங்க சாப்பிட்டுத் தானாகணும். நீங்க காலையிலே எப்பவோ

சாப்பிட்டிருப்பீங்க. இவ்வளவு தொலைவு வெய்யில்லே வந்திருக்கீங்க...''

''அது கெடக்கட்டும்... நான் ஒண்ணுமே பகல்லே சாப்பிடறதில்லே. பன்னெண்டு மணிக்கு ஒரே நேரம் சாப்பிடறதோட சரி...''

இருட்டறையில் கைவிளக்கின் ஒளி சிந்துவது போன்று கண்களில் ஒளி மின்னுகிறது.

''மூத்த மக மாதிரின்னு சொல்றீங்க. சாப்பிட மாட்டேன்றீங்க...''

''சரி. உனக்கு ஏனம்மா வருத்தம்?'' என்று ஒரே ஒரு பூரியைச் சுந்தரம்மா உண்ணுகிறாள்.

குழந்தைகள் இருவரும் வந்து விட்டார்கள். தொடர்பு விட்டுப் பத்து மாசமானதில் அவர்களுக்கு நாணம் வந்து விட்டது.

''சேகர், பானு! கஸ்தூரி அக்கா கூட்டி வரச் சொன்னா. வரீங்களா? ஏன் கிட்ட வராம நிக்கிறீங்களோ?'' என்று குழந்தைகளைத் தழுவி முத்தமிடுகிறாள்.

''என்ன வெக்கம் இதுங்களுக்கு?''

''ஆமாம். நேத்துக்கூடச் சொன்னேன். லீவு விட்டா அங்கே போயி பிள்ளைங்களோட இருப்பேன்னு...''

சிரித்துக் கொண்டே குழந்தைகளுக்குப் பூரி கொடுத்து விட்டு நீலா ஒரு மூடி போட்ட பாத்திரத்தில் பூரிகளும் கிழங்கும் எடுத்து வைக்கிறாள்.

''வாம்மா, மாமாவும் கூட வெறிச்சினு பகலெல்லாம் படுத்துக்கிட்டிருக்காரு. குழந்தைங்க வந்தா கலகலப்பா இருப்பாரு.''

''நிச்சயமா வரேன். வீட்டைப் பூட்டிட்டு வருவதுதான் பயமா யிருக்கு. செத்த நேரம் பூட்டிருக்கூடத் திருடு போயிடுது.''

''ஆமாம். படி அரிசி ஆறு ரூபா விக்கிதே? என்னம்மா செய்ய? நான் வரட்டுமா? நேரமாயிட்டுது...''

அவள் பூரித் தூக்கை எடுத்து நீட்டுகிறாள்.

''என்னம்மா, இதெல்லாம்? எதுக்கு?''

''இருக்கட்டும். மாமாவுக்குக் குடுங்க...''

''ஐயோ, என்னம்மா? இதுக்கா போனேன்னு என்னைத் திட்டுவாரு.''

''ஏம்மா, எனக்கு உரிமை இல்லையா?''

''இருக்குது. மகமகன்னு சொன்னே. புது வீடு கட்டிக்கிட்டுப் போனுங்க, ஒரு சாமான் வாங்கிக் கொடுக்கலியேன்னு அதுவே சொல்லிக்கிட்டு இருக்காரு. சாண் ஏறினா முழம் சறுக்குது...''

''என்ன சுந்தரம்மா, இப்படியெல்லாம் நினைக்கிறீங்க? கொடுத்து வாங்கும் வரவு செலவுப் பிரியம்தானா கடைசிலே நீங்க? மாமாவை நான் ரொம்பக் கோச்சிட்டேன்னு சொல்லுங்க! நானே வந்து கோச்சிக்கிறேன்'' என்று தூக்கைக் கையில் திணிக்கிறாள். சுந்தரம்மாள் சிரிக்கிறாள்.

''வரேனம்மா, தம்பி வந்தாச் சொல்லு. கஸ்தூரி காலையிலே போனவ. வந்தாளோ, என்னவோ?...''

''தையல் கிளாசுக்குத்தானே போனா?''


''தையல் கிளாசுக்குத்தான். வெல்பேர் சென்டர்லே இருக்கிற அம்மாவுக்கு ஏதோ வெள்ளி விழாவோ, பாராட்டு விழாவோ வாம். வடக்கேந்து பெரியவங்க யாரோ வராங்களாம். அதுக்குத் தடபுடலா ஏற்பாடு நடக்குது. கலெக்ஷன் பண்ணிப் பிரசண்டு வாங்கிக் கொடுக்கறாங்க...''

''ஓ....''

''ஆமா. ஆளுக்கு இருபது ரூபா போடணும்னு கண்டிப்பாச் சொல்லிட்டான்னு. இதுவும் நாலு கிளாசெடுத்துவிட்டுக் கொடுத்திச்சு. இந்த மாசம் இதுக்குப் பைசா வரவு இல்லே. செலவுதான். ஆயிரத்தைந்நூறு ரூபாயாம். சந்தன மரத்திலே தேரும், கிருஷ்ண பரமாத்மா கீதோபதேசம் பண்ற அருச்சுனனுமாம். தேத்து பாத்து வைச்சு, பேர் ஊரெல்லாம் செதுக்க ஆர்டர் குடுத்திருக்காங்களாம். இவளே வந்து கருணை எடுத்திட்டு வர இட்டுப் போனா. நான் வரச்சே வீட்டிலே மாமாதான் இருந்தாரு. வரட்டுமாம்மா?'' நீலாவுக்கு மறுமொழி கூறத் தோன்றவில்லை.

வெறுமே தலையை ஆட்டுகிறாள். அவள் வாயிலிலேயே நிற்கையில் சுந்தரம்மாளின் உருவம் மெல்ல மெல்லச் சிறுக்கிறது.

அடுத்த இதழில்....



பல விஷயங்களைக் கூறும்போது கூறாத உட்பொருளும் அவற்றுக்கு உண்டு. சிரிக்க வைக்கச் சிலவற்றைத் தொகுத்தளிக்கும் பகுதி:

சொன்னதும் சொல்லாததும்



மணிவிழா காணும் திரு எஸ். டி. சுந்தரம், கவிஞர், நாடகாசிரியர், நடிகர், ரசிகர். அவர் வாழ்க்கையின் சுவையான சம்பவ மலர்களின் சரம்:

சுந்தரத்தின் மந்திரம்



சிறு கதை:

யாருக்காக அழுதான்?

டி. கே. டி. துரைராசன்

மலரும் பூவைப் பிள்ளை
வளர்ந்திடப் பலமான துணை—
இன்க்ரிமின்*

பட்டுப் போன்ற பாப்பாவின் வளர்ச்சியிலே—
முதலிரண்டு ஆண்டுகள்...மொட்டு விரியும்
நேரம்—சிட்டுப்போல் பறக்க சிறகு
முளைக்கும் பருவம்—இந்த முக்கியமான
பருவத்திலே உங்கள் கண்மணிக்குக்
கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர்
பாருங்களேன் அவன் வளர்ச்சியை!
பசித்துப் புசிப்பான்...உண்ணும்
உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக
மாறும். நலம் தரும் வைட்டமின்களோடு,
உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக மிக
அத்தியாவசியமான அமினோ அமிலம்,
லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.




டிராப்ஸ்—2 மாதங்கள் முதல்
2 வயது வரையில்
ஸிரப்—14 வயது வரையில்

இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும்
உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—Lederle ஸையனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு
*அமெரிக்கன் ஸையனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்



Sista's INC-364 C/75 Tam

கடைசிப்பக்கம்

கண்ணதாசன்

ஜீவாத்மாவின் ஆசைகள்!

அழகான சிறிய வீடு
  அடுக்காகப் புத்த கங்கள்
பழங்கால ஓவி யங்கள்
  பஞ்சனை குளிர்ந்த காற்று
தொழத்தக்க இளைய கன்னி
  தொண்டுக்கோர் சிறிய பையன்
எழிலான காகி தங்கள்
  எழுதுகோல் பழுதில் லாமல்!

பழுதிலாக் கண்ணன் பற்றிப்
  பாடல்நான் எழுத வேண்டும்
எழுதிநான் பாடும் போது
  இளையவள் ஆட வேண்டும்
எழுதருங் கலைகள் யாவும்
  எம்மிடம் பணிதல் வேண்டும்
இழைகூட நுழையா வாறு
  இருவரும் இணைதல் வேண்டும்!

சந்திரன் ஒளியில் தென்னை
  சாய்ந்திடும் நிலாமுற் றத்தில்
செந்தமிழ்ப் பெண்ணாள் மார்பில்
  'சில்'லென்று சாய்தல் வேண்டும்
மந்திரம் போட்டாற் போல
  மயக்கத்தில் கிடந்து மீண்டும்
அந்தியில் தொடர்தல் வேண்டும்
  ஆனந்தம் வளர்தல் வேண்டும்!

வறுமையில் லாமல் நீந்தி
  வளமான கோப்பை ஏந்தி
பெறுவது ஆத்ம சாந்தி
  பிறப்பில்நான் சூர்ய காந்தி!
பிறப்பையும் மறந்து, வஞ்ச
  பேதையர் தமை மறந்து
இறப்பையும் மறந்து, வாழ்வில்
  இன்பமே நிறைதல் வேண்டும்!

கொண்டுவந் தாரு மில்லை
  கூடையில் வாரி வாரி
கொண்டுபோ வாரும் இல்லை!
  குறையிலாச் சுவைகள் யாவும்
உண்டுபார்த் திருந்து, இந்த
  உலகத்தை மறந்தா லென்ன?
வண்டுக்கு நீதி என்றால்
  மனிதர்கள் செய்யக்கூ டாதோ!





Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

